[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1973 ஆகஸ்ட் 7

5 ரூபாய் வழங்கப்பட்டு வருகின்றது. இந்த விதியைத் தளர்த்தி தலைமையாசிரியர் உட்பட 3 ஆசிரியர்கள் பணியாற்றும் பள்ளிகளிலுள்ள தலைமையாசிரியர்களுக்கும் தலைமையாசிரியர் படியாக மாதம் ரூபாய் 5, 2—10—1973 முதல் வழங்கப்படும்.

தொடக்கப் பள்ளிகளில் தலைமையாசிரியர்களாகப் பணியாற்றும் சில பிரிவினருக்கு இப்பொழுது தலைமையாசிரியர் படி தனியாக வழங்கப்படுவதில்லை. அவர்களுக்கும் தலைமையாசிரியர் படியை 2—10—1973 முதல் தனியாக வழங்க அரசு இப்பொழுது முடிவு செய்துள்ளது.

நான் அறிவித்துள்ள இந்த 3 சலுகைகளாலும் அரசுக்கு ஆண்டுதோறும் இலட்சக்கணக்கில் செலவாகின்றபோதும், இந்நிலையில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு மேலும் ஊக்கமளிக்கும் பொருட்டு இச்சலுகைகளை வழங்க அரசு முன்வந்துள்ளது. இவற்றை ஆசிரியர் சமுதாயமும் ஆசிரியர் நலனில் அக்கறை உள்ளவர்களும் வரவேற்பார்கள் என்று நம்புகிறேன். (ஆரவாரம்.)

**(6) அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானமும், அமைச்சரவையின் தனி ஒரு கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானமும்.**

THIRU B. VENKATASWAMY: Sir, I move "That this House expresses its want of confidence in the Council of Ministers headed by Hon. Dr. M. Karunanidhi."

THIRU R. PONNAPPA NADAR: Sir, I second the motion.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவர் அவர்களே, "வாழ்க்கைக்குத் தேவையான இன்றியமையாப் பொருட்களின் விலை உயர்வுக்கு வழிவகுத்து, உணவு நெருக்கடிக்கு இடமளித்து, இவை காரணமாக மாநிலமெங்கும் கிளர்ச்சியை உருவாக்கியுள்ள இந்த அமைச்சரவையின் கொள்கைக்கு இப்பேரவை எதிர்ப்புத் தெரிவிக்கிறது." என்ற தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, I second the motion.

THIRU B. VENKATASWAMY: Sir, I have moved the no-confidence motion against the Ministry headed by Dr. M. Karunanidhi because the people of Tamil Nadu have lost

*1973 ஆகஸ்ட் 7]* [Thiru B. Venkataswamy]

their faith, their trust and their sympathy with D.M.K. Government. The Ministry has lost the confidence of the 4½ crores of people of Tamil Nadu because of its mis-rule for the last six years. It has been proved in the Dindigul election that the D.M.K. Government has lost its faith and sympathy among the people of Tamil Nadu. The Hon. Chief Minister knows it. I know they will say that they have a good majority here of 175 M.L.As. But what happened is that people outside have lost their faith in the Government because of their mis-rule for the last so many years.

The first point I want to stress is this. I charge this Government for the following reasons :—

There is too much of party interference in the day-to-day administration. It clearly shows how the position is. At the Collectors' Conference recently, the Chief Minister addressed them and said that they should not give room for party M.L.As interfering with them and they had no obligation to them. This clearly shows that there was previously interference by the party people in the administration. The day-to-day life of the common people has been paralysed and the poor people are not in a position to get anything without recommendation. That is what actually is taking place in Tamil Nadu.

Regarding corruption charges, corruption is rampant in Tamil Nadu. Some of our Opposition Party Leaders have placed the 'MURMA PEEDAI' (Laughter) or I think it is 'MURMA PEDAI'. (Renewed laughter). I do not know the details of it, because I do not know any of the specific charges. But you cannot deny that people are speaking about it and say that the D.M.K. Government is corrupt. You cannot deny that. Everyday we are hearing about it. I do not know how to prove it. But I request you to bear this in mind. Nobody gives a 'Lanja receipt' அப்படி ஏதாவது கொடுத்தால் கூட we can show it. But there is no such system and how can we prove this? It is highly impossible. But what the people say outside, we say here. And you have to rectify. There is no other go. People are speaking and I am saying it here.

[Thiru B. Venkataswamy] [1973 ஆகஸ்ட் 7

The second point is about soaring prices. Government is not in a position to control the prices. There is the unemployment problem, there is the industrial stagnation, there is the prohibition policy of the Government and the Educational policy of the Government.

I shall deal with party interference in administration. I can give some examples and I hope that will be sufficient. One is this. In my constituency, a D.M.K. party boss wanted a Headmaster of a school to give a pass to his son. The headmaster told him that the boy was the dullest in the class and if he were to give pass to that boy, he would have to give pass to all the boys and it will be a cent per cent pass in that class. Therefore, the headmaster said that he was sorry that he could not give pass to that boy. Then the D.M.K. party men threatened the headmaster and went away. Within eight days, that headmaster was transferred to some other place. Where is security for right men ? Where is security for the officers? If the officer of a department did not obey the D.M.K. party secretary or the M.L.A., he will be transferred immediately. When such is the case, what is the security for the officials ? I hope the Hon. Chief Minister will see that such things do not happen hereafter.

In the D.M.K. Government, there is no security of service for the officers. If the officers are not obeying the orders of the local D.M.K. secretary or D.M.K. M.L.A., they will be transferred immediately to some other place. Such being the case, I request the Hon. the Chief Minister to see that they are not interfering in the day-to-day administration and also to see that such things are not happening. I am very glad that the Hon. the Chief Minister has given some instructions to all the Collectors during the recent Collectors' Conference not to encourage such things. From the instructions that were given to the Collectors, I understand that the party members were previously interfering in the work of the District Collectors.

Then I would like to refer to the Police harassment. I would like to lay stress particularly on Thiru V. P. Chintan affair. When Thiru Chintan was going in a taxi to attend a meeting at

1973 ஆகஸ்ட் 7] [Thiru B. Venkataswamy]

Madhavaram, he was stabbed by * and he was admitted in the Hospital. I request the Hon. the Chief Minister to see that such things are not happening. Such things should be avoided as far as possible irrespective of the party affiliations of the leaders. Now there is a fear among the Opposition Party members even to express their feelings. There is no security for them in the D.M.K. Government. When Thiru Chintan, a Trade Union Leader, has been done like that, what will happen to the common man is not known. The Government should give protection to one and all irrespective of their party affiliations. I have also some information with regard to police harassment in some other places also.

**திரு. சி. ஆறுமுகம்:** பாயின்ட் ஆப் ஆர்டர் சார், சுதந்திராக் கட்சித் தலைவர் [*] என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். தி.மு. கழகத்தில் உறுப்பினர்கள்தான் இருக்கிறார்கள் [*] இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU B. VENKATASWAMY: It has appeared in the paper.

**திரு. சி. ஆறுமுகம்:** திராவிட முன்னேற்றக் கழகத்தில் உறுப்பினர்கள் தான் இருக்கிறார்கள் [*] இல்லை என்பதை திட்ட வட்டமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU B. VENKATASWAMY: This has appeared in the paper. That is why I am mentioning only what has appeared in the paper.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது வாதத்தில் சொற்களைக் கடுமையாக ஆக்காமல், உங்களுடைய வாதத்தைக் கடுமையாக ஆக்கிக் கொண்டால் நல்லதாக இருக்கும். சொற்களைக் கடுமையாக உபயோகிக்க வேண்டாம் என்று எல்லோரையும் கேட்டுக்கொள் கிறேன்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** [*] என்ற சொல்லைப் பயன்படுத்துவது அவ்வளவு நல்லதல்ல. அந்த அடிப்படையில், அந்தச் சொற்களை அடிக்கடி பயன்படுத்த ஆரம்பித்து விட்டால், அதே சொற்களை வைத்து மற்றவர்கள் தாக்க ஆரம்பித்தால் அவையினுடைய பாங்கு கெடுவதற்கான சூழ்நிலை ஏற்படும். ஆகவே, அப்படிப்பட்ட சொற்களைப் பயன்படுத்தாமல் இருப்பது நல்லது என்ற முறையை ஏற்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

THIRU B. VENKATASWAMY : I am only mentioning about the anti-social elements. I will change it as anti-social elements.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஆங்கிலத்தில் என்ன வார்த்தை வேண்டுமானால் மாற்றிச்சொல்லுங்கள். அந்த வார்த்தையைப் பயன்படுத்த வேண்டாம். [*] என்ற சொல்லை நிகழ்ச்சிக் குறிப்பிலிருந்து நீக்குமாறு நான் உத்தரவிடுகிறேன்.

THIRU B. VENKATASWAMY : Then I would like to refer to the Police repression in Periakuppam in Chingleput district. There was a lot of Police repression and people were harassed very badly. There was a lot of Police repression under the instructions of the Members of the Ruling Party, which has created panic and fear among the people there. The properties of the people were damaged and a hamlet was set fire. I understand that a book has been published with the caption 'Periakuppam Police Repression' and I am sure the Hon. the Chief Minister will be having a copy of that book. I hope that book has been published by Periannan Chettiar and Nandagopal Chettiar. I am happy the Hon. the Chief Minister is having a copy of that book. It will give all the facts about the Police repression in Periakuppam. It will reveal how the ladies have been ill-treated and how they have been taken into custody. It will reveal how the ladies have been ill-treated and harassed by the Police. I was told that they were harassed by the Police for the reason that they have not shown respect to the M.L.As. of the Ruling Party. I understand that they were told by the Police like that. If that is the case, what is the

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

security for the poor and innocent people in the village. They have also published some photographs as to how the ladies have been ill-treated and harassed by the Police.

Coming to the rape of a harijan girl in Mandanur in North Arcot district, I would like to say a few words. I regret to say this. What happened was this. A harijan girl was taken forcibly and raped while she was returning home after seeing a film. Due to the interference of the local M.L.A. or some other local DMK men, she was sent out from the hospital without a case being registered. In the DMK Government, there is no security for the ladies to move about. I charge this Government for its inefficiency. Therefore, I request the Hon. the Chief Minister to take stringent steps to avoid recurrence of such things in future. If there is no security for the ladies, then how is it possible for them to run the Government ? I hope the Hon. the Chief Minister will take appropriate steps to stop such things.

Then I woudl like to refer to industrial workers' unrest. I have already referred to the stabbing incident of Thiru Chintan. The Government has promised to take 400 affected people in Simpson Group of Companies. So far no action has been taken in this regard. I understand that Messrs. Addison and Company is also going to be closed. There is a company in Bangalore which can provide employment for 200 persons. What steps have been taken by the Government to absorb these 200 persons ? Taking into consideration all these facts, I feel the DMK Government is inefficient to rule the country.

Coming to the rice problem, I want to charge this Government for the following reasons.

Recently we had discussion about the rice problem in Kanyakumari district. That district is normally said to be surplus. I wonder when our State is a suprlus State how this scarcity has happened in Kanyakumari district? If the scarcity is in Dharmapuri district, I can understand. But how can there be scarcity in Kanyakumari district? It shows the inefficiency of the Government. The scarcity has happened in Kanyakumari district because the Government is not properly distributing the foodgrains

[Thiru B. Venkataswamy] [1973 ஆகஸ்ட் 7

to the people throughout the State. There are border areas in Coimbatore and Dharmapuri districts. Because the Government is not efficient in strengthening the check-posts, smuggling is going on in all these areas. I request the Hon. Minister to take stringent measures to stop such smuggling in border areas. Due to smuggling, people in border areas are suffering and they are not given their full ration. When the Revenue Minister came to our place, Hosur, the people represented about this. The Government must be in a position to feed them properly or else they must send them out to Mysore. The people in my area are asking me and the Government : " Why are you punishing us like this and it would be better if we were sent to Mysore State ".

THE HON. THIRU S. J. SADIQ PASHA : In Mysore also there is scarcity.

THIRU B. VENKATASWAMY : I am mentioning only what the people were telling. What I want to say is this. I request the Government to take the checkposts to the extreme border. Why should the people in the border areas alone should be penalised in such a way ? When we have surplus foodgrains, what is the necessity for rationing ? All these difficulties are experienced by the people. Therefore, I demand the resignation of the Dr. Karunanidhi Ministry for its failure in food policy.

Then I would like to refer to soaring prices of essential commodities. If you compare the prices that prevailed in 1965 and the prices that are prevailing to-day, you will know the correct position. You have to take into consideration the price indices from 1965 to 1973. The prices have increased four times, five times or even six times. Who is responsible for such rise in prices of essential commodities? I hope the Hon. the Chief Minister will answer this point. It clearly shows that the Government was responsible. It is due to the inefficiency of the Ministry, the people are suffering like anything. They are not able to get their things. They are not in a position to take even two full square meals. For example, I would like to quote the prices of certain essential commodities :

1973 ஆகஸ்ட் 7]

| | 1965-ல் ஒரு கிலோ விலை ரூ. | 1973-ல் ஒரு கிலோ விலை ரூ. |
|---|---|---|
| கடலை எண்ணெய் | 2 50 | 8 50 |
| தல்லெண்ணெய் | 2 80 | 8 40 |
| தேங்காய் எண்ணெய் | 5 25 | 11 00 |
| டால்டா | 5 50 | 10 00 |
| வெல்லம் | 1 25 | 2 50 |
| மஞ்சள் | 2 50 | 5 50 |
| சோடா மாவு | 0 80 | 2 00 |
| வெத்தயம் | 1 60 | 3 50 |
| பூண்டு | 0 80 | 4 00 |
| புளி | 1 25 | 4 50 |

Like that prices of several commodities have increased abnormally.

Now I shall refer to corruption charges. Just now I was telling that corruption is rampant everywhere. The Hon. Minister may ask : ' Are you in a position to prove it? ' I can say : ' Definitely not ' because there is no receipt as ' lanja receipt ' and we cannot get receipt from the people for ' lanjam '. We have to depend on what the people say.

But I want to ask this Government, whether they will swear in the name of Anna that they are not corrupt. I challenge them to do it and that is all I want. We are not in a position to prove it and we have no evidence to do it. I leave it to their conscience. I hope the Hon. Chief Minister will reply to this point.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : அண்ணை மேல் ஆணையிட்டால் அப்படியே எல்லாவற்றையும் நிறுத்தி விடுவார்களோ?

If by swearing in the name of Anna, that we are not corrupt, we can satisfy the Opposition Parties, we can dispose of the No Confidence Motion quickly.

THIRU B. VENKATASWAMY : So far as my party is concerned, if the Hon. Chief Minister is daring enough to say that, I will withdraw it.

[1973 ஆகஸ்ட் 7

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** நான் தயாராக இருக்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** சத்தியம் பண்ணுவதற்குள்ள இடம் அல்ல இது. நாம் பொறுப்பு உணர்ச்சியோடு பல காரியங்களை வாதாட வேண்டிய ஒரு அவையாக இருக்கிற காரணத்தினால், இம்மாதிரியான குறுக்கீடுகள் நல்லதாக இருக்காது என்பதை உணர்ந்து, இம்மாதிரியான குற்றச் சாட்டுகளைச் சொல்கிறபொழுது அவைகளை ஏற்று அல்லது அவைகளுக்குப் பதில் கொடுப்பது தான் சர்க்காரின் கடமை என்பதை வலியுறுத்திக் கூறிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, சுந்தரக் கட்சித் தலைவர் அப்படி ஒரு நிபந்தனை விதித்தார். அண்ணை மேல் ஆணையிட்டுச் சொன்னால் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைத் தாங்கள் வாபஸ் செய்கிறீரும் என்பது போல சொன்னார். நான் தயார் என்று சொன்னேன். குறுக்கிட்டது தாங்கள் தானே தவிர, வேறு ஒருவரும் அல்ல.

THIRU B. VENKATASWAMY : People are there to judge us. With regard to prohibition policy, from the very beginning the Swatantra Party has been telling that the Government should not scrap prohibition. When Rajaji was alive,—I came to understand—he went to the residence of the Hon. Chief Minister and requested him not to scrap prohibition. But he has never cared to do it. Only after the verdict of Dindigul, he is able to understand that. There is a proverb in Telugu—

* * * * *

Like that, the Government had not headed our advice then. But now I am happy that they have realised what Rajaji had told them a long time ago.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு உறுப்பினர் தெலுங்கிலே ஒரு பழமொழியைச் சொன்னார். அதைத்

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

1973 ஆகஸ்ட் 7]

தமிழிலே மொழிபெயர்க்கும்பொழுது அவ்வளவு நன்றாக இல்லை என்று கருதுகிறேன். ஆகவே, அதை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து எடுத்துவிடுவது நல்லது.

திரு. கே. ஏ. மதியழகன் : அழகாக மொழி பெயர்த்துக் கொள்வது அவரவர்களுடைய கருத்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு மொழிக் கருத்தை இன்னொரு மொழியில் மொழிபெயர்த்துச் சொன்னால் அது விகல்பமாக இருக்கும். முதல் அமைச்சர் அவர்களின் கருத்தை ஏற்றுக் கொள்வது நல்லது. ஆகவே, அந்தப் பழமொழியை இந்த அவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுகிறேன். தங்களுக்கு இன்னும் எவ்வளவு நேரம் வேண்டும் ?

THIRU B. VENKATASWAMY : Sir, I will take twenty more minutes.

Regarding educational policy, it has appeared in " The Hindu " dated 27th July 1973 that about 50 posts of professors, lecturers and readers have been vacant. I want to know the reasons why these posts are vacant. We are saying that there is student unrest. When the posts of lecturers and professors are vacant, what can the students do ? They think of doing some mischief. That is the reason for the unrest among students. I want to know why those 50 posts have not been filled up. In this connection, I want to point out that so much amount has been surrendered by the Education Department. When I was a Member of the Public Accounts Committee it was told that a sum of Rs. 30 lakhs has been surrendered. Why it has been surrendered ? That shows the inefficiency of the Ministry. When the people are heavily taxed and the Government are getting a large amount of money from the people, the Government are not in a position to spend it properly and achieve their objective. What is the use of having such a Ministry in power ? I demand the resignation of the Ministry. I hope the Hon. Chief Minister will consider this aspect of the matter.

As regards repression of students, what had happened at Clive Hostel ? Even now the Government want to repress the students. That is the attitude the Government are adopting now. Not only students but also the people they want to suppress. Even M.L.As.

have been arrested. What has happened in the Kanyakumari district ? Their request is genuine and it is a life and death problem for them. Every person has got a right to ask the Government to provide food. But what has happened there? A number of M.L.As. including my party M.L.A., Dr. Moses have been arrested. They have got every right to make the Government understand their duty to the people to provide food. But the Government have adopted repressive measures which will only have a reverse action and recoil on them. I warn this Government to avoid such repressive measures and provide food for the people.

Then I refer to the speech made by our Hon. Chief Minister at Tirunelveli and which has appeared in ' Murasoli '. He has stated that this Government are just like phosphorus and so long as phosphorus is inside the water it will be all right but when it is thrown out of the water, it will burn anything in its sorroundings. Just like that, he has threatened the people that if they do not vote for D.M.K. they will reap the consequences for their action in removing them from power, just like removing phosphorus from water. This shows that the Ruling Party is threatening people and it may be that our Hon. Chief Minister wants to behave like a dictator. So, that creates confusion and fear in the minds of the people.

Regarding the judiciary, the Government are interfering in its affairs. Even Thiru Palaniswami, a retired Judge of the High Court has given a statement in the newspaper that there is interference in the selection of District Judges by the Government and it is not made according to the merits of the candidates. If inefficient persons are appointed for these vital posts, how can we expect ' neethi ' ? It is highly impossible to get it. So there is interference not only in the field of judiciary but also in other fields.

11-00 மு.ப. Regarding State Autonomy, what has happened? We have already warned the Government not to support the 25th and 26th Constitution Amendment Bills but you have supported it. Now you are speaking about State Autonomy. You have voted for the 25th and 26th amendments of the Constitution. That is why we

have lost power. After having voted, you are now crying for State Autonomy. You are diverting the people's mind in a different direction by these slogans, mere slogans.

Our party has always been saying bad things as bad things and good things as good things. We have been supporting good things done by this Government, namely, incentive bonus to bus workers (தொழிலாளர்கள்) job oriented education and scrapping of prohibition.

Regarding food policy I appreciate the stand of the Hon. Chief Minister, because he has not accepted the State whoesale trading in foodgrains. I appreciate all good things.

In the matter of electricity, this Government has not at all acted in the proper manner. By their bungling with that problem, they have created so much unemploymet and our production has gone down in many fields because of power-cut and because of mismanagement by Government. I hope the Hon. Chief Minister or the concerned Minister will give an answer as to why this 'power-cut' was introduced. What is the action this Government has taken to provide more employment opportunities to the people ? What I find is that agricultural labour are being harassed. Pumpsets have stopped because of power cut. Many factories did not work because of power cut and there was so much of unemployment.

Coming to the Action Committee and Agriculturists' agitation, let me say that the Hon. Chief Minister does not know what is happening in the villages. The poor people who own a small house and some utensils (sembu)—those things are removed, because they had not paid their dues. The door is removed first by the authorities. What can the poor man do when the door is removed ? He has only a small shelter. That door is removed. Then what remains ? He has some utensils on which he would serve the food and then eat. He has of course nothing to eat even in these days. But that is a different problem. Even the sembu is taken away. Within one or two hours these things are done. What can the poor agriculturists do ? Such harassment is going on. Such stringent measures are being resorted to.

[1973 ஆகஸ்ட் 7

Eighty percent of our people are agriculturists. They are being subjected to this kind of treatment. By such actions, you are losing the faith of the people. I hope this Government would take proper action on the persons who are thus harassing the agriculturists. With all emphasis, I finally move this 'No Confidence' motion against this Government which has lost the faith and sympathy of the people because of its misrule. Thank you.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** மிஸ்டர் ஸ்பீக்கர் சார், இந்த அமைச்சரவையின் பேரில் நம்பிக்கை இல்லை என்ற தீர்மானத்தைக் கொடுத்திருப்பதை ஒட்டியே என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்த அமைச்சரவையின் கொள்கையைப் பார்த்தால் எந்த அளவுக்குத் தவறான கொள்கையை வகுத்திருக்கிறார்கள் என்பதை எடுத்துக்காட்டத்தான்

I have given notice of a 'disapproval motion' which I now move :

"That this House disapproves the policy of the Ministry which led to high prices of essential articles of life and to food crisis invoking widespread agitation."

THIRUMATHI T. N. ANANDANAYAKI : I second the motion.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** என்னுடைய தீர்மானத்திலே மூன்று பகுதிகள் இருப்பதை நான் ஆரம்பத்திலேயே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

முதலாவதாக அரசாங்கத்தினுடைய கொள்கையைப் பற்றி நான் சொல்ல வேண்டுமானால், இந்த அரசாங்கம் கொள்கையற்ற கொள்கையை வைத்திருக்கிறது என்றுதான் சொல்லவேண்டும். கொள்கையற்ற கொள்கை என்றால் அந்தந்த நேரத்தில் என்னென்ன கருதுகிறார்களோ அதை வைத்துக்கொண்டு ஏதாவது சமாளிப்பது என்ற முறையிலே அரசாங்கம் நடந்து கொள்கிறது என்பதுதான். அப்படி அவர்கள் செய்வதால்தான் கொள்கையற்ற கொள்கை உடையவர்கள் என்று சொல்கிறேன். அந்த அடிப்படையிலே பார்க்கும்போது, சில விவரங்களைக் குறிப்பிட விரும்புகிறேன்.

1973 ஆகஸ்ட் 7] [திரு. கே. டி. கே. தங்கமணி]

இப்போது விலைவாசி உயர்ந்துகொண்டே போகிறது. விலை வாசி உயர்ந்து கொண்டே போகிறது என்பதைப் பார்ப்பதற்கு அன்ருட நிகழ்ச்சிகளைப் பார்த்தாலே தெரியும். 'கைப் புண்ணுக்குக் கண்ணுடி தேவை இல்லே' என்பதைப்போல் அது நமக்குத் தெரியும். விலைவாசியைத் தடுக்க நடவடிக்கை எடுக்கவில்லையே என்று கேட்டால், உடனடியாக அவர்கள் பதில் சொல்வார்கள், 'விலைவாசியை மத்திய அரசு தான் குறைக்க வேண்டும்' என்று. மத்திய அரசாங்கத்தின் கொள்கை ஓரளவு இதற்குக் காரணம் தான். அதை நாங்கள் மறுக்கவில்லே. ஆனல் மத்திய அரசாங்கம் ஏதாவது ஒரு நல்ல கொள்கையை வகுக்குமானல் அதைக்கூட ஏற்றுக்கொள்ளத் தமிழ்நாடு அரசாங்கம் தயாராக இல்லே. அதற்கு ஒரே ஒரு உதாரணத்தை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

உணவுப்பொருள் மொத்த வியாபாரத்தை அரசே ஏற்று நடத்தவேண்டும் என்பது மத்திய அரசின் கொள்கை. அந்த வகையில் முதற்கட்டமாக, கோதுமை வியாபாரத்தை மத்திய அரசு ஏற்று நடத்தி வருகிறது. அதில் சில ஊனங்கள் இருக்கலாம்; இல்லே என்று சொல்லவில்லே. சமீபத்தில் பிரதம அமைச்சர் எதிர்க்கட்சித் தலைவர்களை எல்லாம் கூப்பிட்டு வைத்துப் பேசினர்கள். அப்போது அரிசி மொத்த வியாபாரத்தை அரசு ஏற்று நடத்த வேண்டுமென்று முடிவெடுத்திருக்கிறர்கள். அந்த முடிவைப்பற்றி இந்த ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள்— திராவிட முன்னேற்றக் கழகத்தினர் என்ன சொன்னர்களோ, எனக்குத் தெரியாது. அது ஆண்டவனுக்குதான் வெளிச்சம்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி**: உணவு மொத்த கேரள முதலமைச்சர் அச்சுத மேனன் என்ன கருத்தைத் கேரள முதலமைச்சர் அச்சுதமேனன் என்ன கருத்தைத் தெரிவித்திருக்கிறர்களோ, அந்தக் கருத்தின் சார்பிலே தான் இந்த அரசின் கருத்தை நாங்கள் தெரிவித்திருக்கிறேம்.

**திரு. கே. டி. கே. தங்கமணி**: இந்த மாதிரியான பதில் தான் வரும் என்று நாங்கள் எப்போதும் எதிர்பார்ப்பதுதான். இந்த பதில் எனக்குத் திருப்தி அளிக்காது. பிரதம அமைச்சர் வர்கள் உணவுப் பொருள் மொத்த வியாபாரத்தை அரசு ஏற்று

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1973 ஆகஸ்ட் 7

நடத்துவதுபற்றி கருத்துக்களைக் கேட்டபோது, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த செழியன் அவர்கள் 'இதை நான் மறுக்க முடியாது' என்று சொல்லி இருக்கிறார்கள். அந்த நிலையையாவது இங்கே நீங்கள் உருவாக்க வேண்டாமா? மத்திய அரசின் இந்தக் கொள்கையை எதிர்க்கமாட்டேன் என்று உங்கள் சார்பிலே செழியன் அவர்கள் அங்கே சொன்னார்கள். இங்கே நீங்கள் ஒருசில நாட்களுக்கு முன்னால் 25 சதவீதம் லெவி என்று வைத்திருந்ததைக் கூட கழற்றி விட்டுவிட்டீர்கள். இரண்டு நாட்களுக்கு முன்னால்தான் கழற்றி விட்டீர்கள் என்று நினைக்கிறேன். இப்படி உங்கள் கட்சிக்குள்ளேயே ஒருவருக் கொருவர் கருத்துக்கள் மாறுபடுகின்றன. ஒரு நிலையான கொள்கை இல்லை. ஆகவேதான் இப்படிக் குழப்பமான பதில்களும் அறிக்கைகளும் வருகின்றன.

அரிசியைப் பொறுத்தவரையில் ஒரு குறிப்பிட்ட விலையை நீங்களே நிச்சயம் பண்ணி முடியும். ஆனால் நீங்கள் அதைச் செய்ய மாட்டீர்கள். எல்லாவற்றிற்கும் மத்திய அரசுதான் என்று கையைக் காட்டிவிடுவீர்கள். உங்களால் நிச்சயம் பண்ண முடியும் என்று எங்களுக்கு நன்றாகத் தெரியும். சில நேரங்களில் இன்ன விலைக்குத்தான் அரிசி விற்கப்பட வேண்டுமென்று ஏற்பாடு செய்திருப்பதாகச் சொல்கிறீர்கள்; நிர்ணயித்த விலைக்குக் கொள்முதல் செய்வதாகச் சொல்கிறீர்கள். ஆனால் அதை சரியாக நடைமுறைப்படுத்துகிறீர்களா என்றால் இல்லை. ஒன்றை ஆற அமர யோசனை செய்து சொல்லவேண்டும்; சொன்னதை சரியாக அமுல்படுத்த வேண்டும். ஆனால் இங்கே அப்படி நடப்பதில்லை. ஒரு சீரான கொள்கை, ஒரு தெளிவான பார்வை உங்களுக்கு இல்லை. அதனால்தான் கொள்கையற்ற கொள்கையை உடைய அரசாங்கம் இது என்று நான் குறிப்பிடுகிறேன்.

அடுத்தபடியாக, விலைவாசி சம்பந்தமாக இன்று காலையில் இந்து பத்திரிகையில் ஒரு செய்தியைப் பார்த்தேன். அது ஓரளவு தமிழக அரசின் நிலையை தெளிவாக்குகிற காரணத்தினால், அதை உங்கள் உத்தரவோடு வாசிக்கலாம் என்று கருதுகிறேன்.

"The gloom is visible deepening, every day, with prices continually rising. The price rise in the last year has been unprecedented being of the magnitude of 40 per cent. The price

mechanism is in complete chaos. It was clear that the people themselves feel helpless and are indignant. They feel strongly that they are made the "suckers" and are being taken for a "joy ride" by a powerful combination of politicians, businessmen and beurocrats. They are impatient. People in power appear to hold the view that somehow the crisis will blow over."

இன்றைக்கு என்னுடைய பேச்சின் சாராம்சமே இதில் தான் அடங்கப்போகிறது. விலைவாசிகள் ஒரேயடியாக உயர்ந்திருக்கின்றன. விலைவாசிப் புள்ளியை எடுத்துப் பார்த்தால் மற்ற எந்த மாநிலத்தையும் விட மிக அதிகமாக உயர்ந்திருப்பது தமிழகத்தில்தான். உயர்வுக்குமேல் உயர்வாக உயர்ந்துகொண்டே போகிறது தமிழகத்தில். எதோ அமைதியாக இருப்போம் என்ற நிலைமை ஜனங்கள் மத்தியில் இல்லை. ஜனங்கள் கோபமாக இருக்கிறார்கள். கோபமாக ஏதாவது நடவடிக்கையில் இறங்க வேண்டும் என்றே நினைக்கிறார்கள். இந்த அரசையும், அரசின் செயல்களையும் நம்பியிருக்க முடியாது என்ற நிலைக்கு வந்திருக்கிறார்கள்.

என்னைக் கேட்கலாம், விலைகளை நிச்சயம் பண்ண எங்களுக்கு என்ன அதிகாரம் இருக்கிறது என்று. மத்திய சர்க்கார் உங்களுக்கு ஏதாவது சாமான்கள் கொடுத்தால், அவர்கள் என்ன விலைக்கு விற்கவேண்டும் என்று விலை நிர்ணயிக்கிறார்களோ, அந்த விலைக்கு நீங்கள் விற்கிறீர்களா? இன்றைக்கு கோதுமை வியாபாரத்தை மத்திய சர்க்காரே ஏற்று நடத்துக்கிறார்கள். அந்தக் கோதுமை தமிழகத்திற்குக் கொண்டுவரப்படவேண்டும். நமது சர்க்கார் என்ன சொன்னது? தமிழகத்திற்கு ஒதுக்கும் கோதுமையை சிவில் சப்ளை கார்ப்பரேஷனிடம் கொடுத்து விடுங்கள் என்றார்கள். சிவில் சப்ளை கார்ப்பரேஷன் தமக்கு ஒதுக்கப்படுகிற கோதுமையை 33 ஜெயன்ட் ப்ளவர் மில்களுக்குக் கொடுக்க வேண்டும். இந்த ப்ளவர் மில்களின் கப்பாசிடி 50 ஆயிரம் டன். நவம்பர் மாதம் நமக்கு 35 ஆயிரம் டன் கொடுக்கப்பட்டது. ஜூலையில் நமக்குக் கிடைத்தது 15 ஆயிரம் டன். அவர்கள் ஒரு டன்னுக்கு நிச்சயித்த விலை ரூ. 750. இந்த 750 ரூபாய்க்குக் கொடுத்த கோதுமையில் இருந்து இந்த ஜயண்ட் பாக்டரிகளிடம் இருந்து மைதாவும், ஆட்டாவும், சொஜ்ஜியும் தவிடும் வருகிறது. இந்த நான்கும் வந்தால் மைதா

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1973 ஆகஸ்ட் 7

க்விண்டால் 107 ரூபாய், சொஜ்ஜி க்விண்டால் 111 ரூபாய், ஆட்டா ஒரு க்விண்டால் 80 ரூபாய், தவிடு ஒரு க்விண்டால் 48 ரூபாய் விற்க விலை நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் இன்றையதினம் மைதா ஒரு க்விண்டால் ரூ. 116-க்கும், சொஜ்ஜி ரூ. 116-க்கும், ஆட்டா 80 ரூபாய்க்கு மிக அதிகமாகவும், தவிடு ரூ. 35-க்கும், ரூ. 48-க்கும் விற்கப்படுகிறது. ஆக 15,000 டன்னில் மைதா 8,250 டன்னும், சொஜ்ஜி 2,250 டன்னும், ஆட்டா 1,200 டன்னும், தவிடு 300 டன்னும் கிட்டத்தட்ட அந்த அளவுக்குக் கிடைத்துவிடுகிறது. இதன் மூலம் 13,27,500 ரூபாய் கிடைக்கிறது—முழு கணக்கு விவரத்தை வைத்திருக்கிறேன். சொல்லி நேரத்தை எடுக்க விரும்பவில்லை. எதைக் கொடுத்தாலும் சரி இப்படித்தான் செய்கிறீர்கள். மத்திய சர்க்கார் பேரிலே குறை சொல்லி என்ன பயன்?

உரத்தை எடுத்துக்கொள்ளுங்கள். உரம் ரூ. 51.50க்கு விற்க வேண்டும் என்று விலை நிச்சயம் பண்ணியிருக்கிறீர்கள். ரூ. 51.50-க்குத்தான் விவசாயிகளுக்கு உரம் விற்கப்படுகிறது என்று துணிவாகச் சொல்ல முடியுமா? ரூ. 75-க்கும், ரூ. 80-க்கும் விவசாயிகள் திண்டாடி வாங்கிக் கொண்டிருப்பது யாருக்குத் தான் தெரியாது. ஆகவேதான் இன்றைக்கு மக்களே உரம் ரூ. 51.50க்குக் கிடைக்கும்படியாகச் செய்வோம் என்று நடவடிக்கை எடுக்க ஆரம்பித்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** இன்றைக்கு என்னு உறுப்பினர் சொல்வது ஒருவேளை போன ஆண்டு இருந்த நிலைமையைப்பற்றிச் சொல்கிறார்களோ என்று நினைக்கிறேன். எங்காவது யாருக்காவது யூரியா ரூ. 51.50-க்குக் கிடைக்காமல் இருந்தால், இரண்டு மணி நேரத்தில் எல்லா இடத்திலும் கிடைக்கும்படியாகச் செய்யலாம். என்.பி.கே. பற்றியும் ஒன்றும் கஷ்டம் இல்லை. நான் கவனம் செலுத்திக்கொண்டிருப்பது என்.பி.கே. பற்றித்தான். யூரியாவைப் பொறுத்தவரையிலும் அதுவும் விவசாயிகளுக்கு நேரிடையாகக் கொடுக்கவேண்டு மென்று சொல்லியிருக்கிறோம். இடைத் தரகர்களை ரத்து செய் திருக்கிறோம்.

1973 ஆகஸ்ட் 7]

**திரு. கே. டி. கே. தங்கமணி:** நான் ஓவரால் நிலைமையைப் பற்றிச் சொல்லிக்கொண்டிருக்கிறேன். He is tinkering with the problem. It is neither here nor there. என்னுடைய பாயின்ட் என்னவென்று சொன்னால் உரத்திற்கு ஒரு விலையை நிச்சயித்தால் அந்த விலைக்கு எல்லா இடத்திலும் கிடைக்கவேண்டும். அத்தகைய உத்தரவாதம் இப்போது இல்லை. அதற்கான ஸ்தாபனமும் இல்லை. உங்களை அனுமதிப்பதற்கு உங்கள் கட்சியில் உள்ளவர்களே தயாராய் இல்லை என்பது என்னுடைய குற்றச்சாட்டு.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** குறிப்பாக மத்திய சர்க்கார் நிர்ணயித்த விலை யூரியாவுக்கு ரூ. 51.50 என்றால் அந்த விலைக்கு இப்போது எங்கே கிடைக்கவில்லை, எந்த ஊரில் கிடைக்கவில்லை என்று சொன்னால் உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ள முடியும். எனக்குக் கிடைத்த தகவல் குறிப்பிட்ட விலையில் விவசாயிகளுக்கு நேரிடையாகக் கொடுத்து, அவர்கள் பெற்றுக்கொண்டதற்குக் கையெழுத்தும் வாங்கி வருகிறார்கள் என்பதுதான். முன்போல இடைத் தரகர்கள் கூட இப்போது இல்லை.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** அமைச்சர் அவர்கள் தலையிடுவதை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. இந்த இலாக்காவிற்கு நான் இப்போதுதான் பொறுப்பேற்றுக் கொண்டேன், நான் இனிமேல் ஒழுங்காக இருப்பேன், இதற்கு முன்னால் விவசாய இலாக்காவில் ஊழல் இருந்தது என்பதைத் தான் மறைமுகமாகச் சொல்கிறார்கள்.

I was developing a point. Even where the Central Government have fixed the price, you have no machinery to distribute it to the people at the controlled price. For that I cited wheat. கோதுமையைப் பற்றிச் சொன்னேன். உரத்தைப்பற்றிச் சொன்னேன். இப்படித்தான் எல்லாம்.

இன்றைக்கு எசென்ஷியல் கம்மாடிடீஸ் ஆக்ட் என்பதாக மத்திய சர்க்கார் சட்டம் இருக்கிறது. அதன்கீழ் அத்தியாவசியப் பொருள்களுக்கான விலையை நிர்ணயம் செய்யக்கூடிய அதிகாரம் மாநில அரசுக்கு இருக்கிறது. உணவு தானியம் என்றால் அரிசி,

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1973 ஆகஸ்ட் 7

கோதுமை, கம்பு, சோளம், பருப்பு வகைகள், எடிபிள் ஆயில்-கடலை எண்ணெய், நல்லெண்ணெய், தேங்காய் எண்ணெய் டால்டா, காய்கறிகள், பொடாடோஸ், மண்ணெண்ணெய், காஸ் சிலிண்டர் இன்னும் சீனி, கருப்பட்டி, வெல்லம், வத்தல், புளி, சீரகம், தேங்காய், துணி, மருந்துகள். இவற்றின் விலையை நிச்சயம் பண்ண அதிகாரம் இருக்கிறது. சமீபத்தில் மகாராஷ்டிராவில் உருளைக்கிழங்கு கிலோ 3 ரூபாய்க்கு விற்றார்கள். உடனே இந்தச் சட்டத்தின்படி விலையைக் கண்டிரோல் செய்து கிலோ 1 ரூபாய்க்குத்தான் விற்கவேண்டும் என்று செய்தார்கள். கடைசியில் முதலமைச்சரும், மொத்த வியாபாரிகளும், சில்லறை வியாபாரியும், அரசியல் தலைவர்களும் கூடி விலை நிர்ணயம் செய்யப்பட்டது. அதன்படி ஒரு கிலோ இறைச்சி ரூ. 7-க்கு விற்கவேண்டும் என்று செய்தார்கள். அங்கே கிலோ ரூ. 7 என்றால் ஏற்கெனவே விலை அதிகமாக ஏறியிருந்த இடம் அது—இங்கே கிலோ ரூ. 4 இருக்க வேண்டும். அவர்கள் விலைக் கட்டுப்பாடு செய்ததுபோல இங்கே ஏன் செய்யவில்லை? அதற்கு மாறாக நீங்கள் இங்கே என்ன செய்கிறீர்கள்?

நீங்கள் செய்த முறையைச் சொல்கிறேன். அதன் விளைவுதான் கம்பம் நிகழ்ச்சி. அமைச்சர் அவர்களுக்கு எவ்வளவு தெரியுமோ, அவ்வளவு விவரம் எனக்குத் தெரியும். அண்டை மாநில எல்லையோரத்திலிருந்து 5 மைல் அளவுக்கு நீங்கள் பெல்ட் ஏரியா என்று வைத்திருக்கிறீர்கள். பெல்ட் ஏரியாவில் நியாய விலைக் கடைகளை வைத்திருக்கிறீர்கள். அந்த நியாய விலைக் கடைகளில் சப்ளை செய்யப்படும் அரிசிக்கு யார் விலை நிர்ணயம் செய்திருப்பது, நீங்கள் தானே? I think there is a peculiar theory சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் கமிஷனர், அதிகாரிகளுக்கு ஒரு பென்டாஸ்டிக் ஐடியா இருக்கிறது. அண்டை மாநிலத்தில் நமது எல்லையோரப் பகுதியில் அரிசி என்ன விலை விற்கிறதோ, அதே விலையை இந்த பெல்ட் ஏரியாப் பகுதியில் நிர்ணயித்தால் கள்ளக்கடத்தல் வெகுவாக இருக்காது என்று நினைக்கிறார்கள். அதன்படி இந்த பெல்ட் ஏரியா கம்பத்தில் உள்ள நியாயவிலைக் கடைகளில் கிலோ 1.90-க்கு விற்கவேண்டும் என்று விலை நிர்ணயம் செய்திருக்கிறார்கள். ஆகவேதான் கம்பம் தகராறு. எந்த அளவுக்கு உங்கள்

1973 ஆகஸ்ட் 7]

திர்வாகத்தில் ஊழல் இருக்கிறது என்பதற்குச் சொல்கிறேன். (The Hon. Minister for Food rose.....Sir, I will finish this point and then he can give his views. கம்பத்திலே நாங்கள் பொதுக் கூட்டத்திலே பேசி இருக்கிறோம். இங்கேயும் சொல்கிறோம். அங்கு ரூ. 100-க்குக் குறைந்து ஒரு குவிண்டால் வாங்கி, 'நோட்டிஃபைட் ஏரியா' என்று அதற்கு ஒரு பர்மிட் வாங்கி, உள்ளே போய், அந்த 'நோட்டிஃபைட் ஏரியா'வுக்குள்ளேயே உற்பத்தி இருக்கிறது—அங்கிருந்து லாரி லாரியாக ஏற்றி அங்கு அனுப்பக்கூடிய நிலைமையில் தான் ஒரு பர்மிட் வைத்துக்கொண்டு 5 லாரிகள் சென்றன. அவருக்கு 4 லாரிகளுக்கு பர்மிட் இருந்தது வாஸ்தவம்தான். லாரிகளை நிறுத்தினார்கள். நிறுத்திவிட்டு என்ன செய்தார்கள்?

விலை எப்படி நிச்சயம் ஆகிறது? ரூ. 100 குவிண்டால் தஞ்சையில் என்று சொன்னால், ரூ. 25 ஒரு மூட்டைக்கு வாங்குகிறார்கள். அதன் விலை ரூ. 125 ஆகிறது. கடைச் செலவுகள் எல்லாம் ரூ. 25. ஆக, ரூ. 150. அதிலே இன்னும் சில செலவுகள் சேர்ந்து ரூ. 175 ஆகிறது. அதுதான் சேல்ஸ் பிரைஸ். நான் பொறுப்போடு சொல்கிறேன், அந்த அதிகாரிகள் ரூ. 50 வரையிலும் வாங்கித் கொள்கிறார்கள். வாங்கிக் கொண்டு விலையை நிச்சயம் பண்ணுகிறார்கள். டி.எஸ்.ஓ., டி.ஆர்.ஓ.—இவர் சீக்கிரமாக ரிடையர் ஆகப் போகிறார். அவருடைய மகள் கல்யாணத்திற்கு யார் யார் என்ன என்ன கொடுத்தார்கள், எங்களுக்குத் தெரிய வேண்டும். அப்பொழுது என்ன என்ன செய்தார்கள், எங்களுக்குத் தெரியவேண்டும். நீங்கள் விலை நிச்சயம்....

**திரு. நா. வீராசாமி:** Sir, I am raising a point of order. தலைவர் அவர்களே, அங்கேயிருந்த அதிகாரிகள் ஒரு குவிண்டாலுக்கு ரூ. 50 வாங்கிக்கொண்டு அனுமதிக்கிறார்கள் என்று உறுப்பினர் கூறுகிறார். நம்முடைய சட்டமன்றத் தினுடைய நடவடிக்கைகள் விதிகளின்படி அதிகாரிகளைப் பற்றி குற்றம் சாட்டிப் பேசக்கூடாது. அப்படிப் பேசும்போது ஆதாரம் இல்லாமல், எந்த அதிகாரி, எந்த இடத்தில் என்ன வாங்கினார் என்று குறிப்பிட்டுச் சொல்லாமல், பொதுவாக ஒரு அதிகாரி ரூ. 50 ஒரு குவிண்டாலுக்கு வாங்கினார் என்று சொல்வது இந்த மன்றத்தினுடைய மரபாக இல்லை. ஆகவே, அதற்கு மரபாகத் தாங்கள் தீர்ப்புத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[1973 ஆகஸ்ட் 7

**திரு. மு. முத்தையா :** பெயர், ஊர், இன்னார் என்று எழுதிக் கொடுத்தால் கூட நடவடிக்கை எடுக்கவில்லை. மானாவாரி பருத்தி சாகுபடி திட்டத்தின்கீழ் கோயில்பட்டியில் நடந்ததைப்பற்றி முன்பே எழுதிக்கொடுத்தேன். அதுபற்றி இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதிகாரிகளைப்பற்றி கூறக் கூடாது என்று சொல்ல முடியாது. அதிகாரிகள் செய்கிற தவறுகளைப்பற்றிச் சொன்னால் அமைச்சர்கள் பதில் சொல்வார்கள். ஆகவே அதிகாரிகளைப்பற்றி பேசக் கூடாது என்பதல்ல. அதிகாரிகளைப்பற்றியிருந்தாலும், மற்றவர்களைப் பற்றியிருந்தாலும் ஆதாரத்தோடுச் சுட்டிக் காட்டவேண்டும். அதிகாரிகளைப் பற்றி யார் குற்றம் சாட்டுகிறாரோ அவர் அதற்குப் பொறுப்பேற்க வேண்டும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** இந்த மாதிரி அதிகாரிகளைப் பற்றிப் பேச சட்டசபை அங்கத்தினருக்கு ஒரு 'இம்யூனிட்டி' இருக்கிறது. இந்த மாதிரி தவறுகள் நடக்கின்றன என்று சொல்லலாம். நீங்கள் விஜிலன்ஸ் கமிஷன் போட்டு விசாரிக்க வேண்டும். சொல்லவே கூடாது என்றால், உண்மையை வெளிக் கொண்டுவர வேறு வழியே இல்லை. சட்டசபைப் பிரதிநிதிகள் இவைகளைச் சொல்லவேண்டும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** உங்கள் சூலிங்குக்கு நான் தலை வணங்குகிறேன். பொதுவாக, அதிகாரிகளைப்பற்றி ஏதாவது சொன்னால், அந்த அமைச்சர் பதில் சொல்வார். நான் சொம்பத் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன், கம்பம் என்று சொல்லியிருக்கிறேன். மதுரை டி.ஆர்.ஓ. என்று சொல்லியிருக்கிறேன். 2, 4 மாதங்களுக்கு முன்பு அவர் மகள் திருமணம் அவருடைய வீட்டில் நடந்தது என்று சொல்லியிருக்கிறேன். வேண்டுமென்றால் விஜிலன்ஸ் போட்டுப் பாருங்கள், யார் யார் எவ்வளவு எவ்வளவு கொடுத்தார்கள் என்று. விலையை அதிக மாக்கக்கூடிய ஒரு ஏற்பாட்டிற்கு இதுவும் காரணமாக இருக்கிறதா என்பதை அவர்கள் பரிசீலித்துப் பார்க்கட்டும்.

1973 ஆகஸ்ட் 7] [திரு. கே. டி. கே. தங்கமணி]

இதே மதுரை மாவட்டத்திலே ஒரு குறிப்பிட்ட தாசில்தார் ஒரு மூட்டை சீனி கொடுக்கிறபோதெல்லாம் ரூ. 100 கேட்கிறார் என்று நான் மட்டுமல்ல, எல்லோரும் கூறுகிறார்கள். அவரை இப்பொழுது 'ரிசப்ஷன் தாசில்தார்'-ஆக வைத்திருக்கிறார்கள். அவர் சொல்கிறாராம், 'தங்கமணி கிளப்பியதால் நான் அதை விடப் பெரிய ஆளை வைத்திருக்கிறேன். நான் சேர்த்தது சேர்த்ததுதான். என்னை ஒன்றும் செய்ய முடியாது', என்று. அதிகாரிகள் மீது எனக்கு என்ன பகை? இவரையாவது நான் பார்த்திருக்கிறேன். முந்திய அதிகாரியை நான் பார்த்ததே இல்லை.

விலைகள் இன்றைக்கு உயர்வதற்கு சாதாரணமாக இருக்கக் கூடிய நிலையைவிட அதிகாரிகள் செய்யக்கூடிய காரியங்களும் காரணமாக இருக்கின்றன என்ற காரணத்தால்தான் நான் இந்த விஷயத்தை எடுத்துச் சொன்னேன். ஆகவே, விலையை நீங்கள் நிச்சயம் பண்ணுகிறபொழுது, இந்தக் கோளாறுகள் பெருகியிருக்கின்றன.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தவறுகள் செய்கின்ற அதிகாரிகளுக்காக நிச்சயமாக நான் வக்காலத்து வாங்கமாட்டேன் என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கமணி அவர்கள் அறிவார்கள். தாசில்தாரைப்பற்றிச் சொன்னார்கள், எடுக்கப் பட்ட நடவடிக்கையைச் சொன்னார்கள்; டி.ஆர்.ஓ. பற்றிச் சொன்னார்கள். அவருடைய மகள் திருமணத்திற்காக யார் யாரோ பரிசுகள் கொடுத்தார்கள் என்று சொன்னார்கள். இந்த அவையிலில்லாவிட்டாலும். அவைகளைப்பற்றித் தனிப்பட்ட முறையிலே என்னிடத்தில் எடுத்துச் சொல்வார்களானால் ஏற்ற நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அவைகளைப்பற்றி அவர்கள் சொல்லாவிட்டாலும், நிச்சயமாக இப்பொழுது சொன்ன விஷயங்களைப்பற்றி விசாரித்து நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் எனக்கு வலுவலிக்கின்ற வகையிலே மற்ற விவரங்களையும் எனக்குத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** இந்த எல்லைகளில் இருக்கக் கூடிய நிலைமைகள் மட்டுமல்ல. இன்றைக்குத் தமிழ்நாடு, வேங்கடசாமி அவர்கள் தெரிவித்ததைப்போல,

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1973 ஆகஸ்ட் 7

உணவைப் பொறுத்த அளவிலே தன்னிறைவு பெற்ற மாநிலமாக இருக்கிறது. அப்படித் தன்னிறைவு பெற்றிருக்கும்போது சொம்பு சொம்ப லேசாகச் சொல்கிறார்கள். கோள் மாநிலத்து அமைச்சர் கூறப் பற்றிச் சொன்னார்கள். எங்களுக்குக் கொஞ்சம் தன்னிறைவு ஏற்படட்டும், பிறகு செய்கிறோம் என்று சொன்னார்கள். தன்னிறைவு பெற்ற மாநிலத்திலே, இந்தக் கொள்கையை ஏற்றுக் கொள்ள இங்கே தயாராக இல்லை. மதியழகன் அவர்கள் இங்கே சொன்னார்கள்—

The Government is neither producer-oriented nor consumer-oriented, but middlue-man-oriented; therein lies the source for corruption.

என்று. அது சொம்பப் பொதுப்படையாகச் சொன்னது. பல முறைகளிலும் அது பொருத்தமாக இருக்கிறது.

மக்கள் வாங்கக்கூடிய சாமான்கள் எவை எவையெல்லாம் விலை ஏறியிருக்கின்றன என்பதற்கு நான் வேண்டுமானால் உதாரணம் தருகிறேன். சிமெண்ட் ஒரு மூட்டை ரூ. 12½. ஆனால் ரூ. 12½-க்கு விளியோகம் செய்ய நீங்கள் உத்தரவாதம் செய்ய முடியாது. ரூ. 25-க்குக் குறைந்து சிமெண்ட் கிடைக்கிறதா? அதுதானே இன்றைக்கு நிலைமை? இல்லாததை ஒன்றும் நான் சொல்லவில்லை. எத்தனை உதாரணங்களை வேண்டுமானாலும் என்னால் சொல்ல முடியும். இதற்காக விலை நிர்ணயம் பண்ணுகிற ஒரு கமிட்டி போட வேண்டும். சர்வ கட்சிகளைக் கொண்ட கமிட்டி போடலாம். மக்களுக்குத் தேவையான சாமான்களின் விலையை நிர்ணயிக்கலாம். சீனி கிலோ ரூ. 2.25, ரூ. 2.15 என்று நினைக்கிறேன். மத்திய சர்க்கார் ஒதுக்கியிருக்கிற 9,000 டன்களையோ அல்லது 10,000 டன் களையோ ஒரு கிலோ ரூ. 2.15 என்று கண்டிப்பாக நாங்கள் எல்லோ ருக்கும் கொடுப்போம் என்று இந்த அரசு சொல்லட்டும். சொல் வதற்கு உங்கள் கையிலே என்ன இருக்கிறது? 20 மூட்டைகளைக் கொடுத்தால், 2 மூட்டைகளைத் தவிர 18 மூட்டைகள் பதுங்கிச் சென்றிருக்கின்றனவே. இதுதான் இன்றைக்கு உத்தரவாதம் எற்பட....

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** பதுங்கி இருந்தால் எங்கே பதுங்கி இருக்கிறது? யாருக்குத் தெரியும்? இவருக்குத் தெரியுமா, பதுங்கியிருப்பது? 18 மூட்டைகள் எங்கே போயிருக்கிறது? இவருக்குத் தெரிந்தால் சொல்லலாமே.

1973 ஆகஸ்ட் 7]

**திரு. கே. டி. கே. தங்கமணி:** ஓரிடத்திலே இருந்தால் சொல்லலாம். It has become a general phenomenon. It is everwhere. எத்தனை இடத்தை நாங்கள் சொல்வது, எத்தனை இடத்தைப் போய் பார்த்து நாங்கள் நடவடிக்கை எடுப்பது? இதற்காகத்தான் அரசு நடவடிக்கையைவிட மக்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற நிலைக்கு வந்திருக்கிறோம்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** மக்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்ற கருத்தை இங்கே சொன்னார்கள். அதை நாங்கள் வரவேற்கிறோம். அப்படி மக்கள் நடவடிக்கை எடுப் பதற்கு பதுங்கி இருக்கிற இடங்களைச் சுட்டிக்காட்டி, உடனே அதிகாரிகள்—தங்கமணி அவர்கள் குறிப்பிட்ட தவறான அதிகாரிகள் அல்ல—அவற்றைக் கைப்பற்ற வேண்டும். அப்படிப் பதுங்கியிருக்கிற 4 இடத்தைச் சொன்னால் 4 பேரைக் கைது செய் தால், 400 பேர் தவறு என்று செய்யாமலிருப்பார்கள். அதற்கு எதிர்க்கட்சித் தலைவர் ஒத்துழைப்பாரா?

**திரு. கே. டி. கே. தங்கமணி:** ஒத்துழைப்பாரா என்று கேட்கிறார். அதைக் கொள்கையாக வைத்து நாடு பூராவும் போராட்டம் நடத்துகிறோம். கம்பத்தில் நடந்த சம்பவம் இன்றைக்கு எந்தக் கட்சியும் தூண்டிவிட்ட விஷயம் அல்ல. நேற்று என்னை கரெக்ட் பண்ணுவதற்காக உணவு அமைச்சர் அவர்கள் எழுந்தார்கள். உண்மையிலேயே 5 லாரிகளுக்கும் பர்மிட் இருக்கிறது. 4 லாரிக்கு பெர்மிட் இல்லாமல், பாருங்கள் ஒரே ஒரு பெர்மிட்தான் பதிவு செய்திருக்கிறார்கள். ஒரே ஒரு பெர்மிட் அங்கே வைத்திருக்கிறார்கள். 4 டிரிப்புகளுக்கு, 5 டிரிப்பு களுக்கு ஏற்பாடுகள் இருக்கின்றன. நமது உணவு அமைச்ச ருக்கும் தெரியும், இங்கே இருக்கக்கூடிய அந்தக் கட்சியைச் சேர்ந்த சட்ட அமைச்சருக்கும் தெரியும். அப்படி ஏற்பாடு செய் கிறார்கள் அப்படி ஏற்பாடு செய்யும்போதுதான் உடனடியாக கலெக்டருக்குச் சொன்னார்கள், போலீசுக்குச் சொன்னார்கள், கோபால் அவர்கள் பேசும்பொழுது சொல்வார்கள் என்று நினைக் கிறேன். சொன்னபிறகு விளியோகம் செய்யப்பட்டது. விளியோகம் நடக்கின்றபொழுது திடீரென்று லத்தி சார்ஜ் செய் தனர். ஒவ்வொரு கட்சித் தலைவராகப் புரட்டிப் புரட்டி

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1973 ஆகஸ்ட் 7

அடித்திருக்கிறார்கள்—விவரம் வைத்திருக்கிறேன்—அதற்கு என்ன அவசியம் ஏற்பட்டது? அப்படிச் செய்தால், ஜனங்களுக்கு நியாயம் வழங்கினால், எங்களுடைய தடியடிப் பிரயோகம் இருக்கும் என்றுதான் உங்களுடைய செயல் படுகிறது.

இந்து பத்திரிகையிலே சொல்லியுள்ள மாதிரி, The people are angry. கோபம் மட்டுமல்ல, கோபத்தோடு எதையாவது செய்ய வேண்டும். நான் அங்கே ஓர் அம்மையாரிடத்தில் கேட்டேன், 400 மூட்டையை இறக்கி இப்படிச் செய்தீர்களே, இது நியாயமா என்று. 4 பேர் போய் போர்சாக நிறுத்தினால்தான் கொள்ளை. 400 பேர் போய் நிறுத்தி பணத்தை வசூலித்துக்கொண்டு வினியோகிப்பது எப்படிக் கொள்ளையாக இருக்க முடியும்? என்று
மு.ப 11-30 கூறுகிறார்கள். மக்களே இன்றைக்கு அதிகாரத்தைக் கையிலே எடுத்துக்கொண்டு அரசு செய்யத் தவறியதை மக்கள் செய்வதில் என்ன தவறு என்று கேட்க விரும்புகிறேன். அதை எந்த அளவுக்கு இந்த மன்றத்தினர் ஏற்றுக்கொள்வார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. அதை எந்த அளவிற்கு இந்த மன்றத்திலே உள்ள எல்லோரும் ஏற்றுக்கொள்கிறார்களோ எனக்குத் தெரியாது. அந்த அளவுக்கு நிலைமை வந்துவிட்டது என்பதை எடுத்துக்காட்டுவதற்காகத்தான் சொல்கிறேன்.

விலைவாசியைப்பற்றி மற்றவர்களும் பல விஷயங்களைச் சொல்வார்கள் என்று நினைக்கிறேன். நம்முடைய முதலமைச்சர் பிரசங்கம்பற்றி அவர்கள் சொன்னார்கள். நான் திண்டுக்கல் தேர்தலுக்குள் போக விரும்பவில்லை. திண்டுக்கல் ஒரு தீர்ப்பைக் கொடுத்திருக்கிறது. இதே மன்றத்திலே அந்தத் தேர்தலில் ஒரு லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் ஜெயிப்போம் என்ற சவால் எல்லாம் விடப்பட்டது. ஆனால் மக்கள் ஒரு நல்ல முடிவைக் கொடுத்துவிட்டார்கள். அங்கு அந்தத் தேர்தலையொட்டி நடந்த சில சம்பவங்களைக் குறிப்பிட விரும்புகிறேன்.

அங்கே முதலமைச்சர் செய்த பிரசங்கத்தைப்பற்றி—திருமங்கலத்திலே 17 ஆம் தேதி இரவு 11 மணிக்கு அவர் நிகழ்த்திய பிரசங்கம்—குறிப்பிட விரும்புகிறேன். அந்தப் பிரசங்கத்தை நானே வீட்டிலிருந்தே கேட்டேன், அதுதான் ஒரு முதலமைச்சர் தேர்தல் காலத்திலே நிகழ்த்தவேண்டிய பிரசங்கமா? சென்ற மாதம் 7 ஆம் தேதியன்று புதுவையிலே

1973 ஆகஸ்ட் 7] [திரு. கே. டி. கே. தங்கமணி]

அண்ணு அவர்களின் சிலையைத் திறந்துவைத்து பிரசங்கம் செய்தார். அதுதான் அந்த இடத்திலே செய்யவேண்டிய பிரசங்கமா, ஒரு முதலமைச்சர் செய்யவேண்டிய பிரசங்கமா அது என்று கேட்க விரும்புகிறேன். தி.மு.க. ஆட்சியிலே இருக்கின்ற போது, ஆளும் கட்சியாக இருக்கிறவரையில்தான் தண்ணீரிலே போடப்பட்ட பாஸ்பரஸ், மறந்துவிடாதீர்கள், ஆட்சி பீடத்திலே இருந்து இறங்கினால் அது கூரைமீது போடப்பட்ட பாஸ்பரஸ் ஆகிவிடும் என்று பேசியிருக்கிறார்கள். இது ஒரு முதலமைச்சர் செய்யக்கூடிய பிரசங்கமா?

அது மட்டுமல்ல. 23-3-1973 ஆம் தேதியன்று நெல்லையிலே ஒரு பிரசங்கம். நெல்லைப் பிரசங்கமாவது புத்திசாலித்தனமாகப் பேசியதாக இருக்கலாம். ஆனால் ஆசிரியர் கூட்டணி என்று ஒன்று இருக்கிறது, ஏற்கெனவே ஒரு ஆசிரியர் கூட்டணி இருக்கிறது. நான் இந்த நேரத்திலே ஒன்றைச் சொல்லிவிட விரும்புகிறேன். தொழில் சங்கங்களையும், பாடுபட்டு உழைக்கும் மக்களுடைய ஸ்தாபனங்களையும் இந்த அரசினுடைய அதிகாரத்தை வைத்துக்கொண்டு திட்டமிட்டு உடைக்கிறார்கள் என்று நான் குற்றம் சாட்டுகிறேன்.

சிம்சனில் ஏற்கனவே ஒரு சங்கம் நடந்து வந்தது. அது எங்களுடைய சங்கம் அல்ல. காங்கிரஸ் கட்சிக்காரர்களின் சங்கம். அதிலே உள்ள உறுப்பினர்கள் 18 ஆயிரம் பேர்கள், அத்தனை உறுப்பினர்களை வைத்து பல ஆண்டுகளாக நல்ல முறையிலே நடந்து வந்த சங்கமாக அது இருந்தது. அரசு தன்னுடைய அதிகாரத்தை வைத்து இன்றைக்கு எந்த அளவிற்குச் செய்து இருக்கிறார்கள் என்பதைப் பார்க்கிறோம். ஆசிரியர்கள் எல்லாம் ஆசிரியர் கூட்டணி என்று வைத்திருக்கிறார்கள். சில சமயங்களிலே அவர்களுக்கு ஆளுங்கட்சியைப் பிடிக்கலாம், பிடிக்காமல் இருக்கலாம், அதைப்பற்றி நான் சொல்லவில்லை. மூன்று சங்கங்களை வைத்து ஒன்று சேர்க்கிறோம் என்று சொல்லி திருவண்ணாமலையிலே அவர்கள் என்ன பேசினார்கள் என்பதைப் பார்க்கவேண்டும்—அவர்கள் கட்சிக்குள்ளே என்ன செய்கிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை—எங்கள் கட்சியிலேயிருந்து என்னுடைய தலையிலே கொண்டுவந்து ஒரு கிரிடத்தை வைத்தால் நான் வேண்டாம் என்றுதான்

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1973-ஆகஸ்ட் 7

சொல்வேன், மன்னர் காலம் போய்விட்டது, மன்னர் வைத்ததை என் தலையிலே வைக்கவேண்டாம் என்றுதான் சொல்வேன். ஒவ்வொரு கட்சிக்கும் ஒவ்வொரு கொள்கை உண்டு. நாங்கள் எங்கள் கட்சி மாநிலக் கவுன்சிலின் கூட்டத்திலே திண்டுக்கல் தேர்தலுக்குப் பின்னாலே தி.மு.க. சார்க்கார் ராஜினமா செய்ய வேண்டுமென்று சொல்லி தீர்மானம் போட்டிருக்கிறோம், கருணாநிதி அரசு ராஜினாமா செய்யவேண்டுமென்று சொல்லவில்லை. அப்படி நாங்கள் சொல்வதற்கு வெட்கப்படவும் இல்லை. எங்கள் கட்சியின் முடிவு அது. அவர் பேசியிருக்கிறார், என் கையிலே இருக்கிற செங்கோலைப் பிடுங்கப் பார்க்கிறார்கள், செங்கோலைப் பிடுங்கினாலும் வீர வாள் இருக்கிறது, பிடுங்க முடியாது என்று பேசியிருக்கிறார். கிருஷ்ணன் கையிலே சக்ராயுதத்தை வைத்துக்கொண்டு துஷ்ட நிக்ரகம், சிஷ்ட பரிபாலனம் என்று சொல்லியதைப்போல் இவர்களும் சிஷ்ட பரிபாலனம், சிஷ்டர்கள் இல்லாவிட்டால் துஷ்ட நிக்ரகம் என்ற முறையிலே இது ஒரு சாம்பிள்.

எங்கள் கட்சியிலே உள்ள 11 பேர்கள் பொறுப்புள்ள தலைவர்கள். அவர்களிலே சொம்ப விலையுயர்ந்த மாணிக்கங்களாக நாங்கள் கருதக்கூடியவர்களான ஆதிமூலமும், நல்லகண்ணுவும் 'சி' கிளாசிலே போடப்பட்டிருக்கிறார்கள். அதைப்பற்றி நாங்கள் வருத்தப்படவில்லை. ஒரு கேளிலே 11 பேர்களைக் கைது செய்தால் ஒன்றுகத்தான் வைத்திருப்பார்கள். ஆனால் இதிலே அப்படிச் செய்யவில்லை, உங்களுடைய துஷ்ட நிக்ரகத்திற்கான அந்த ஆயுதம்தான் வருகிறது. அதேபோன்று எங்களுடைய கட்சித் தோழர் அருணாசலம் மேட்டூரிலே கொல்லப்பட்டார். அதைப்பற்றி எந்த முறையிலே இன்வெஸ்டிகேஷன் நடந்துகொண்டு இருக்கிறது என்பது எங்களுக்குத் தெரியவில்லை.

அதேபோன்று தி.மு.க.வின் ஊழியராக நீண்டகாலம் இருந்து, அ.தி.மு.க.வின் ஊழியராகப் பணியாற்றிய ஆறுமுகம் அவர்கள் கொலை செய்யப்பட்டார்கள். அதனுடைய இன்வெஸ்டிகேஷனில் நிலை என்ன ? எங்களுக்குத் தெரியவேண்டும்.

வி. பி. சிந்தன் அவர்கள் சென்ற மாதம் 18-ஆம் தேதியன்று தாக்கப்பட்டார், மாதவரத்திலே. உண்மையிலே அது புதுமை பாகத்தான் இருக்கிறது. நான் தொழிற்சங்கத்திலே இருப்பவன்,

1973 ஆகஸ்ட் 7] [திரு. கே. டி. கே. தங்கமணி]

எங்களைப் போன்றவர்களுக்கு சந்தேகம் வருகிறது, பஸ்லிலே போகிற தொழிற் சங்கத் தலைவர்களுக்கு இந்தக் கதிதானு என்று. திட்டமிட்டு தொழிற்சங்கத் தலைவரைத் தாக்குவது புதுமையாக இருக்கிறது. குசேலர் வருவார் என்று எதிர்பார்க்கப்பட்டதாம். அவர் வரவில்லை. வி. பி. சிந்தன் அவர்களைக் கீழே தள்ளி முதுகிலே குத்தி, நல்ல வேளையாக மருத்துவர்களின் திறமையால் அவர் பிழைத்துக்கொண்டார். அதற்காக விசேஷ அதிகாரி போட்டிருக்கிறார்கள். அதில் இன்வெஸ்டிகேஷன் நடந்து கொண்டிருக்கிறதா என்று எங்களுக்குத் தெரிய வேண்டாமா? அந்த விசேஷ அதிகாரிக்கு போலீஸ் அதிகாரிகள் இடைஞ்சல்கள் செய்கிறார்களா, அரசியல் இருக்கிறதா என்பதையெல்லாம் தெரிந்துகொள்ள விரும்புகிறோம்.

அண்ணை அவர்கள் சொம்ப வருத்தப்பட்ட சம்பவம் முன்பு நடந்தது. என்னைக்கூட எங்கள் கட்சியிலே கண்டித்தார்கள். 1968-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 25-ம் தேதி நடந்த சம்பவம். 44 பேர்கள் இறந்தார்கள். நானும் எங்கள் கட்சியைச் சேர்ந்த வர்களும் மன்னை அவர்களும் வந்திருந்தார்கள். அந்தச் சம்பவம் நடந்ததுபற்றி அண்ணை அவர்களுக்கு நான் ஒரு விரிவான கடிதத்தை எழுதியிருந்தேன். அவர் எனக்குக் கடிதம் எழுதினர். உன்னுடைய கடிதம் கிடைத்தது, உன் பெயருக்குத் தகுந்தாற் போல் நீ தொடர்ந்து பணி செய்யவேண்டுமென்று எழுதி யிருந்தார். அந்தச் சம்பவம் பற்றி அரசு என்ன நடவடிக்கை எடுத்தது என்று தெரியவில்லை. Did you conduct the investigation properly? இன்வெஸ்டிகேஷன் சரியாக நடத்தப்படவில்லை என்று ஹைகோர்ட்டே சொல்கிறது. நாங்கள் சொல்லவில்லை. இந்த முறையிலே படுகொலை செய்யப்பட்டார்கள். நம்முடைய ஆட்கள் தாக்கப்பட்டால் கோர்ட்டிலே நியாயம் கிடைக்குமா என்ற நிலைமை வந்திருக்கிறது.

விலைவாசிபற்றி ஒன்றிரண்டு கருத்துக்களைச் சொல்லி பின்னாலே சந்தர்ப்பம் கிடைக்கும்பொழுது விரிவாகச் சொல்லலாம் என்று நினைக்கிறேன். விலைவாசி ஏற்றத்திற்கு முக்கியமான காரணம் மின்வெட்டு. அதனால் சாமான்களின் விலை உயர்ந்துவிட்டது. தமிழகத்திலே மின்சார வெட்டு இருப்பதைப்பற்றி ஒரு சிறந்த

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1973 ஆகஸ்ட் 7

கட்டுரை 'எக்னமிக் டைம்ஸ்' என்ற பத்திரிக்கையில் ஜூன் 28, 1973-லே வந்தது. அதிலே, Is there a flourishing black-market power in Tamil Nadu? This query has been posed by kuowledgeable circles following the reported conclusion of the Union Ministry of Power and Irrigation that there is no justification for the unprecedented 75 per cent power cut in Tamil Nadu for a fairly long period commencing from the middle of February.

என்று சொல்லப்பட்டிருக்கிறது.

அப்பொழுது 75 சதவிகிதம் தேவையில்லே. பின்னல் விவரம் கொடுக்கிறார்கள். 36 சதவிதம் மேல் வெட்டு தேவையில்லே என்று. அவர்கள் விவரம் தெரிந்தவர்கள் என்று நினைக்கிறேன். 'எக்னமிக் டைம்ஸ்' குறிப்பிடுகிறது, குறிப்பிட்ட சில மத்திய அமைச்சர்களில் சிலர் சொல்கிறார்கள். எனவே, 75 சதவிகிதம் வெட்டு எப்படி வந்தது? சில பேக்டரிகளுக்கு 100 சதவிகிதம் எப்படி ஏற்பட்டது என்று அறிய நாங்கள் ஆவல் உள்ளவர்களாக இருக்கிறோம். பிளாக் மார்க்கெட்டிலே இந்த மின்சாரம் விற்கப் பட்டது. மதுரையிலே மகாலெட்சுமி மில், சி. எஸ். ராமாச் சாரிக்குச் சொந்தமான மில்லில் பிளாக் மார்க்கெட்டில் மின்சாரம் விற்கப்பட்டது. மின்சாரப் பற்றாக்குறையின் காரணமாக மக்கள் கஷ்டப்படக்கூடிய நிலேமையிலே பிளாக் மார்க்கெட்டிலே விற்கும் அளவிற்கு ஒரு அரசியல் நிலேமை ஏற்பட்டால் அந்த அரசு தொடர்ந்து இருப்பது தமிழ்நாட்டு மக்களுக்கு நல்லது அல்ல என்று சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலேவரவர்களே, கம்யூனிஸ்ட் கட்சித் தலேவரவர்களுக்கு எரிச்சலூட்ட வேண்டுமென்பதற்காகக் கேட்கவில்லே, தெரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காகக் கேட்கிறேன். மின்சாரத்தை பிளாக் மார்க்கெட்டிலே விற்றார்கள் என்று சொன்னார்கள். அதை விவரமாகச் சொன்னால் நலமாக இருக்கும்.

திரு. கே. டி. கே. தங்கமணி: 25 சதவிகிதம் கொடுக்கிறேன் என்று சொல்லிவிட்டு மேற்கொண்டு 75 சதவிகிதம் கொடுப்பது.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: எங்களுக்கும் தெரிந்தால் பயன்படும் என்பதற்காக அவர்களைக் கேட்கிறேன். அதே எக்னமிக் டைம்ஸிலே முதலிலே 75 சதவிகிதம் மின்சாரத்

1973 ஆகஸ்ட் 7]

தட்டுப்பாடு தேவையில்லை, அதற்குக் காரணம் மின்சாரம் அதிகமாக இருக்கிறது, அந்தக் கணக்கைப் பார்த்தால் 36 சதவிகிதம் தான் வரவேண்டுமென்று குறிப்பிட்டு, அதே கட்டுரையில் 75 சதவிகிதம் என்பது எல்லா பேக்டரிகளுக்கும், எல்லாத் தொழில்களுக்கும் சமமான கட் அல்ல, இண்டஸ்ட்ரீசுக்கு 75 சதவிகிதம், அதேபோல கட் இல்லாத சில கேட்டகிரீஸ் இருக்கின்றன. எனவே 75 சதவிகிதம் என்பது பூரணமாக இல்லை, சில கேட்டகிரீஸ்களுக்கு இல்லாத காரணத்தால் 75 சதவிகிதம் வருகிறது, 36 சதவிகிதம் வரவில்லை என்று குறிப்பிட்டுள்ளது. அதிலேயே குறிப்பிட்டுள்ள அந்தக் கருத்தையும் அவர்கள் படித்துப் பார்க்கலாம். பிளாக் மார்க்கெட் என்று சொல்கிறார்கள். யார் யாருக்கு என்று, இண்டஸ்ட்ரீசுக்கு, அக்ரிகல்சரிஸ்ட்க்கு என்று மொத்தமாகப் போடுகிறோம். 17 சதவிதம் லேன் லாஸ் வருகிறது. 15 வருஷங்களாக இருக்கிறது லேன் லாஸ். எனவே எப்படி பிளாக் மார்க்கெட் நடக்கும் என்று தெரியவில்லை. அப்படித் தெரியாததால் அந்தக் கட்டுரையை எழுதியவரையே கேட்டேன், எங்களுக்கும் தெரிந்தால் நல்லது என்று கேட்டேன். ஏதாவது ரகசியம் இருந்தால் சொல்லுங்கள் ஐயா, நடவடிக்கை எடுக்கிறோம் என்று கேட்டேன். அவர்கள் என்ன பதில் சொன்னார்கள் தெரியுமா? நான் பிளாக் மார்க்கெட் என்று எங்கே எழுதியிருக்கிறேன், "Is there any black marketing" என்றுகேள்விக்குறி தானே போட்டிருக்கிறேன், பிளாக் மார்க்கெட் என்று என்று சொல்லவில்லையே என்று கூறினர்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** சரி இருக்கட்டும். (சிரிப்பு); இது சிரிக்கும் விஷயம் அல்ல. மின்வெட்டு ஏற்படும் காலத்திலேயோ நீங்கள் பாதுபாடு செய்கீர்கள். மதுரையிலுள்ள மில்களை எடுத்துப்பாருங்கள், சீதாலட்சுமி மில், மகாலட்சுமி மில், மீனாட்சி மில் குரூப் ஆகியவைகளுக்கு எவ்வளவு சப்ளை செய்தீர்கள் என்று காட்ட முடியும். உங்களிடம் பாதுபாடு உண்டு.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** மீனாட்சி மில்லுக்கு மட்டும் கூறித்து 'கன்டெம்ட் ஆஃப் கோர்ட்' என்று போயிருக்கிறார்கள். 25 சதவிகிதம் மின்சாரத்தை நாம் எல்லோருக்கும் கொடுக்கிறோம். இதற்கு மேலே எந்த மில்லுக்குக் கரண்ட்

1973 ஆகஸ்ட் 7] [திரு. கே. டி. கே. தங்கமணி]

கொடுக்கிறோமோ அவர்கள் உற்பத்தி செய்யும் நூலை, 'செண்ட்ரல் பூலுக்குப்' போகாமல் நம் மாநிலத்திலேயே உபயோகித்துக் கொள்வதற்கு மத்திய அரசு அனுமதித்திருக்கிறது. ஆனால் மீனாட்சி மில் அப்படி நூலைத் தர மாட்டோம் என்று சொன்னார்கள், நாங்களும் கரண்ட் தர மாட்டோம் என்று சொன்னோம். எந்தெந்த மில்கள் மத்திய அரசின் வேண்டுகோளுக்கு ஏற்ப 25 சதவிகிதம் மின்சாரத்தைப் பெற்று, அதிலே உற்பத்தியாக்கப் படும் நூலை நம்முடைய மாநிலத்திலேயுள்ள கைத்தறி நெசவாளர் களுக்குக் கொடுக்கிறார்களோ அவர்களுக்கு எக்செஸ் கரண்ட கொடுக்கிறோம்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** நான் ஒரு உதாரணத் திற்காகக் கொடுத்தேன். பிளாக் மார்க்கெட் அப்படி நடந்திருக் கிறது. மில் முதலாளிகளிடம் தேர்தலுக்குப் பணம் கேட்கிறார்கள், கொடுத்தால் மின்சாரத்தைக் கொடுக்கிறார்கள், கொடுக்காதவர் களுக்கு வெட்டு செய்கிறார்கள் என்ற குற்றத்தைச் சாட்டுகிறேன். வேண்டுமானால் கமிஷன் போடுங்கள். நான் ஒவ்வொரு தடவையும் பேசும்பொழுது முதலமைச்சரவர்கள் ஒன்றைச் சொல்லுவார்கள். சமயம் வரும்போதெல்லாம் சமயநல்லூர் சமயநல்லூர் என்று சொல்கிறார்கள் என்று சொல்லுவார்கள். இப்பொழுதும் சமயநல்லூரைப் பற்றித்தான் பேசவிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் எவ்வளவு நேரம் எடுத்துக் கொள்வீர்கள்?

THIRU K. T. K. THANGAMANI: I will require 15 minutes.

தொடர்ந்து பவரைப் பொறுத்தவரையில் இதே சட்டமன்றத்தில் கவர்னர் அவர்கள் உரையிலே, ஹெச். பாபா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள், "No power is costlier than no power" அதாவது மின்சாரத்திற்கு எவ்வளவு பணம் செலவழித்தாலும் பரவாயில்லை, ஒரு யூனிட்டிற்கு 2½ பைசா செலவானாலும் சரி, 25 பைசா செலவானாலும் சரி, உற்பத்திச் செலவு ஜஸ்டியானாலும் மின்சாரத்தை உற்பத்தி செய்ய வேண்டும், இல்லாவிட்டால் நமக்கு எப்படியும் நஷ்டம் ஜாஸ்தியாக இருக்கும் என்று தொடர்ந்தாற்போல் இங்கே கூறப்பட்டிருக்கிறது.

1973 ஆகஸ்ட் 7] [திரு. கே. டி. கே. தங்கமணி]

ஆனால், நம்முடைய சமயநல்லூரிலே நிலைமை என்னவென்றால், எங்களுடைய குற்றச்சாட்டுகளிலே அது ஒன்று, நீங்களும் பதில் சொல்லியிருக்கின்றீர்கள், அந்தப் பதிலுக்குப் பதிலும் நாங்கள் கொடுத்திருக்கிறோம், பதிலுக்குப் பதிலுக்கு மேல் சில விவரங்களை நான் சொல்ல விரும்புகிறேன். அந்த விவரம் என்னவென்றால், நீங்கள் சொல்வது, அதனுடைய புக்-வேல்யூ 55 இலட்சம், அந்த மின்சாரத்திற்காக இருக்கும் சாதனங்கள், பாய்லர்கள், மோட்டார் போன்றவைகளின் விலை 55 இலட்சம் ரூபாய், நாங்கள் 59 இலட்சத்திற்கு விற்றுவிட்டோம், ஆகவே இதுவும் எங்கள் சாதனை என்று இதுதான் உங்களுடைய பதில். நான் சொல்வது, இன்றைக்கு அதனுடைய மார்க்கெட் வேல்யூ 55 இலட்சம் ரூபாய்தான் என்று சொல்ல முடியுமா? அதில் இருக்கும் சாதனங்கள் என்ன? செம்பு, உருக்கு என்று ஒன்றுக்குப் பத்தாக இருக்கும் சாதனங்கள், அவைகள் இன்றைக்கு எவ்வளவு பெறுமானம் உள்ளவை?

இரண்டு, மூன்று தினங்களுக்கு முன்னால் பத்திரிகையிலே பாருங்கள், பார்லிமெண்ட்டிலே எங்கள் கட்சியைச் சார்ந்த திரு. பூபேஷ் குப்தா அவர்கள், எந்தக் கட்சி என்று பார்க்கவில்லை, இன்றைக்கு குஜராத்திலே போர்ப்பந்தரில் இருக்கும் ஒரு மின் நிலையம், அது 15 மெகாவாட் என்று நினைக்கிறேன், சமயநல்லூர் மின் நிலையம் அதைவிடப் பெரிது என்று நினைக்கிறேன் (குறுக்கீடு) கிட்டத்தட்ட 15 மெகாவாட் இருக்கும் என்று நினைக்கிறேன். அப்படி சமயநல்லூர் நிலையத்தின் அளவில் இருக்கும் அந்த மின் நிலையத்தை இரண்டே முக்கால் கோடி ரூபாய்க்கு விற்றிருக்கிறார்கள். யாருக்கு விற்றிருக்கிறார்கள்? இரண்டே முக்கால் கோடிக்கு பிர்லாவிற்கு விற்றிருக்கிறார்கள். பிர்லாவிற்கு விற்றதற்கு என்ன சொல்கிறார்கள்? இதன் புக் வேல்யூ ஒன்றே முக்கால் கோடி, அதை இரண்டே முக்கால் கோடிக்கு விற்றோம் என்று சொன்னார்கள். ஆனால் அது அவர்களுக்குத் திருப்தியை ஏற்படுத்தவில்லை. பார்லிமெண்டில் இந்த விவரம் எழுந்தபொழுது திரு. கே. எல். ராவ் அவர்கள் உடனடியாக அந்த மூதலமைச்சரைப் பார்த்து கமிஷன் போடு என்று சொன்னார்கள். அந்த ஊழலை விசாரிப்பதற்காகத் தனியாகக் கமிஷன் போட்டிருக்கிறார்கள். நீங்களும் அந்த

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1973 ஆகஸ்ட் 7

அளவிற்குப் போடுவதாக இருக்கிறீர்களா? அப்படி ஏதாவது டெண்டர்கள் கேட்டார்களா, யார் யார் டெண்டர்கள் கேட்டார்கள் என்று சொல்ல முடியுமா? அதேநேரத்தில் நிபுணர் குழு என்ன சொல்லிற்று? உற்பத்திச் செலவு ஜாஸ்தியாக இருக்கிறது, ஒரு யூனிட்டுக்கு 1.2 பைசா ஆகிறது, எனவே மூடுங்கள் என்று சொன்னார்கள். மூடுங்கள் என்று சொன்னால் ஏன் விற்கிறீர்கள்? யாருக்கு அதிகாரம் கொடுத்தார்கள்? யாருக்கு விற்றீர்கள்? பொதுத்துறையிலே இருந்த சாமான்களை, தனியாக செட்டியார் அவர்கள்....

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, திரு. தங்கமணி அவர்கள், விற்றுவிட்டார்கள், விற்றுவிட்டார்கள் என்று சொன்னார்கள். விற்கப்படவில்லை; டெண்டர்கள் கோரப்பட்டது. யார் அதிக டெண்டருக்குக் கேட்டார்களோ அவர்களுக்குத் தரப்பட்டது. இந்தியா முழுவதிலும் டெண்டர் கோரப்பட்டது, எல்லாப் பத்திரிகைகளிலும் விளம்பரங்கள் செய்யப்பட்டன, ஒரு முறைக்கு இரண்டு முறையாக டெண்டர்கள் கோரப்பட்டன. ஒரு கோடிக்கு மேல், இரண்டு கோடிக்கு **யாராவது** எடுத்துக்கொள்ள முன்வந்திருந்தால் **அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும்.**

**திரு. கே. டி. கே. தங்கமணி:** அரசுத்துறை தொழில் நிறுவனங்களைத் தனியாருக்குக் கொடுப்பது ஏகபோக முறைத் தடைச் சட்டத்திற்கு விரோதம், அப்படி குஜராத் முதலமைச்சர் செய்தது சரியா, அதற்காக கமிஷன் போடுங்கள் என்று குஜராத் முதல்வருக்கு யோசனை கூறுங்கள், அப்படி யோசனை கூறாமல் போனால் நீங்கள் ஏதோ உங்கள் கட்சி ஆட்சியில் இருப்பதால் அந்த முதலமைச்சருக்குப் பாதுகாப்பாக இருக்கிறீர்கள் என்று நினைப்போம் என்று பார்லிமெண்ட்டில் பூபேஷ் குப்தா அவர்கள் தெரிவித்தார்கள். இன்றைக்கு கமிஷன் போட்டிருக்கிறார்கள். ஆகவே, இன்றைய நிலைமை என்ன? தனியாருக்கு விற்றீர்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, தனியாருக்கு விற்றார்கள், தனியாருக்கு விற்றார்கள் என்ற குற்றச் சாட்டை அழுத்தந்திருத்தமாகக் கூறுகிறார்கள். முதலிலே

1973 ஆகஸ்ட் 7] [டாக்டர் மு. கருணாநிதி]

பஞ்சாப் மாநில கார்ப்பரேஷன் அதை வாங்க சம்மதித்து ஒரு தொகையை நிர்ணயித்தது. பிறகு வேண்டாமென்று அவர்களே சொல்லிவிட்டார்கள். முதலில் பஞ்சாப் மாநில கார்ப்பரேஷனுக்குத் தரப்பட்டது, ஆனால் அவர்கள் வேண்டாமென்று சொல்லிவிட்டபிறகு, டெண்டருக்கு விடப்பட்டது. டெண்டர் கேட்டவர்களிலே ஒரு தனியார் அதிக விலைக்குக் கேட்டார், அவர் எடுத்துக்கொண்டார்.

**திரு. கே. டி. கே. தங்கமணி** : பார்லிமெண்டில் நடந்த விஷயத்தைச் சொன்னேன். பொதுத் துறையில் இருக்கக்கூடிய ஒன்றுக்கு டெண்டர் போட்டால் யாரைக் கேட்க வேண்டும். ஒவ்வொரு மாநில அரசையும் கேட்க வேண்டும், வாரியங்களை, கார்ப்பரேஷன்களைக் கேட்க வேண்டும். அதை விற்க வேண்டுமென்ற அவசியம் ஏன் வந்தது? விற்பதற்கு யார் அதிகாரம் கொடுத்தது? இந்தச் சபையில் தீர்மானம் வந்ததா? இந்த விஷயம் எல்லாம் தெரியவேண்டும். இவ்வளவு பெரிய தொழில் ஸ்டேஷனை 59 லட்சம் ரூபாய்க்கு விற்றிருக்கிறார்கள். இதே அளவுள்ள தொழில் ஸ்டேஷனை அங்கே 2½ கோடி ரூபாய்க்கு விற்றிருக்கிறார்கள். அதையே ஊழல் என்று சொல்லி அதன்பேரில் விசாரணை நடக்கிறது என்று சொன்னால் இங்கே இந்த ஒரு விஷயத்திலாவது விசாரணைக்குத் தயாராக இருக்கக்கூடாதா?

எப்படி இருந்தாலும் எங்களை மக்கள் தேர்ந்தெடுத்து விட்டார்கள். 1976 வரை எங்களை யாரும் கேட்கக்கூடாது. கேள்வி கேட்டால் ஒவ்வொன்றுக்கும் சமாதானம் சொல்லி விடுகிறோம். அப்படி அல்லாமல் ராஜினாமாச் செய்ய வேண்டுமென்று சொன்னால் ஏற்றுக்கொள்ள முடியாது என்கிறீர்கள். உணவுப் பிரச்சினையில் ஒரு தகராறு ஏற்படுகிறது, தவறு ஏற்படுகிறது, உடனடியாக வங்காளத்தில் உணவு அமைச்சர் ராஜினாமாச் செய்கிறார். அங்கே மைத்ரா ராஜினாமாச் செய்கிறார். அப்படி இன்றைக்கு எந்த மந்திரியும் இங்கு ராஜினாமாச் செய்வதாக இல்லை. ராஜினாமாச் செய்தாலும் அந்த மந்திரிகள் திரும்பவும் எடுத்துக் கொள்ளப்படுகிறார்கள். அமைச்சரவையே ராஜினாமாச் செய்யுங்கள் என்று கேட்கிறோம். கூட்டுப் பொறுப்பு என்ற முறையில் அமைச்சரவை ராஜினாமாச் செய்யட்டும். அடுத்த

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1973 ஆகஸ்ட் 7

தேர்தல் வரட்டும், அல்லது வேறு முறையைப் பார்க்கலாம். தனிப்பட்ட உங்கள் மீது எனக்கு வெறுப்பு கிடையாது. தனிப் பட்ட முறையில் இந்த அமைச்சர்கள் எங்களுக்கு மரியாதை காட்டுகிற அளவுக்குக் காங்கிரஸ் அமைச்சர்கள் காட்டவில்லை. கொள்கையற்ற போக்கில் போகிற காரணத்தால் ஜனங்களுக்கு மேலும் மேலும் கஷ்டம் அதிகமாகிக் கொண்டிருக்கிறது. ஜனங் களுக்கு ஏற்கெனவே இருந்த உற்சாகம், 1971-ல் இருந்த உற்சாகம் இன்றைக்கு அடங்கிவிட்டது. தி.மு.க. ஆட்சியினால் ஏற்பட்ட நன்மைகளைக் காட்டிலும் கெடுதல்களே அதிகம். தி.மு.க. ஆட்சி இருந்தாலும் மக்களுக்குக் கஷ்டம்—முதலமைச்சர் அவர்கள் பேசுகின்ற விதத்தைப் பார்த்தால் தி.மு.க. ஆட்சியை விட்டுப் போனாலும் கஷ்டப்படுத்துவோம் என்ற முறையில் பேசியிருக் கிறார்கள். It is a dialoctrical pebble. பயங்கரமான நிலைமையாக இருக்கிறது. இந்த மாதிரி நிலைமை இருப்பதால் நீங்கள் ராஜினாமாச் செய்யுங்கள் என்று சொல்லுகிறோம்.

இந்தச் சம்பவங்களை எல்லாம் தொகுத்து நாங்கள் சொன்னால் எந்த அளவுக்கு இன்றைக்குத் தமிழக அரசு போகிறது என்றால் அகில இந்திய ரீதியில் நாம் முன்பு நிராகரித்த பிற்போக்குக் கட்சிகள் என்று சொன்னோமே அந்தக் கட்சியினுள்ளவர் களோடு, எந்தெந்த விதத்தில் எல்லாம் ஊழல் செய்ய முடியுமோ அவ்வளவு ஊழல்களையும் செய்து, நேருவுக்கே கெட்ட பெயர் வாங்கித் தந்த பிஜு பட்நாயக்கோடும், இன்றைக்கு இந்த நாட்டில் இந்துக்கள்தான் இருக்க வேண்டும், வேறு முஸ்லீம்கள் இருக்கக்கூடாது என்று சொல்லக்கூடிய ஜனசங்கத்தோடும் சேர்ந்துகொண்டு இந்த மாதம் 26-ம் தேதி விலைவாசி உயர்வை எதிர்த்து, மத்திய சர்க்காரை எதிர்த்து நடத்துகிற ஆர்ப்பாட்டத்தில் நீங்கள் கலந்து கொள்ள இருக்கிறீர்கள். எந்தத் திசையில் நீங்கள் போய்க் கொண்டிருக்கிறீர்கள் என்பதற்காகத் தான் இதைச் சொல்கிறேன். சருக்கல் பாறையில் வழுக்கிக் கொண்டு போகக்கூடிய நிலைமை இருக்கிறது. ஏற்கெனவே நாம் ஒத்துக்கொண்ட முற்போக்குப் பாதையில் நல்ல காரியங்களைச் செய்வோம் என்ற நிலை மாறி தடுமாற்றம் ஏற்பட்டு வழுக்கல் பாறையில் சறுக்கிக் கொண்டு போய்க் கொண்டிருக்கிறீர்கள்.

1973 ஆகஸ்ட் 7] [திரு. கே. டி. கே. தங்கமணி]

மக்களுக்குக் கஷ்டத்திற்கு மேல் கஷ்டம் வந்து கொண்டிருக்கிறது. இந்தக் கஷ்டம் இங்கு மட்டுமல்ல, நாடு பூராவிலும் இருக்கிறது. நாடு பூராவிலும் விலைவாசி உயர்வை எதிர்த்துப் போராட்டம் நடத்த ஆளும் கட்சியினர் தயாரா? மத்திய சர்க்காரில் பிரதம மந்திரி அவர்கள்—எந்த அளவுக்கு நன்மை ஏற்படுகிறதோ அது ஒரு பக்கம் இருக்கட்டும்—இந்த மாதிரி விலைவாசி ஏறி கஷ்டம் ஏற்பட்டுக் கொண்டிருப்பதைப் பற்றி விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த வழிவகை காண வேண்டுமென்பதற்காக எல்லாக் கட்சிகளையும் கூப்பிட்டுக் கலந்து பேசுகிறார்கள். அந்த மாதிரியான நியதியோ, விருப்பமோ, அப்படிக் கலந்து பேசுகிற பண்பாடோ இந்த ஆளும் கட்சிக்கு இருப்பதாகத் தெரியவில்லை. காரணம் அவர்களுக்கு மெஜாரிடி இருக்கிறது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** நாங்களும், மத்திய அரசும் இந்தியாவின் பிரதமரும் எதிர்க்கட்சிகளை அழைத்துப் பேசுவதை வரவேற்கிறோம். அந்தப் பேச்சில் நல்ல முடிவுக்கான ஆரம்பங்கள் ஏற்படுமானால் நிச்சயமாக இந்த அரசும் அப்படிப்பட்ட முயற்சிகளைக் கையாளலாம் என்று அந்த முடிவினை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** நான் ஆட்டிடியூடைச் சொன்னேன். இங்கே எல்லாக் கட்சிகளையும் கூப்பிட்டு வைத்துப் பேசுவது என்ற நிலை இருக்கிறதா என்று சொன்னால் இல்லை. என்ன காரணம்? என்னுடைய அபிப்பிராயம் போன முறை நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தில் பேசும்போது சொன்னதையே சொல்லுகிறேன். மெஜாரிடி இருப்பதால் மட்டும் நாம் செய்வது சரி என்று ஆகிவிடாது. ஏற்கனவே நான் அண்ணா அவர்களை மேற்கோளாகக் காட்டினேன். சில பேருக்கு அது பிடிக்கவில்லை. இப்போது மார்க்சியக் கோட்பாட்டைச் சொல்லுகிறேன். 'Majority does not ensure stability'

மெஜாரிடி இருந்தால் மட்டும் பாதுகாப்பு இருக்கும் என்று இல்லை. மெஜாரிட்டியை வைத்துக்கொண்டு தொழிலாளர்களுக்கு நன்மை செய்வோம், விவசாயிகளுக்கு நன்மை செய்வோம், பாடுபடும் மக்களுக்கு நன்மை செய்வோம், நம்மிடத்தில் இன்றைக்கு

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1973 ஆகஸ்ட் 7

ஏற்பட்டிருக்கும் லஞ்ச லாவண்ய ஸ்லீப் அடித்துக் கொண்டிருக்கிறதே அதற்கு முற்றுப்புள்ளி வைப்போம் என்ற நிலையை எடுத்தால் கண்டிப்பாக மெஜாரிடிக்கு மதிப்பு ஜாஸ்தி. அப்படி இல்லாமல் எங்களுக்கு மெஜாரிடி இருக்கிறது என்று சொல்லி தீர்மானத்தை நிராகரித்து விட்டோம் என்று சொல்லும் நிலை இருக்குமானால் அதிலிருந்து மாறுதல் ஏற்படுகிற வரையில் கண்டிப்பாக மக்களுடைய அபிலாஷைகளைத் தீர்க்கவும் முடியாது, எதிர்க்கட்சிகள் அதை ஆதரிக்கவும் முடியாது.

ஏற்கெனவே கூடக் குறிப்பிட்டிருக்கிறேன். ஜனவரி மாதம் 1972 என்று நினைக்கிறேன். அப்போது ஏழு கட்சிகள் கூட்டணியாக இருந்தோம். ஏழு கட்சிகளும் கூடிப் பேசி அரசாங்கம் என்ன செய்ய வேண்டுமென்று முன்கூட்டியே முடிவு செய்யலாம். அதனால் என்னென்ன காரியங்களைச் செய்ய வேண்டுமென்று சொல்லலாம் என்று சொன்னேன். அதற்கு நேரடியாக பதில் வரவில்லை. முதலமைச்சர் அறிக்கை வந்தது. கம்யூனிஸ்டு கட்சித் தலைவர்கள் கட்சியை நடத்தவில்லை, தொண்டர்களா கட்சியை நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பது போன்று பத்திரிகையில் அறிக்கை வந்தது. கலந்து பேசும்போது நாம் எடுத்த நிலையிலிருந்து மாற வேண்டியிருக்கும். நாம் எடுத்த நிலையில் இருந்து மாறுவது என்பதைப் பற்றிய கருத்தோட்டம் கிடையாது. முன்னாலேயே மனதை மூடி வைத்துக் கொண்டு பேசுவது என்றால் கண்டிப்பாகக் கூடிப் பேசியும் பயன் இல்லை. நாம் செய்வதில் தவறு இருக்கலாம், தவறு இருக்கிறது, தகராறுகள் இருக்கின்றன, பல ஸ்தாபன ஏற்பாடுகளை வேறு முறையில் செய்ய வேண்டிய நிலைமை இருக்கிறது. கொள்கையை மாற்ற வேண்டும். கூடிப் பேசினால் நன்மை ஏற்படும்.

நான் பத்திரிகையிலே ஒரு கவிதையைப் படித்தேன். ரொம்பப் பொருத்தமாக இருந்தது.

"நாடெல்லாம் கள்வர் கூட்டம்"

எப்படியாவது கள்ளத்தனமாகச் சேர்த்து அதிக விலைக்கு விற்பது

"நடமாடும் கள்ளச் சந்தை"

1973 ஆகஸ்ட் 7] [திரு. கே. டி. கே. தங்கமணி]

யுத்தம் முடிந்த பிறகுதான் கள்ளச் சந்தையைப் பற்றித் தெருத் தெருவாகப் பாட்டுப் பாடினேம்.

பாரத நாட்டைப் பஞ்ச நாடாக்க பதுக்கல்காரன் வருகிறான் என்று பாடினேம்.

கள்ள மார்க்கட்காரர்களைத் தூக்கில் போட வேண்டுமென்று ஜவகர்லால் நேருவே சொன்னார்.

"நாடெல்லாம் கள்வர் கூட்டம்
நடமாடும் கள்ளச் சந்தை
நடத்துவார் ஆதிக்கத்தில்
நாட்டினர் செல்வ மெல்லாம்
மூடங்கிய வேளை ஊன்றி
மூளைவிட்ட ஊழல் இன்று
இடமற எங்குந் தோன்றி
இடர் தரும் அவலம் கண்டோம்"

தமிழ்நாட்டின் நிலைமை அப்படியே இருக்கிறது. இந்த அவல நிலையை ஏற்படுத்திய இந்த அரசு கண்டிப்பாக மாற வேண்டும். ஒன்று அவர்களாக மாற வேண்டும். சில சமயத்தில்....

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** நாடெல்லாம் கள்வர் கூட்டம் என்று இந்த மாநிலத்தைக் கூறுகிறதா அல்லது இந்திய நாட்டைக் கூறுகிறதா?

**திரு. கே. டி. கே. தங்கமணி:** தமிழ்நாட்டில் தமிழில் போடப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டில் கள்வர் சொம்ப ஜாஸ்தி. அதற்குப் பாதுகாப்பு அரசு. அதுவே அரசை விட்டு இறங்க வேண்டுமென்றால் மெஜாரிடி இருக்கிறது. எப்படி இறங்கும்? ஷேக்ஸ்பியர் சொன்னது ஞாபகத்திற்கு வருகிறது.

'Not all the waters in the rough rude sea can take away the bomb from North Sea.' என்று அரசனை இருந்த சார்லஸ் மன்னன் சொன்னதாக ஷேக்ஸ்பியர் சொல்லுகிறார். மெஜாரிடி இருக்கிறது, எங்களை அசைக்க முடியாது என்ற நிலைமை இருக்குமானால் அது சரியல்ல என்பதைமட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1973 ஆகஸ்ட் 7

இப்போது சொன்னவற்றைக் கூடியவரையில் என்னுடைய தீர்மானத்தின் அஸ்திவாரமாக வைத்துக் கொண்டு இந்த அரசின் போக்கு சரியில்லை, ஆகவே, இந்த அரசு ராஜினாமாச் செய்ய வேண்டுமென்று வற்புறுத்துகிறேன். இந்த அரசின் கொள்கையற்ற போக்கினால் உணவுப் பிரச்சினையில் நிதானமான, நிரந்தரமான கொள்கை இல்லாத காரணத்தால் மக்களுக்குக் கஷ்டம் ஏற்பட்டு, கஷ்டம் ஏற்படக்கூடிய நேரத்தில் மக்கள் எல்லாம் ஒன்றுகூடி ஆர்ப்பாட்டங்களை ஆட்சிக்கெதிராக நடத்தும்போது கொடுமையான முறையில் அடிப்பதும், முக்கியமான தலைவர்களைத் தாக்கிக் கொலை செய்வதும் சரிதான் என்று போகக்கூடிய அளவுக்கு வந்திருக்கிறது. இந்தக் காரணங்களால் இந்த ஆட்சி கண்டிப்பாக ராஜினாமாச் செய்ய வேண்டுமென்று சொல்லி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

நண்பகல் 12-00

*மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: கோதுமை மாவைப்பற்றிச் சொன்னார்கள். மத்திய சர்க்கார் கொடுக்கிற விகிதாசாரம் 30,000, 15,000, 10,000 என்ற அளவில் மாதத்திற்கு 10,000 டன் என்ற அளவிற்குக் குறைந்து வருகிறது. அந்தப் பிரச்னைகளில் எந்தளவிற்குக் கவனம் செலுத்தி மக்களுக்கு நல்ல முறையில் கொடுக்க வேண்டுமோ அதைச் சர்க்கார் செய்து வருகிறது. நிர்ணயித்த விலை ரூ. 105 என்றால் சேல்ஸ் டாக்ஸ், அரைவைக் கூலி எல்லாம் சேர்ந்து நியாயமான முறையில் பத்து ரூபாய் சேர்த்து ரூ. 115 என்று போடப்பட்டிருக்கிறது. லட்சக்கணக்கான ரூபாய் சர்க்கார் லாபம் சம்பாதித்து விடுவதாகச் சொன்னார்கள். 30,000 டன் வந்தாலும் அதே அதிகாரிகள்தான் இருந்து விநியோகிக்கிறார்கள், 10,000 டன் வந்தாலும் அதே அதிகாரிகள்தான் இருந்து விநியோகிக்கிறார்கள். நிர்வாகச் செலவு 30,000 டன் வந்தாலும் 10,000 டன் வந்தாலும் ஒரே விதத்தில்தான் இருக்கிறது.

இப்போது பத்து ரூபாய் அதிகமாகியிருக்கிறது என்று சொல்கிறார்கள். வேண்டுமென்று அதிகமாகக் கூட்டி, பம்பாயில் விற்பதை விட இங்கு கூடுதலாக இருக்கக் கூடிய நிலைமை இல்லை என்பது அவர்களுக்கும் தெரியும். சென்னையில் கூடுதலாக இருக்கிறது என்று சொன்னார்கள். கேரளாவில் படி அரிசி

1973 ஆகஸ்ட் 7] [திரு. மன்னை ப. நாராயணசாமி]

ரூ 5.50-க்கு விற்கிறது. கேரளா அதிகாரிகளைக்கூடப் பிடித்திருக்கிறார்கள். விலையைக் கட்டுப்படுத்த என்னென்ன செய்யமுடியுமோ அவற்றைச் செய்து வருகிறோம்.

இங்கு பருப்பு விலைகள் கூடுதலாக இருக்கின்றன என்றால் குஜராத் போன்ற மாநிலங்களிலிருந்து அவை வருகின்றன. அங்கு விற்கிற விலை, டிரான்ஸ்போர்ட் சார்ஜஸ் எல்லாம் சேர்த்து விலைகள் கூடியிருக்கலாமே தவிர விகிதாசாரத்தில் கூடுதல் இல்லை. உணவுப் பிரச்சினையில், அரிசிப் பிரச்சினையில் எந்தளவிற்குக் கவனம் செலுத்த முடியுமோ அந்த அளவிற்குச் செலுத்தி, எந்த அளவிற்கு கள்ளக்கடத்தல்காரர்களைப் பிடிக்கமுடியுமோ அந்த அளவிற்குச் செய்யப்பட்டு வருகிறது. கம்பம் பிரச்சினை பற்றிச் சொன்னார்கள். சர்க்கார் ஸ்டாக்கிலிருந்து கொடுக்கப்படுகிற அரிசிக்கு எந்தளவிற்கு விலை நிர்ணயிக்க முடியுமோ—நேற்றே அதைப் படித்துக் காண்பித்திருக்கிறேன். உறுப்பினர் அவர்கள் எந்தளவிற்கு மக்களைக் கிளப்ப வேண்டுமென்ற ஒரே நோக்கத்தோடு பேசினார்களோ அதே நோக்கத்தோடு அவர்கள் தலையிட்டு, அங்கிருந்தவர்கள் லாரியைக் கொள்ளையடித்திருக்கிறார்கள் என நேற்றே சொன்னேன். சர்வ கட்சிகளும் சேர்ந்து ஒரு தீர்மானம் போட்டிருக்கிறார்கள். பெர்மிட் வைத்திருந்த லாரிகளை மக்கள் சூரையாடியது, மக்கள் அப்படி எடுத்துக் கொண்டது—தப்பு என்று கம்பத்திலுள்ள சர்வ கட்சித் தோழர்களும் ஒரு தீர்மானம் போட்டிருப்பதைப் படித்தேன். முந்தாநாளில் இருந்து அவர்கள் எஸ் பேரில் வருத்தமாக இருக்கிறார்கள். அவர்களை நான் ஏதோ சொல்லிவிட்டதாக, அவர்களுக்கு ஏதோ சொல்லிக் கொடுக்க வேண்டுமென்று நான் சபாநாயகர் அவர்களிடம் கேட்டுக்கொண்டதாக நேற்றுப் பேசினார்கள். இன்றும் அதைச் சேர்த்துப் பேசினார்கள். நான் யாரையும் குறிப்பிட்டு ஒன்றும் சொல்லவில்லை.

அரிசியைப் பொறுத்தவரையில் நிர்வாகத் துறையில் சில கட்டுப்பாடுகளை வைத்துக் கொண்டு அதிகமாக விலை ஏறாமல் பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1973 ஆகஸ்ட் 7

THIRU K. KANDASWAMY: On a point of order, Sir. Just with a view to avoid interruption, I waited. Now with your kind permission, I want to raise a point of order with regard to the speech made by Thiru K.T.K. Thangamani.

மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கமணி அவர்கள் பேசும்போது கொள்கையற்ற கொள்கையை உடைய ஒரு அரசு என்றும், ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம் என்றும் குறிப்பிட்டார்கள். அவர்கள் கட்சிக் கோட்பாட்டின்படி அவர்கள் ஆண்டவன் மீது நம்பிக்கையில்லாதவர்கள். இன்று அவர்களுக்கு ஆண்டவன் மீது நம்பிக்கையுண்டா என்பதற்கான விளக்கத்தைச் சொல்வார்களா?

4. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) விவாதத்திற்கு கட்சி வாரியாக ஒதுக்கப்பட்டுள்ள நேரம் குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது தீர்மானங்களை முன்மொழிந்து பேசிவிட்டார்கள். இனி விவாதம் தொடங்க இருக்கிறது. இன்று 1½ மணி நேரம் இருக்கிறது. 8, 9 10 தேதிகளில் எல்லாம் சேர்ந்து 15 மணி நேரம் இருக்கிறது. 10-ம் தேதி மாலை விடையளிக்க ஒதுக்கி வைத்தால் 15 மணி நேரம் இருக்கிறது. இதைக் கட்சிகளிடையே பங்கிட்டால் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு 7 மணி நேரம், காங்கிரஸ் (ஓ) 1 மணி 44 நிமிடங்கள், ஏ.டி.எம்.கே. 1.36 நிமிடங்கள், பார்வேர்ட் ப்ளாக் 56 நிமிடங்கள், முஸ்லிம் லீக் 48 நிமிடங்கள், காங்கிரஸ் 48 நிமிடங்கள், ஸி.பி.ஐ. 40 நிமிடங்கள், சுதந்திரா 40 நிமிடங்கள், டி.ஸி.பி. 24 நிமிடங்கள், டி.ஏ.கே. 8 நிமிடங்கள், இன்டிப் பென்டன்ட்ஸ் 8 நிமிடங்கள், நாமினேட்டட் மெம்பர் 8 நிமிடங்கள் என்று வருகிறது. இந்த நேரத்தை அந்தந்த கட்சித் தலைவர்கள் மனதில் கொண்டு அந்தந்த நேரத்திற்குள்ளே உறுப்பினர்கள் பேசுவதற்கு அறிவுரை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இதற்கு மேல் நேரம் வழங்க முடியாத நிலையில் இருக்கிறேன் என்றும் சொல்லிக்கொள்கிறேன்.

**6. அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானமும், அமைச்சரவையின் தனி ஒரு கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானமும் -தொடர்ச்சி.**

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்** : ஆளும் கட்சிக்கு ஏழு மணி நேரம், எங்கள் கட்சிக்கு ஒரு மணி சில நிமிடங்கள் என்றிருக்கிறது. இத் தீர்மானங்களைக் கொடுத்த பிரதான எதிர்க் கட்சிகளுக்கு அதிக நேரம் ஒதுக்க வேண்டும், அதல்லாமலிருந்தால் இந்த விவாதம் பயன் உள்ளதாக இருக்க முடியாது. ஆதலால், ஆளும் கட்சி சார்பில் சொல்வதற்கு அமைச்சரவை இருக்கிறது. அதிலும் மிகவும் திறமைவாய்ந்த முதல் அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு அதிக நேரம் கொடுக்க வேண்டிய தேவையில்லை. அந்த நேரத்தில் கொஞ்சம் எதிர்க் கட்சிகளுக்கு அதிகமாக வழங்க வேண்டும், தாராளமாக வழங்க வேண்டுமென்று தங்கள் மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி** : மொத்தமுள்ள 15 மணி நேரத்தில் ஆளும் கட்சிக்கு 7 மணி நேரம் மற்றக் கட்சிகளுக்கு 8 மணி நேரம் கொடுத்திருக்கிறீர்கள். கட்சிகள் அதிகமாக யிருக்கிற காரணத்தால் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் சொன்ன வாதத்தை ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது. ஆகவே ஆளும் கட்சிக்கு 7 மணி நேரம் என்பதை 6 மணி நேரமாக ஆக்கிக்கொண்டு மீதமுள்ள 9 மணி நேரத்தை மற்றக் கட்சிகளுக்கு அளிக்கலாம்.

**திருமதி த. ந. அனந்தநாயகி** : நம்பிக்கையில்லாத் தீர்மானம் என்பது எதிர்க்கட்சி ஆளும் கட்சி மேல் கொண்டு வருகிறது. ஆளும் கட்சி சார்பில் பேசுவதற்கு அமைச்சர்களுக்கு முழு உரிமை இருக்கிறது பதிலளிக்க. அதல்லாமல் அவர்கள் ஒத்தா சைக்காக ஏழு மணி நேரம் ஒதுக்கிக் கொண்டு....

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி** : தலைவர் அவர்களே, நேரம் அதிகமாக வேண்டுமென்று கேட்கும்போது ஒரு முறை யோடு கேட்கலாம். அப்படிக் கேட்கும்போது ஒரு பேச்சு தேவையில்லை. எங்களுக்கு நேரம் அதிகம் தேவை என்று கேட்கலாம். அதல்லாமல் அவர்கள் அப்படிப் பேசுவார்கள், இப்படிப் பேசுவார்கள் என்று சொல்ல வேண்டிய அவசியமில்லை. எவ்வளவு நேரம் வேண்டுமென்று கேளுங்கள்.

[1973 ஆகஸ்ட் 7

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இந்த அவையில் பல தடவை நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் தொடர்ந்து கொண்டுவரப்பட்டிருக்கின்றன. எப்போதும் கடைப் பிடித்து வருகிற ஒரு மரபு ஆளும் கட்சிக்குப் பாதி நேரம், எதிர்க் கட்சிகளுக்குப் பாதி நேரம் என்பதுதான். நாங்கள் எதிர்க் கட்சி வரிசையில் இருந்தபோதும் சரி, ஆளும் கட்சிக்குப் பாதி நேரம் எதிர்க்கட்சிகளுக்கு பாதி நேரம் என்ற மரபுதான் கடைப்பிடிக்கப் பட்டு வந்திருக்கிறது. குறிப்பிட்ட அந்த மரபு வேறு எங்கும் கடைப்பிடிப்பதல்ல. தாராளமாக எதிர்க்கட்சிகளுக்கு 9 மணி நேரமும் ஆளும் கட்சிக்கு 6 மணி நேரமும் என்று இப்படி ஒரு சமாதான அடிப்படையில் செய்துகொள்ளலாம் என்று மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். முறைப்படி கடைப்பிடிக்கப்பட்டு வருவது ஆளும் கட்சிக்குப் பாதி நேரம் எதிர்க் கட்சிகளுக்குப் பாதி நேரம் என்பதுதான் தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** எதிர்க் கட்சி வரிசையில் இருக்கக்கூடிய மூன்று தோழமைக் கட்சிகளையும் சேர்த்துத்தான், அதையும் கணக்கில் சேர்த்துத்தான் ஒன்பது மணி நேரம் என்று ஒதுக்கப்பட்டிருப்பது நியாயமல்ல. உண்மையில் யார் எதிர்க் கட்சிகளாக அமர்ந்திருக்கிறார்களோ அவர்களுக்கு நேரம் அதிக மாகக் கொடுத்தால்தான் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்மீது பேச முடியும். எங்களுக்கு 48 நிமிடங்கள் கொடுத்துவிட்டு பேசுங்கள் என்றால் அதை விட இந்த நோ-காண்பிடன்ஸ் மோஷன் மீது நாங்கள் பேசவே இல்லை என்று சொல்லிவிடுவது மேல். உண்மையில் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஒழுங்காக எதிர்க் கட்சிகள் விவாதிக்க வேண்டும் என்ற எண்ணம் இருந்தால் அதுவும் எண்ணிக்கையில் குறைந்திருக்கும் எதிர்க் கட்சிகளுக்கு அதிக நேரம் கொடுத்தால்தான் குற்றங் குறைகளை எடுத்துச் சொல்ல முடியும். 48 நிமிடங்கள் என்றால் எங்களுக்குத் தேவையே இல்லை என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

**திரு. ஏ. ஆர். பெருமாள் :** ஆளும் கட்சிக்குத் தோழமைக் கட்சியாக இருக்கிற காரணத்தால் நாங்கள் ஒரு கட்சியே இல்லை என்று சொல்லிவிடுவார்கள் போலிருக்கிறது. எதிர்க்கட்சியில் உள்ளவர்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைப்பற்றி விவாதிக்

1973 ஆகஸ்ட் 7] [திரு. ஏ. ஆர். பெருமாள்]

தலாம், ஆனால் ஆளும் கட்சிக்குத் தோழமைக் கட்சியாக இருக்கக் கூடிய நாங்கள் அந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்குப் பதில் அளிப்பதற்கு எங்களுக்கு சந்தர்ப்பம் வேண்டாமா? குற்றச் சாட்டுகள் மட்டும் சொன்னால் கேட்பவர்கள் பதில் சொல்ல சந்தர்ப்பம் வேண்டாமா? தோழமைக் கட்சியாக இருந்தால் என்ன நாங்கள் பேசவே கூடாதா? ஆகவே எங்களுக்கும் அதிக நேரம் கொடுக்க வேண்டும்.

திரு. கே. ஏ. வகாப்: தோழமைக் கட்சிகளுக்கு தங்கள் கருத்துக்களைச் சொல்ல உரிமை இல்லை என்ற அடிப்படையில் அம்மையார் அவர்கள் சொன்னார்கள். தயவு செய்து இதற்குத் தாங்கள் ஒரு நல்ல தீர்ப்பு வழங்க வேண்டும். தோழமைக் கட்சி களுக்குத்தான் அதிக நேரம் வேண்டும் என்று கேட்கிறேன். எதிர்க்கட்சிக்காரர்கள் தங்கள் வாதங்களைச் சொல்வார்கள், ஆளும் கட்சியினர் தங்கள் வாதங்களைச் சொல்வார்கள். ஆனால் நாங்கள் நடுநிலையில் நிற்கிற காரணத்தால் எங்களுக்குத்தான் அதிக நேரம் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கே. ஏ. மதியழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவ ரவர்களே, இந்த பங்கு போடுகிற முறையை நேற்றையதினம் அலுவல் ஆய்வுக் குழுவிலேயே நான் ஒப்புக்கொள்ளவில்லை. நம்பிக்கையில்லாத் தீர்மானம் என்பது அரசு மீது குற்றச் சாட்டுகளைச் சொல்வதற்காக, அதை அரசு திருத்திக் கொள்வதற் காக எதிர்க்கட்சிகள் கொண்டு வருவதாகும். அதன் மீது பேசு வதற்கு ½ மணி நேரம்தான் எங்களுக்கு என்றால் அது போது மானதல்ல. ஆளும் கட்சித் தரப்பில் அமைச்சர்கள் மட்டும் பேசினால் போதுமானது. மேலும், அவர்கள் பாதியிலேகூட குறுக்கிட்டுப் பதில் சொல்லிவிடுகிறார்கள். இந்தத் தீர்மானத்தின் மீதுதான் எதிர்க்கட்சிகளுக்கு அரசாங்கத்தின் மீது ஒரு குற்றச் சாட்டைக் கூற, அதைப்பற்றி விமர்சனம் செய்ய ஒரு வாய்ப்பு. இந்த அரசாங்கமே போய்விடுகிறது என்பதல்ல, இந்தத் தீர்மா னத்தின் முடிவில். பாதி நேரம் பிரித்துக் கொடுப்பது என்பது வாடிக்கைதான் என்றாலும், எதிர்க் கட்சிகளுக்கு ½ மணி நேரம், ¾ மணி நேரம்தான் கொடுக்க முடியும் என்றால் எப்படி அவர்கள் பேச முடியும்? கொஞ்சம் தாராளமாக, சொம்பவும் மனமுவந்து

[1973 ஆகஸ்ட் 7

கொடுத்த மாதிரி சொல்வது முறையல்ல. ஏற்கெனவே அப்படித் தான் என்று சொல்வது முறையல்ல. அதை மறுபரிசீலனை செய்ய வேண்டும். அரசாங்கம் செய்யும் தவறுகளை எடுத்துச் சொல்ல வேண்டும், அதற்கு அமைச்சர்கள் பதில் சொல்லவேண்டும். ஆகவே இன்னும் 2, 3 நாட்கள் அதிகமாகக் கூட இந்த விவாதத்தை வைத்துக் கொள்ளலாம். அதைத்தான் நேற்றும் நான் வற்புறுத்தினேன். சட்டசபை கூடுவதே இல்லை. இன்னும் இரண்டு நாட்கள் அதிகமாகக் கூடினால் ஒன்றும் கெட்டு விடப் போவதில்லை. நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு 4 நாட்கள் என்று ஒதுக்கி விட்டு, 13-ம் தேதிக்குள் நிகழ்ச்சி நிரலை முடித்துக்கொள்வானேன்? அது அவ்வளவு சரியானதல்ல. 1½ மணி, ¾ மணி என்றால் தலைவர்கள்தான் பேச முடியும். தலைவர்கள் மட்டும் பேசினால் போதுமா? மற்ற தோழமைக் கட்சிகள் அரசாங்கத்தின் ஒரு 'விய பாயின்டை'த்தான் பேசப் போகிறார்கள். Opposition will have their say and they will have all their say அந்த 'சேயும்' இதில் வருகிறார்கள் என்று பொருளே தவிர, அந்த காரணம் சரியாகாது. இன்னும் நான்கு நாட்கள் வைத்துக் கொள்ளுங்கள், 15-ம் தேதி வரை வைத்துக்கொள்ளுங்கள் என்று நேற்றைக்கே வற்புறுத்திய கருத்தைச் சொல்கிறேன்.

**திரு. நா. வீராசாமி:** 174 பேர் இருக்கிறோம். பல ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கு இருக்கும் ஒரே வருத்தம் பேசுவதற்கு வாய்ப்புக் கிடைக்கவில்லையே என்பதுதான். அதனால்தான் வேறு கட்சிக்குப் போனால் நிறைய நேரம் பேசுவதற்கு வாய்ப்புக் கிடைக்கும் என்று போய்விடுகிறார்கள் (சிரிப்பு). நம்முடைய அவையின் பெரிய எதிர்க்கட்சியின் தலைவர் மதிப்பிற்குரிய பொன்னப்ப நாடார் அவர்கள் திறமையான முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்ல இருக்கிறார் என்று சொன்னார்கள். திறமையான முதலமைச்சர் மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் தேவையில்லை என்றாலும் கூட....

**திரு. கே. ஏ. மதியழகன்:** தலைவரவர்களே, வீராசாமியை எந்த விதியின்கீழ் பேச அனுமதித்து இருக்கிறீர்கள்? நானும் திரும்பிப் பார்த்துக்கொண்டு இருக்கிறேன். அவர் எதற்கெடுத்தாலும் விமர்சனம் செய்ய ஆரம்பித்து விடுகிறார்.

(ஒரே நேரத்தில் பல குரல்கள்)

1973 ஆகஸ்ட் 7]

**திரு. நா. வீராசாமி:** நான் என்னுடைய கட்சியைப் பொறுத்த வரையில் சொல்கிறேன்.

**திரு. என். கணபதி:** மாண்புமிகு அ.தி.மு.க.வின் துணைத் தலைவர் எந்த விதியின் கீழ் வீராசாமி அவர்கள் பேசுகிறார்கள் என்று கேட்கிறார். ஆளும் கட்சியின் உறுப்பினர் என்ற முறையில் கருத்தைத் தெரிவிக்கிறார். அதிலே ஒன்றும் தவறு இல்லை.

**திரு. கே. ஏ. மதியழகன்:** வீராசாமி எந்த விதியின் கீழ் பேசுகிறார்? வீராசாமி இப்படி எதற்கெடுத்தாலும் எழுந்து விபாசனம் செய்வதை அனுமதித்துக் கொண்டிருக்கிறீர்கள்? இது இந்த மன்றத்தின் லட்சணமாக இல்லை. பாயின்ட் ஆப் ஆர்டர் என்று வேண்டுமானால் கேட்கட்டும். எதைச் சொன்னாலும், அதற்கு குறுக்கிட்டு, அரசாங்கத்தின் பாதுகாவலர் போல் விமர்சனம் செய்து கொண்டிருக்கிறார், ஒரு நாளைக்கு 15 தடவை எழுந்து பேசிக் கொண்டிருக்கிறார்.

**திரு. நா. வீராசாமி:** வீராசாமி மட்டும் பேசவில்லை. உங்கள் கட்சி ஹாண்டே மட்டும் பேசவில்லையா?

*(ஒரே நேரத்தில் பல குரல்கள்)*

**திரு. கே. ஏ. மதியழகன்:** யார் அந்த வீராசாமி, எப்படி அவர் ஒரு நாளைக்கு 15 முறை எழுந்து பேசலாம்? பாயின்ட் ஆப் ஆர்டர் வேண்டுமானால் அவர் எழுப்பலாம்....

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, நண்பர் மதியழகன் அவர்கள் யார் அந்த வீராசாமி என்று கேட்கிறார். அந்த வீராசாமி ஆற்காடு தொகுதி எம்.எல்.ஏ. அந்த வீராசாமியும் அதே கேள்வியைத் திருப்பிக் கேட்க அதிக நேரம் ஆகாது. அதே போல் கேட்டு விடலாம். யார் அந்த மதியழகன் என்று. அதையெல்லாம் புரிந்து கொண்டு தான் நாம் இங்கே உட்கார்ந்து கொண்டிருக்கிறோம். இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது விவாதங்கள் ஆரம்பிக்கும்போதே தலைவரவர்களே, நீங்கள் கூறியிருக்கிறீர்கள், வார்த்தைகளில்

[டாக்டர் மு. கருணாநிதி] [1973 ஆகஸ்ட் 7

கடுமையில்லாமல், விவாதங்களில் அதிகக் கடுமையைக் காட்டுங்கள் என்று. ஆகவே, பிரச்னையை நல்ல முறையில் எடுத்துச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கே. ஏ. மதியழகன்:** ஆற்காடு தொகுதி எம்.எல்.ஏ. என்று முதலமைச்சருக்கு இப்போதுதான் தெரிந்ததா, இந்த வேடிக்கைப் பேச்சு தேவையில்லை.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** எதிர்க் கட்சித் தலைவர் தங்கள் கட்சிக்கு அதிக நேரம் பேசுவதற்கு உரிமை வேண்டும் என்று கேட்பதுபோல் திரு. வீராசாமியும் கேட்கலாம்.

**திரு. கே. ஏ. மதியழகன்:** ஆற்காடு வீராசாமி எதிர்க் கட்சித் தலைவரா? இதற்கு ஒரு முடிவு கட்டியாக வேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** எதிர்க்கட்சியிலே உள்ளவர்கள் பேசுவதற்கு அதிகமாக நேரம் வேண்டுமென்று கேட்க உரிமை படைத்து இருப்பது போலவே, ஆளும் கட்சியிலே உள்ளவர்கள் அதிக நேரம் பேச வேண்டுமென்று சொல்வதற்கும் உரிமை படைத்து இருக்கிறார்கள். ஒவ்வொரு கட்சிக் கூட்டம் நடைபெறுகிற நேரத்திலும், தங்களுக்கு அதிகமாகப் பேசுவதற்கு நேரம் கொடுப்பதில்லை என்று அவர்கள் கேட்கிறார்கள். நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது தங்களுடைய தொகுதிகளைப் பற்றியும் பேசக்கூடும். அதற்கு அந்த உறுப்பினர்கள் பதில் சொல்ல வேண்டி வரும். ஆகவே, ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கு எந்த அளவுக்கு எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்குப் பேச வாய்ப்புத் தர முடியுமோ அந்த அளவுக்குத் தரவேண்டும். அந்த வகையில் தான் ஆளும் கட்சி உறுப்பினர் என்ற முறையில் நண்பர் வீராசாமி அவர்கள் அதிக நேரம் ஒதுக்கித் தரவேண்டுமென்று கேட்கிறார்கள்.

**திரு. கே. ஏ. மதியழகன்:** தவறு என்று சொல்லவில்லை. தினந்தோறும் அடிக்கடி எழுந்து பேசுகிறார். இப்போது முதலமைச்சர் அவர்கள் சொன்ன மாதிரி 6 மணி நேரம் தங்கள் கட்சிக்கு என்று குறைத்துக்கொண்டார்கள், சரி.

**திரு. வி. சி. நரசிம்மன்:** தங்கள் கட்சியைச் சேர்ந்த ஹாண்டே ஒரு நாளைக்கு 15 தடவை எழுந்து பேசவில்லையா?

*(திரு. கே. ஏ. மதியழகன் எழுந்தார்.)*

1973 ஆகஸ்ட் 7]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் சொன்னதற்கு நான் பதில் சொல்ல வேண்டாமா? எப்படி நண்பர் வீராசாமி எழுந்து பேசலாம் என்று கேட்டீர்கள். இந்த மன்றத்தில் ஒவ்வொரு உறுப்பினரும் எழுந்து தன்னுடைய கருத்தைச் சொல்வதற்கு உரிமை உண்டு. திரு. மதியழகனுக்கு இருக்கும் உரிமை, திரு. வீராசாமிக்கும் உண்டு. அவர் என்ன காரணத்திற்காக எழுந்திருக்கிறார் என்று கேட்கக் கூடாது. (திரு. முனு ஆதி எழுந்தார்.) அந்தப் பிரச்னை முடிந்துவிட்டது. நீங்கள் உட்காருங்கள் முனு ஆதி.

**திரு. முனு ஆதி :** இந்தப் பிரச்னையில் கட்சித் தலைவர்களைக் கலந்துகொண்டு முடிவு எடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இதிலே கட்சித் தலைவர்கள் ஒன்றும் சொல்வதற்கில்லை. இந்த நேரம் ஒதுக்குவதற்கு கட்சித் தலைவருக்குக் கூட அல்ல, பேரவைத் தலைவருக்குத்தான் அதிகாரம் உண்டு.

**திரு. முனு ஆதி :** நான் கேட்டுக் கொள்கிறேன் சார் ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நேற்று அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்த முடிவின்படி பாதி, பாதி நேரம் ஆளும் கட்சிக்கு, எதிர்க்கட்சிகளுக்கு என்று சொன்னேன். இப்போது பாதி நேரம் கூட அல்ல, நான் கொடுத்திருந்த 7 மணி நேரத்தைக் கூட, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 6 மணியாகக் குறைத்து கொண்டு விட்டார்கள். இப்போது எதிர்க்கட்சிகளுக்கு 9 மணி நேரம் ஆகிறது. இப்போது வெங்கடசாமி அவர்களும், தங்கமணி அவர்களும் சேர்ந்து 1½ மணி நேரம் பேசி இருக்கிறார்கள். அதையும் சேர்த்துக் கொண்டால், மொத்தம் 10½ மணி நேரம் எதிர்க்கட்சிகளுக்குக் கொடுத்ததாக ஆகிறது. அதோடு, கடைசியில் தீர்மானத்தை முன் மொழிந்தவர்கள் மறுபடியும் பேச இருக்கிறார்கள். அதையும் சேர்த்துக் கொண்டால், மொத்தம் களுக்கு 2 மடங்கு நேரமும், ஆளும் கட்சிக்கு ஒரு மடங்கு நேரமும் என்று வரும். இன்னும் நேரத்தை நீட்டி 15-ம் தேதி வரை வைத்துக் கொள்ளக் கூடாதா என்று கேட்டார்கள். அதற்காகத்தான் நான்கு நாட்கள் என்று வைத்து, கேள்வி

நேரத்தையும் குறைத்துக்கொண்டோம். அதிலே ஒரு 1½ மணி நேரம் கிடைக்கும். ஆக 3 நாட்களுக்கு நாலரை மணி நேரம் அதிகமாகக் கிடைக்கிறது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இந்த 15 மணி நேரம் தலைவர்களைத் தவிர்த்து உறுப்பினர்கள் பேசுவதற்கு மட்டுமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தலைவர்களுக்கும் சேர்த்துத் தான் வரும்.

**திரு. கே. ஏ. மதியழகன்:** அதற்குள் பேசி முடிக்க முடியுமா? இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது பேசுவதற்கு இன்னும் 4 நாட்கள் அதிகமாக வைக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அலுவல் ஆய்வுக் குழுவில் நான்கு நாட்களுக்கு வைத்துக் கொள்ளவேண்டுமென்று யோசனை கூறியதால்தான் காலையில் கேள்வி நேரத்தை நிறுத்தி வைத்து விட்டு, விவாதத்தையே வைத்துக்கொள்வது என்று முடிவு எடுத்தோம். இதனால் 4½ மணி நேரம் அதிகமாகக் கிடைத்து இருக்கிறது. இருக்கிற வாய்ப்புகளை வைத்துக் கொண்டுதான் நாம் செய்கிறோம்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, the discussion on the No Confidence Motion can be extended by another two days.

**திரு. ஏ. சுவாமிதாஸ்:** இன்னும் ஒரு நாள் கூட வைத்துக் கொள்ளலாம்.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார்:** ஆன் எ பாயிண்டு ஆப் ஆர்டர், மாண்புமிகு மதியழகன் அவர்கள் பேசும்பொழுது தோழமைக் கட்சிகள் அரசாங்கத்தின் வியூபாயிண்டுகளைத்தான் சொல்வார்கள் என்று கூறினர். நான் அதை வன்மையாக மறுக்கிறேன். கடந்த கால சட்டமன்ற நடவடிக்கைக் குறிப்புகளை எடுத்து நோக்கினால் நாங்கள் கன்ஸ்ட்ரக்டிவ் கிரிடிஸிஸம் செய்திருக்கிறோம் என்பது புலப்படும். அதைத்தான் இனியும் செய்யப் போகிறோம்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, it is an insinuation. It is not as if the hon. Member alone makes constructive criticism and others are not making it. . . .

1973 ஆகஸ்ட் 7]

THIRU G. R. EDMUND : Sir, I want an assurance from the chair. தலைவர் அவர்களே, ஆளும் கட்சிக்கு 5 மணி நேரமும் கட்சிகளுக்கு 9 மணி நேரமும்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அந்த விஷயம் முடிந்து போய்விட்டது.

திரு. க. உரொ. எட்மண்ட் : I do 1 only want an assurance and do not want to take much time. It is a very simple matter நாங்கள் பேசும்பொழுது ஒவ்வொரு துறையைப் பற்றிப் பேசும் பொழுது சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் அதுபற்றிப் பதில் சொல்வார்கள். மேலும் ஆளும் கட்சித் தரப்பிலிருந்து நம்பிக்கை யில்லாத் தீர்மானத்தை எதிர்த்துப் பேச இருக்கிறார்கள். கடைசி யாக மாண்புமிகு முதல் அமைச்சர் தங்களுடைய கருத்துக்களே பதிலாகச் சொல்ல இருக்கிறார்கள். ஆக, நம்முடைய அமைச் சர்கள் அவ்வப்பொழுது குறுக்கிடாமல் இருப்பார்களேயானால் எங்களுக்குக் கிடைக்கிற நேரம் தாராளமாக முழுவதும் கிடைக்கும். ஆகவே, அம்மாதிரி உத்தரவாதம் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அப்படி அமைச்சர்கள் குறுக்கிடுகின்ற நேரத்தை உங்களுக்குக் கூட்டித் தருகிறேன்.

* **திரு. செ. கந்தப்பன் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இரண்டு தீர்மானங்களின் மீதும் விவாதத்தைத் துவக்கி வைத்த நண்பர்கள் கூறிய வாதங்களைக் குறித்து, அதிலும் குறிப் பாக முதலில் திரு. தங்கமணி அவர்களுடைய வாதங்களைக் குறித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்ல முற்படுகிறேன்.

கொள்கையற்ற கொள்கை என்ற ஒரு மூண்பாடான பதத்தைப் பிரயோகித்து தன்னுடைய பேச்சைத் துவக்கினர். முடிக்கிறபொழுது திராவிட முன்னேற்றக் கழகம் கொள்கையிலே யிருந்து சரிந்து ஏதோ தகாதவர்களோடு கூட்டுச் சேர்ந்து விட்டது என்கின்ற வகையிலே தன்னுடைய உரையை இங்கே முடித்தார்கள். லட்சக்கணக்கில் வருமான வரி பாக்கியுள்ள ஒருவருடைய தலைமையை ஏற்றுக்கொண்டு இன்றைக்கு ஏறத்தாழ

[திரு. செ. கந்தப்பன்] [1973 ஆகஸ்ட் 7

அவதார புருஷர் என்று பேசக்கூடிய திரு. தங்கமணி அவர்களுக்கு நான் என்ன பதில் கூறுவது என்று எனக்குத் தெரியவில்லை. பல்வேறு வாதங்களை எழுப்புகின்ற நேரத்தில் அதற்கான பதில்கள் ஏற்கனவே இங்கே கூறப்பட்டிருக்கின்றன. மீண்டும் மீண்டும் தொடர்ந்து அவர்கள் அதே வாதங்களைக் குறிப்பிட்டுக் கொண்டே இருந்தார்கள்.

குறிப்பாக, மத்தியில் இன்று ஆட்சி நடைபெறுகிற இந்திரா காங்கிரஸ் கட்சி சொல்கிற கருத்து நடைமுறைக் கொள்கையை எடுத்துக் கொண்டால், உதாரணமாக கோதுமையை எடுத்துக் கொண்டால் ஒரு டன் ரூ. 750 என்ற விலையில் தரப்படுகிறது. இங்கே ஏதோ சில காரணங்களினால் அதிலும் குறிப்பாக சில நிர்வாகச் செலவுகள் காரணமாக சிறு தொகை ஏறியிருக்கிறது என்று அதை ஒரு குறையாக எடுத்துச் சொன்னார்கள். ரூ. 700, 750-க்கு கோதுமை விற்கப்படுகிறது அல்லது வாங்கப்படுகிறது இந்திய நாட்டில். இதே கோதுமை கனடா அமெரிக்க நாடுகளில் ரூ. 1,270-க்கு வாங்கப்படுகிறது என்பதையும், விற்கப்படுகிறது என்பதையும் அறிவோம். அகில இந்திய மட்டத்தில் இருக்கிற கொள்கை கோட்பாடு கோளாறு காரணமாக, சீரற்ற நிர்வாகம் காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதை அவரே மறந்துவிட்டு, தெரிந்திருந்தும் ஒரு வேளை நெருங்கிய தோழமை என்ற காரணத்தினால் எடுத்துக் கூறாமல், இங்கு இருக்கிற நிலைமைகளை சரியான, நிலைமைகளைத் திரித்திக் கூறக்கூடிய முயற்சியில் ஈடுபட்டார்கள். உண்மையிலேயே அது எனக்கு வியப்பாக இருக்கிறது.

(திரு. நா. வீராசாமி தலைமை)

அதுபோலவே விலைவாசிப் புள்ளியைப் பற்றிச் சொன்னார்கள். அவரே கூட இறுதியாகப் பேசுகிறபொழுது மின்சாரத் தட்டுப்பாடு காரணமாக குறிப்பாக தொழில் உற்பத்தி பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை ஒத்துக் கொண்டு பேசினார்கள். நான் ஒன்றைத் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். 1967-ல் கழக ஆட்சி ஏற்பட்டதிலிருந்து இது நாள் வரையில் அகில இந்திய ரீதியில் மாநில வாரியாக விலைவாசிப் புள்ளி நிலவரத்தை எடுத்துப் பார்த்தால், மற்றைய மாநிலங்களைவிட தமிழக நிலைமை மிகச்

1973 ஆகஸ்ட் 7] [திரு. செ. கந்தப்பன்]

செம்மையாக இருக்கிறது. மாநில அரசு எவ்வளவு சீராக இருக்கும் என்பதற்கு ஒரு அளவுகோல் இருந்தால், நிச்சயம் அந்த அளவுகோலை வைத்துப் பார்க்கும்பொழுது இந்த மாநில அரசு மிகக் சீராக முன்பு அண்ணு தலைமையிலும் இன்று அவருடைய நேர் வாரிசாக இயங்குகின்ற கலைஞர் தலைமையிலும் நடைபெறுகிறது என்பதை யாராலும் மறுக்க முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுவாக, இப்படிப்பட்ட சில சில்லரை வாதங்களுக்கு நான் பதில் சொல்வதற்குச் சங்கடமாக இருக்கிறது. காரணம் எங்களுடைய தலைவர் டாக்டர் முதல்வர் எப்படிப் பேச வேண்டும் என்று அறிவுரை சொல்கிற அளவுக்கு நண்பர் தங்கமணி அவர்கள் போய்விட்டார்கள். சில நேரங்களில் காரண காரியங்கள் இல்லாவிட்டாலும்கூட, எதிர்க் கட்சியிலர் தன்னுடைய கடமையை நிறைவேற்றிவிட வேண்டும் என்ற காரணத்திற்காக டாக்டர் கலைஞர் அவர்களுடைய உரையை விமர்சிக்கும்பொழுது வரம்பு மீறி பேசுவதைக் கைக்கொண்டிருக்கிறார்கள். திரு. தங்கமணி அவர்கள் அந்த அளவுக்கு விமர்சனத்திற்குப் போயிருக்கிறார்கள். ஆயிரம் தடவை பதில் சொல்லப்பட்டது, ஆதாரத்தோடு பதில் சொல்லப்பட்டது. இருப்பினும் சமயநல்லூர் பிரச்னையை மீண்டும் இங்கே எடுத்துப் பேசியிருக்கிறார்கள். இதையெல்லாம் பார்க்கிற பொழுது எனக்கு ஒரு ஆங்கில பழமொழி ஞாபகத்திற்குப் வருகிறது. 'One man may lead the horse to water but twenty cannot make him drink' ஒரு மனிதன் தண்ணீர் குடிப்பதற்காக ஒரு குதிரையை இழுத்துச் சென்றுவிடலாம். ஆனால், 20 பேர்கள் சேர்ந்தாலும் கூட அந்தக் குதிரையைத் தண்ணீர் குடிக்க வைக்க முடியாது. அதைப்போல எதிர்க்கட்சியில் இருப்பவர்களுக்கு நாங்கள் காரண காரியங்களையும், வாதங்களையும் ஆதாரத்தோடு எடுத்து வைக்கலாமே தவிர அவர்களை நம்ப வைக்க எங்களால் இயலாது என்பதை நான் உணர்கிறேன். அவர்கள் நம்பக் கூடாது என்று முடிவெடுத்திருக்கிற காரணத்தினால் நிச்சயம் அவர்களை நம்பச் செய்வது சிரமம் என்பதில் எனக்குச் சந்தேகம் இல்லை. இருந்தாலும் கூட எங்களுடைய கடமை இங்கே குறிப்பாக ஆளுகின்ற, இந்த மாநிலத்தை ஆளுகின்ற பொறுப்பிலே டாக்டர் கலைஞர் தலைமையில் இயங்குகின்ற அரசு எவ்வளவு சிறப்பாகக் காரியங்களை ஆற்றிக்

[திரு. செ. கந்தப்பன்] [1973 ஆகஸ்ட் 7

கொண்டு வருகிறது என்பதற்கான வாதங்களை எடுத்துக் கூறுவது தான். ஆளும் தரப்பில் உள்ள, எதிர்தரப்பில் உள்ள எல்லா உறுப்பினர்களும் பிடிவாத எண்ணத்தோடு இருக்கமாட்டார்கள், ஒரு சில உறுப்பினர்கள் வாதங்களுக்கு, காரண காரியங்களுக்கு, புள்ளி விவரங்களுக்கு மதிப்புத் தருவார்கள் என்ற எண்ணத்தில் நான் ஒரு சிலவற்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

குறிப்பாக திரு. தங்கமணி அவர்கள்—எனக்கே சற்று வியப்பாக இருக்கிறது—இந்து பத்திரிகையில் வெளிவந்த ஒரு வாதத்தைத் தனக்கு ஆதாரமாகப் படித்துக் காண்பித்தார்கள். இந்து பத்திரிகையில் வந்த கருத்து தன்னுடைய மையக் கருத்துக்கு சுற்றுச்சூழலாக அமையப் போகிறது என்று கருதி, அங்கு இருக்கிற சில வரிகளை தனக்குச் சாதகமாக எடுத்துக் காட்டினார்கள். இங்கே அவர் இல்லாவிட்டாலும் கூட நான் அவர்களுக்கு அதே ஏட்டில் வெளிவந்த இன்னொரு வாதத்தை எடுத்துக் காட்ட விரும்புகிறேன். அவர் இங்கே இல்லை என்று குறிப்பிட்டதற்குக் காரணம், பொதுவாக ஒரு தீர்மானத்தைக் கொண்டு வருகிற நண்பர் (குறுக்கீடு)....தங்கமணி அவர்கள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. பின்னாலே உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய நன்மைக்காக அவர்களுக்கு ரொம்ப விருப்பமான அவரே மேற்கோள் காட்டிய அதே இந்து பத்திரிகையிலிருந்து ஒரு மேற்கோளைத் தங்கள் அனுமதியோடு எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

விலைவாசி ஏற்றத்தைப் பற்றிப் பேசுவதில் அவர்கள் அதிக நேரத்தைச் செலவிட்டார்கள். நண்பர் வெங்கடாசலம் அவர்களும் அது குறித்து அதிக நேரம் பேசினார்கள். இது குறித்து இந்து பத்திரிகையில் ஜூலை 7-ம் தேதி வந்திருக்கிற செய்தியிலிருந்து ஒரு சில வாசகங்களைப் படித்துக் காண்பிக்க முற்படுகிறேன். டெல்லியிலிருந்து வந்திருக்கிற ஒரு செய்தி.

'Five leading economists have blamed heavy deficit financing in recent years and the failure of the Government's control mechanism for the present abnormal price rise in the country.'

என்று சொல்லி கீழே அந்த 5 விற்பன்னர்கள் யார் யார் என்ற பெயரையும் கொடுத்திருக்கிறார்கள்.

1973 ஆகஸ்ட் 7] [திரு. செ. கந்தப்பன்]

'They are Dr. Dandekar, Director of the Gokhale Institute of Economics and Politics at Poona, Dr. Ashok Mitra, former Chief Economic Adviser to the Government of India, Prof. M. L. Dantwala of the Indian Society of Agricultural Economics, Dr. D. Bright Singh, Member of the Tamil Nadu Planning Commission and Mr. Chimanbhai Patel, Gujarat Planning Minister.

இதுபோல பொருளாதார விற்பன்னர்கள் காரணங்கள் காட்டி ஆணித்தரமாக அவர்கள் அந்தக் கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். நான் பொதுவாக விலைவாசி ஏற்றத்தைப் பற்றி என்னுடைய பேச்சில் விளக்கமாகச் சொல்லவேண்டும் என்று விரும்புகிறேன். இருந்தாலும் அந்தக் கருத்துக்குப் போவதற்கு முன்னால் இன்னும் சில—அவர்கள் இங்கே சொன்ன மென்மையான வாதங்களுக்கு—வாதங்கள் என்ற மரியாதையான பதத்தைப் பயன்படுத்தினால் மென்மையான வாதங்கள் என்று சொல்லலாம் என்று நினைக்கிறேன்—ஒரு சிலவற்றிற்கு நான் பதில் சொல்லிவிட விரும்புகிறேன்.

பி.ப. 12-30

நம்முடைய நண்பர் வெங்கடசாமி அவர்கள் இந்த அரசின் மீது நம்பிக்கை இல்லை என்ற புளித்த வார்த்தைகளையே சொன்னார்கள். 170-க்கு மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட இந்தக் கட்சியின் அமைச்சரவை மீது நம்பிக்கை இல்லை என்று சொன்னால் அந்த வாதத்தை என்னவென்று சொல்வது? ஒரு பேச்சுக்காக வேண்டுமானால் அவர்களுடைய வாதத்தை நான் ஒப்புக் கொள்கிறேன். இங்கே சட்டம் படித்தவர்கள், சட்டம் தெரிந்தவர்கள் பல பேர் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். இந்த நாட்டில் ஒரு முறை மக்களுடைய ஆதரவைப் பெற்று ஆட்சிக்கு வந்தால் அவர்கள் விரும்புகிறவரையில் ஆளுவார்கள். ஆட்சிக்கு வந்த பிறகு அவர்களை மக்கள் விரும்புகிறார்களா இல்லையா என்பதை அறிந்துகொள்வதற்கு ஏற்ற இடைவெளி ஐந்தாண்டு காலம் என்று மிக மிகப் பெரியவர்கள், மெத்தப் படித்தவர்கள், நமது அரசியல் நிர்ணயச் சட்டத்தை உருவாக்கியவர்கள் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்; அதையே முடிவு செய்திருக்கிறார்கள்.

ஒருவேளை இந்த நாட்டில் தேர்தல் நடைபெற்று, அமைச்சரவை அமைக்கப்பட்டு, சில அசாதாரணமான சூழ்நிலைகளில் ஒரே மாதத்தில் கூட அமைச்சரவை மாறியிருக்கக் கூடும். அது என்றும் நடக்கக்கூடாத ஒன்றல்ல. மக்களாட்சி நடைபெறும்

[திரு. செ. கந்தப்பன்] [1973 ஆகஸ்ட் 7

எந்த நாட்டிலும் ஒன்று அல்லது இரண்டு மாத காலத்தில் மக்கள் கருத்து மாறி இருந்தால் அது வரவேற்கப்படும். சட்டப்பூர்வ மாக அதை ஆதரிக்கலாம் என்பதை எல்லோரும் ஒப்புக் கொள்வார்கள்; ஒப்புக்கொள்ள வேண்டிய ஒன்று. அப்படி இருக்கும்போது மக்கள் விரும்புகின்ற ஆட்சியின்மீது நம்பிக்கை இல்லை என்று சொல்லும்போது, இந்த ஐந்தாண்டுக் காலத்திற்குள் இந்த அமைச்சரவையை மாற்றிவிட வேண்டும் என்று சொல்லும் போது, அவர்கள் இந்த அரசியல் சட்டத்தின் மீது நம்பிக்கை இல்லை என்று சொல்வதற்கு ஒப்பாகும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மக்கள் உங்கள்மீது நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் என்று நீங்கள் சொல்வதை நாங்கள் மறுக்கவில்லை. யார் மீது நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் என்பதை ஐந்தாண்டு கால இடைவெளிக்குப் பின்னால் நடைபெறும் தேர்தல் மூலம் தெரிந்துகொள்ளலாம். சில வாரங்களுக்கு முன்னால் திருநெல்வேலி மாவட்டத்திற்கு முதலமைச்சரவர்கள் சென்றிருந்தார்கள். அவர்களோடு நானும் செல்லக்கூடிய ஒரு வாய்ப்பு ஏற்பட்டது. அங்கே நடைபெற்ற நிகழ்ச்சிகளை எனக்கும் காணக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டது. முதலமைச்சர் அவர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் கூடியிருந்த மக்கள் வெள்ளத்தைப் பார்த்தபோது, இவ்வளவு மக்கள் திருநெல் வேலியில் இருக்கிறார்களா என்ற ஆச்சரியம் எனக்கு ஏற்பட்டது. அவ்வளவு கூட்டம் கூடியிருந்தது. உங்கள் கண்ணோட்டத்தில் வேண்டுமானால் மக்கள் உங்கள் பக்கம் இருக்கிறார்கள் என்று தெரியலாம். எங்கள் கண்ணோட்டத்தில் மக்கள் எங்களைத்தான் ஆதரிக்கிறார்கள் என்று நாங்கள் நம்புகிறோம். ஆக, யார் பக்கம் மக்கள் இருக்கிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்வதற்காகத்தான் அரசியல் சட்டத்திலேயே ஐந்தாண்டுக் கால இடைவெளியிட்டு தேர்தல் நடத்திப் பார்க்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள்.

உங்களிடம் உறுப்பினர்கள்தான் இருக்கிறார்கள்; மக்கள் இல்லை என்று வேண்டுமானால் நீங்கள் சொல்லலாம். அது பொருந்தாத வாதம், தகாத வாதம், அகற்றப்பட வேண்டிய வாதம் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். வீணை விவாதங்களை விட்டுவிட வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

1973 ஆகஸ்ட் 7] [திரு. செ. கந்தப்பன்]

இங்கே ஒரு குற்றச்சாட்டை அடிக்கடி சொல்லிக் கொண்டிருக் கிறார்கள். எதற்கெடுத்தாலும் ஆளும் கட்சியினருடைய தலையீடு நிர்வாகத்திலே இருக்கிறது என்று சொல்கிறார்கள். கட்சிக்காரர்கள் நிர்வாகத்தில் அதிகமாகத் தலையிடுவதால்தான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுக் குழுவிலே 'நிர்வாகத்தில் தலையீடு கூடாது' என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்று சொல்லப்படுகின்ற வாதத்தை நான் வன்மையாகக் கண்டிக் கிறேன்.

இந்த மன்றத்திலே இருக்கின்றவர்களுக்கு நன்றாகத் தெரியும். 1947-ம் ஆண்டுக்கும் 1967-ம் ஆண்டுக்கும் இடையே மக்கள் பிரதி நிதிகளாக இருந்தவர்கள் எந்த அளவுக்கு ஆட்சியை அணுகி தங்கள் காரியங்களை ஆற்றிக் கொண்டார்களோ அதை விட மிக மிகக் குறைவாகத்தான் 1967-க்குப் பிறகு ஆட்சியை—அமைச்சர் களையும் அதிகாரிகளையும்—அணுகியிருக்கிறார்கள் என்பதை அழுத்தம் திருத்தமாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இதிலே ஒரே ஒரு வேறுபாடு என்னவென்றால், கடந்த காலத்தில் இருந்தவர்கள் தங்களுடைய லிட்டுக்கு அதிகாரிகளை வரவழைத் துக்கொண்டிருந்தார்கள். அல்லது தொலைபேசியின் மூலமாகவே தங்கள் காரியங்களைச் செய்து கொண்டிருந்தார்கள். அந்த அளவுக்குத் தங்கள் அதிகாரத்தை, தங்கள் செல்வாக்கைப் பயன் படுத்திக் கொண்டிருந்தார்கள். ஆனால் இன்றைக்கு இருப்பவர்கள் மிக மிகச் சாதாரணமானவர்கள்; சாமானியர்களுக்காகவே ஆட்சி நடத்திக் கொண்டிருப்பவர்கள்; சாமானியர்களின் நியாய மான கோரிக்கைகளுக்காக அமைச்சர்களையும் அதிகாரிகளையும் அணுகிக் கொண்டிருப்பவர்கள். நாங்கள் சாதாரணமானவர் களாக இருப்பதால் நியாயமான கோரிக்கைகளுக்காக நேரடி யாகவே அணுகிக்கொள்கிறோம்.

தவறான காரியங்களுக்காக அதிகாரிகளை ஆளும் கட்சிக் காரர்கள் அணுகிக்கொண்டிருக்கிறார்கள் என்ற வாதம் எழக் கூடாது என்பதற்காக கலைஞர் அவர்கள் பெருந்தன்மையோடு இந்தத் தீர்மானத்தைப் போட்டார்கள். வர வர எங்கள் கலைஞர் அவர்கள் எதிர்க் கட்சிக்காரர்களிடம் மிகப் பெருந்தன்மையோடு நடந்து கொள்கிறார்கள். எங்களுக்கு இருக்கிற சங்கடம் எல்லாம் கலைஞர் அவர்கள் இப்படி நடந்து கொள்கிறார்களே என்பதுதான்.

[திரு. செ. கந்தப்பன்] [1973 ஆகஸ்ட் 7

எதிர்க்கட்சிக்காரர்கள் சொல்வது நியாயமாக இருந்தால் பரவா யில்லே. அவர்கள் சொல்கின்ற வீண் புகார்களுக்கு எல்லாம் கலைஞரவர்கள் பெருந்தன்மை காட்டுகிறார்கள். நாங்கள் எங்கள் தலைவருக்குக் கட்டுப்பட்டவர்கள். அதனால்தான் தான் சொல்வதை மீறமாட்டார்கள் என்று இப்படி நடந்து கொள்கிறார்களே தவிர வேறல்ல.

இன்றைக்கு எந்த நாடாளுமன்றத்திலும் அல்லது சட்ட மன்றத்திலும் இவ்வளவு எண்ணிக்கையுள்ள உறுப்பினர்களைக் கொண்ட ஆளும் கட்சி இருப்பதாகத் தெரியவில்லே. அப்படி இருந்தாலும் எதிர்க் கட்சியினுடைய தேவையில்லாத புகார்களுக் கெல்லாம் செவிமடுக்கிறார்கள் என்றால் அது எங்கள் தலைவர்களுடைய பெருந்தன்மைதான். அதனால்தான் இங்கே எதிர்க்கட்சிகளுக்கு பேசுவதற்கு அதிகமான ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுத்து, பெருந்தன்மையோடு தாராளமாக நடந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவேதான் ஆளும் கட்சியினருக்கு எச்சரிக்கையாக பொதுக்குழுவிலே இப்படி ஒரு தீர்மானத்தைப் போட்டிருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஊழல் குற்றச்சாட்டைப் பற்றி நான் ஒன்றும் பேசவிரும்ப வில்லே. காரணம் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்திலே அதைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லே. இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்து பேசிய நண்பரும் அதைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லே.

அடுத்து, மதுவிலக்குக் கொள்கையைப் பற்றி நண்பர் வெங்கட சாமி அவர்கள் குறிப்பிட்டார்கள். அவர்களுடைய உரையிலே இராஜாஜி அவர்களையும் இழுத்துக் கொண்டார்கள். வெங்கடசாமி அவர்கள் சார்ந்திருக்கின்ற கட்சியைச் சேர்ந்தவர்தான் பிஜுமோடி அவர்களும். அவர் நாடாளுமன்ற உறுப்பினர்; அகில இந்திய சுதந்திராக் கட்சித் தலைவர். மதுவிலக்குக் கொள்கையில் வெங்கடசாமி அவர்களின் கருத்திலிருந்து அவர் மாறுபட்டவராக இருக்கிறார். சமீப காலத்தில் மதுவிலக்கை நாம் மீண்டும் அமுல்படுத்தப் போகிறோம் என்பதை அறிந்து அவர் சிறிது ஆத்திரமடைந்தார். மது நாட்டிலே அனுமதிக்கப்பட வேண்டும் என்பது அவருடைய தீவிரமான வாதங்களிலே ஒன்று. இந்த

1973 ஆகஸ்ட் 7] [திரு. செ. கந்தப்பன்]

விஷயத்தில் நண்பர் வெங்கடசாமி அவர்கள் தன்னுடைய கட்சித் தலைவரைக் கலந்து கொண்டு கருத்துக்களைச் சொன்னால் நன்றாக இருக்கும். வெங்கடசாமியின் கருத்தை நிச்சயமாக பிலு மோடி ஆதரிக்கமாட்டார் என்பது எனக்கு உறுதியாகத் தெரியும்.

நான் இவைகளை எல்லாம் சுட்டிக்காட்டிய பிறகு, முன்பு சொன்னதுபோல் விலைவாசி ஏற்றத்தைப்பற்றி ஒரு சிலவற்றை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நான் ஏற்கெனவே சுட்டிக்காட்டியுள்ளதைப்போல பொருளாதார நிபுணர்கள் ஐந்து பேர் மிகச் சிறப்பாக ஒரு அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்கள். அதைப்பற்றி எல்லோரும் நன்றாகத் தெரிந்திருக்கிறோம்.

ஒரு மாநில அரசு எவ்வளவு சிறப்பாகக் காரியம் ஆற்றுகிற அரசாக இருந்தாலும், ஆற்றல் மிக்கதாக இருந்தாலும் நாணயப் புழக்கத்தை மாநில அரசால் கட்டுப்படுத்த முடியாது. சிறந்த மேதைகள், பொருளாதார நிபுணர்கள் எல்லோரும் இதை ஒப்புக்கொள்வார்கள். இன்னும் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். ஒரு மாநில அரசு பற்றுக்குறை நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்கும் மத்திய அரசு பற்றுக்குறை நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்கும் பெருத்த வேறுபாடு இருக்கிறது. மாநில அரசு, பற்றுக்குறை நிதிநிலை அறிக்கையை சமர்ப்பிப்பதானால், அந்தப் பற்றுக்குறையைக் கடன் மூலம் ஈடு செய்ய முடியும்; அல்லது மத்திய அரசு மானியம் பெற்று ஈடுசெய்ய முடியும்; அல்லது ரிசர்வ் வங்கியில் ஓவர்டிராப்ஃட் பெற்றுத்தான் ஈடு செய்ய முடியும். ஆனால் மத்திய அரசு பற்றுக்குறை நிதிநிலை அறிக்கையை சமர்ப்பிப்பதானால், அந்தப் பற்றுக்குறையை நாசிக்கிலே இருக்கிற அச்சகத்திலே காகித நோட்டுக்களை அச்சடித்து ஈடுசெய்து கொள்ள முடியும். இதிலே இருக்கின்ற வேறுபாடுகளை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இப்படி நோட்டுக்களை மேலும் மேலும் அச்சடித்துக் கொண்டிருப்பதால்தான் விலைவாசி ஏறிக் கொண்டிருக்கிறது என்பது நிபுணர்கள் கருத்து. எனவே, நாணயக் கட்டுப்பாடு யாரிடம் இருக்கிறதோ அவர்கள்தான் விலைவாசியைக் கட்டுப்படுத்தும் வல்லமைப் பெற்றவர்கள்.

[திரு. செ. கந்தப்பன்] [1973 ஆகஸ்ட் 7

1934-ம் ஆண்டில் இந்த ரிசர்வ் வங்கி சம்பந்தப்பட்ட மசோதா ஒன்று நாடாளுமன்றத்திலே நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அதிலே நோட்டு அச்சடிப்பதற்கு ஒரு வரம்பற்ற நிலை இருக்கக் கூடாது; வரம்பிற்கு உட்பட்டதாக இருக்க வேண்டுமென்று சொல்லப் பட்டிருக்கிறது. ஆயிரம் கோடிக்கு நோட்டு அச்சடிக்க வேண்டு மென்றால் குறைந்தது 400 கோடிக்கு தங்கம் அல்லது அந்நியச் செலாவணி காப்பு வங்கியில் வைத்திருக்க வேண்டும் என்று சட்டம் இருந்தது. அந்தச் சட்டத்தை 1957-ம் ஆண்டு வரை மாற்றவில்லை. 1957-ல் இதை தங்களுக்கு இடைஞ்சலாக இருக்கிறது என்ற சொல்லி, மாற்றிவிட்டார்கள். ஆயிரம் கோடிக்கு நோட்டு அச்சடிக்க வேண்டுமென்றால் 400 கோடிக்கு தங்கம் அல்லது அந்நியச் செலாவணி காப்பு வங்கியில் இருக்க வேண்டும் என்பதற்குப் பதிலாக 200 கோடிக்கு தங்கம் அல்லது அந்நியச் செலாவணி காப்பு வங்கியில் இருந்தால் எவ்வளவு வேண்டு மானாலும் அச்சடித்துக் கொள்ளலாம் என்று சொல்லி, வெள்ளைக் காரர்கள் காலத்திலே இருந்த சட்டத்தை அடியோடு நீக்கி விட்டார்கள். அதன் விளைவாக இன்றைக்கு நம்முடைய உணவுப் பண்டங்கள் ஏறத்தாழ 100 மடங்கு உற்பத்தி பெருகியிருக்கிறது என்றால் காகிதப் பண உற்பத்தி 300 மடங்கு 400 மடங்கு பெருகி யிருக்கிறது. அதனால்தான் விலைவாசி இந்த அளவுக்கு உயர்ந்து கொண்டே போகிறது. இதை எந்தப் பொருளாதார நிபுணரிடம் கேட்டாலும் ஒப்புக்கொள்வார்கள்.

நோட்டுப் புழக்க அதிகரிப்புக்கு ஏற்ற வகையில் இதர உற்பத்திகள் அதிகரிக்கவில்லை. அதனால் விலைவாசி ஏற்றத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை. இரண்டும் இரண்டும் நான்கு என்பது எவ்வளவு கெட்டியோ அதைப்போலத்தான் இதுவும் கெட்டி யாகும். ஆகவே, காகிதப் பணத்தை யார் வெளியிடுகிறார்களோ, நாணயக் கட்டுப்பாட்டை யார் வைத்திருக்கிறார்களோ அவர்கள் தான் விலைவாசி ஏற்றத்திற்குப் பொறுப்பேற்றுக்கொள்ளவேண்டும். பதில் சொல்ல வேண்டும் என்பதை அழுத்தம் திருத்தமாகத தெரி வித்துக்கொள்கிறேன்.

அப்படி இருக்கும்போது, தன்னுடைய கடமையைச் செவ்வனே செய்துகொண்டிருக்கிற ஒரு அரசைப் பார்த்து, அதுவும் அகில இந்தியாவிலேயே உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்றிருக்கிற

1973 ஆகஸ்ட் 7] [திரு. செ. கந்தப்பன்]

ஒரு அரசைப் பார்த்து இந்த அரசுதான் விலைவாசி ஏற்றத்திற்குக் காரணம்; அதனால் இந்த அரசின்மீது நம்பிக்கையில்லை என்று சொல்லுகின்ற வாதம் முற்றிலும் பொருந்தாத வாதம்; நியாய மற்ற வாதம் என்பதை அவர்களே உணர வேண்டும்.

அவர்களுடைய இன்னொரு வாதம் கள்ளப் பணத்தைப் பற்றியது. கள்ளப் பணத்தை மாநில அரசு கண்டுபிடிக்கவில்லை; நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொல்கிறார்கள். கள்ளப் பணத்தைக் குறித்து மாநில அரசு என்ன நடவடிக்கை எடுக்க முடியும்? ஒரு மாநில அரசு அதிலே நடவடிக்கை எடுக்க முடியாது. மாநில அரசு யாருக்காவது இந்தக் காரியத்தில் உதவி செய்வதாக இருந்தாலும், ஒரு மாநிலத்திலே ஒரு அமைச்சர் அல்லது சட்டமன்ற உறுப்பினர் அல்லது எதிர்க்கட்சித் தலைவர், அல்லது வேறு யார் கள்ளப்பணம் வைத்திருந்தாலும் மாநில அரசைக் கேட்காமலேயே மத்திய அரசு கள்ளப்பணம் வைத்திருப் பவர்களைக் கண்டுபிடித்து அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கலாம். ஆக, கள்ளப் பணத்தைக் கண்டுபிடிப்பதில் மத்திய அரசு தீவிர மாக இருந்தால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்க முடியும். அரசியல் சட்டத்தில் அதற்கு இடம் இருக்கிறது. அவர்களிடத் திலே 'இன்வெஸ்டிகேஷன் அண்டு விஜிலன்ஸ்' பிரிவு இருக்கிறது. அப்படி இருக்கும்போது, அவர்களை விட்டுவிட்டு, மாநில அரசைக் குறை கூறுவதில் என்ன நியாயம் இருக்கிறது என்பதுதான் எனக்குப் புரியவில்லை. வருமான வரி இலாகாவை வைத்துக் கொண்டிருக்கிற அவர்கள்மீது ஜாழல் குற்றச்சாட்டைச் சொல் வதை விட்டுவிட்டு, மாநில அரசின் மீது சொல்வது எந்த அடிப் படையில் பொருத்தமான வாதமாக இருக்க முடியும்?

ஒருவன் ஒரு லட்சம் ரூபாய் அல்லது இரண்டு லட்சம் ரூபாய் ஒருவனுக்கு லஞ்சம் கொடுப்பதாக இருந்தால் அந்தப் பணத்திற்கு ரசீது இல்லாமல் இருக்கலாம். வெங்கடசாமி அவர்கள் அதைத் தான் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தார்கள். லஞ்சம் வாங்குகிறவனும் அதற்கு ரசீது கொடுப்பதில்லை; லஞ்சம் கொடுப்பவனும் அதற்கு ரசீது கேட்பதில்லை. ஆனால், ஒரு தனிப்பட்ட மனிதன், தன்னு பொருளாதாரத்தை, பொருளாதார வளர்ச்சியை வருமான வரி இலாக்கா அலுவலர்கள் கண்ணில் இருந்து எப்படி மறைக்க முடியும்? அந்த வருமான வரி இலாக்கா

[திரு. செ. கந்தப்பன்] [1973 ஆகஸ்ட் 7

அலுவலர்கள் தங்கள் பணிகளைச் செம்மையாக நடத்துவார்களேயானால் யாருக்கும் தமது வருமானத்தை மறைக்க முடியாது. வருமான வரி இலாக்கா மாநில அரசாங்க நிர்வாகத்திற்குச் சம்பந்தம் இல்லாதது; மத்திய அரசின் நேரடிப் பார்வையில் இயங்கிக் கொண்டிருப்பது. இப்படி மாநில அரசுக்குச் சம்பந்தம் இல்லாது, மத்திய அரசின் நேரடிப் பார்வையில் இயங்கிக் கொண்டிருக்கிற சில நேரங்களில் தவறுகள் செயல்பட்டு இருப்பதாக ஏற்கனவே குற்றம் சாட்டப்பட்டிருக்கிற வருமான வரித்துறை செம்மையாகச் செயல்படவில்லை என்றால் அதற்காக இந்த அரசாங்கத்தைக் குற்றம் சாட்ட முடியாது.

கள்ளப் பணப் புழக்கத்தைக் கண்டுபிடிக்கவில்லை என்றால் அந்தக் குற்றம் மத்திய அரசைச் சாரும்; டாக்டர் கலைஞர் அவர்களுடைய இந்த அரசைச் சாராது என்று சொல்ல விரும்புகிறேன். அந்த இலாக்காவைப் பயன்படுத்தி மத்திய சர்க்கார் ஏன் இவற்றை எல்லாம் கண்டுபிடிக்கவில்லை? மாண்புமிகு உறுப்பினர் எம்.ஜி.ஆர். அவர்கள் 11 லட்சம் வருமான வரி பாக்கி என்பதாக மிகத் திட்டவட்டமாக, பாராளுமன்றத்தில் அறிவிக்கப்பட்டிருக்கிறது; மேல்சபையில், கீழ்சபையில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த இரண்டிலும் அறிவிக்கப்பட்டவர், ஏற்கனவே அந்நியச் செலாவணியில் சம்பந்தப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டவர், மீண்டும் அந்நியச் செலாவணியைப் பயன்படுத்தி படம் தயாரிக்க மாஸ்கோவுக்கு அனுப்பப்பட்டிருக்கிறார். கள்ளப் பணத்தைத் தவிர்க்கவும், பொருளாதார சீர்கேலைத் தடுக்கவும் முற்பட வேண்டிய நிலையில் ருஷ்யாவுடன் சேர்ந்து படம் தயாரிக்க அவரை உற்சாகப்படுத்தியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமை இருக்கிறபோது...

திரு. கே. ஏ. மதியழகன்: சார், ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். அவர் தெரிவித்த விவரங்களை நான் ஆட்சேபிக்கிறேன். அதுவும் சம்பந்தப்பட்ட உறுப்பினர் இந்த அவையில் இல்லாத நேரத்தில் அவரைப்பற்றிப் பேசுவது சரியானது அல்ல. அதைச் சபை நடவடிக்கையில் இருந்து எடுத்துவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

1973 ஆகஸ்ட் 7]

**மாண்புமிகு மாற்றுத் தலைவர்:** (திரு. நா. வீராசாமி) நாடாளுமன்றத்தில் அறிவித்திருக்கிறார்கள், பேசியிருக்கிறார்கள் என்றுதான் அவர் குறிப்பிட்டார்.

**திரு. கே. ஏ. மதியழகன்:** எஸ். எஸ். ஆர். பற்றியும் தான் சொல்லியிருக்கிறார்கள். எம். ஆர். ராதாவைப்பற்றியும்தான் சொல்லியிருக்கிறார். நாடாளு மன்றத்தில் அறிவிக்கப்பட்டிருக்கிறது என்பதாக இங்கே குறிப்பாக ஒரு மாண்புமிகு உறுப்பினரைப்பற்றி எடுத்துச்சொல்வது இந்த மன்றத்தை துஷ் பிரயோகம் செய்வதாகத்தான் ஆகும்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி):** நாடாளு மன்றத்தில் ஒரு அமைச்சர் குறிப்பிட்டிருக்கிறார் என்று இங்கே அவர் கூறியதில் தவறு என்ன?

**திரு. கே. ஏ. மதியழகன்:** நீங்கள் இங்கே எந்தச் சபையை நடத்துகிறீர்கள்?

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி):** நீங்கள் இருந்து நடத்திய அதே சபையைத்தான் நான் நடத்து கிறேன். அதில் எந்தவிதமான சந்தேகமும் வேண்டாம்.

THIRU K. M. SUBRAMANIAM: Leaving arrears is not evasion.

**திரு. கே. ஏ. மதியழகன்:** வருமான வரி பாக்கி என்று சொல்கிறார்களே, இது பொறுப்பான பேச்சுதானே? மன்றத்தின் முன்னால் இன்று இருக்கும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கும், இதற்கும் என்ன சம்பந்தம்? இந்த மன்றத்தில் அந்த உறுப்பினர் இல்லாதபோது அதைச் சொல்வது உரிமையை துஷ்பிரயோகம் செய்வதாக ஆகுமே தவிர, வேறு அல்ல.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி):** மதிப்பிற்குரிய மதி அவர்கள் இங்கே தலைவராக இருந்திருக் கிறார்கள். திரு. கந்தப்பன் இங்கே சொன்னது நாடாளு மன்றத்தில் மத்திய அமைச்சர் ஒருவரால் அறிவிக்கப்பட்ட செய்தி ஒன்றைத்தான்.

[1973 ஆகஸ்ட் 7

**திரு. கே. ஏ. மதியழகன்:** How is it relevant? How is it pertaining to the No Confidence motion? எந்த முறையில் அது இன்று பேரவையின் முன்னுள்ள விவாதத்தை யொட்டி வருகிறது?

**மாண்புமிகு மாற்றுத் தலைவர்: (திரு. நா. வீராசாமி):** குற்றச்சாட்டு என்று சொல்லும்போது அதை நடத்தியவர் என்ற முறையில் சொல்லலாம்.

**திரு. முனு ஆதி:** தலைவர் அவர்களே, அவருடைய வருமான வரி பாக்கியை பாராளுமன்றத்தில் வைத்திருப்பதாகச் சொன்ன தோடு நிற்கவில்லை. அதை ஈடுகட்ட, அந்நியச் செலாவணியை சரிக்கட்ட ருஷ்யா போயிருக்கிறார் என்று சொல்வது நியாயம் தானே?

**திரு. க. சுப்பு:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கந்தப்பன் பேசியபோது எம்.ஜி. ஆர்.-ஐ மாத்திரம் சுட்டவில்லை. இன்னொரு நாட்டையும் சேர்த்துச் சொல்லியிருப்பதால் அதைச் சபை நடவடிக்கைக் குறிப்பில் இருந்து விலக்கிவிடுவது நல்லது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி):** அவர் என்ன சொன்னார் என்பதை அவரே விளக்கிவிடட்டும்.

**திரு. செ. கந்தப்பன்:** நண்பர் சுப்பு அவர்கள் ஒரு நாட்டைச் சேர்த்து ஏதோ சொல்லிவிட்டதாகச் சொன்னார்கள். நான் அதை விளக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ருஷ்ய நாட்டிடம் எனக்கு மரியாதை உண்டு....

**திரு. கே. ஏ. மதியழகன்:** முதலில் அவர் இந்த மன்ற உறுப்பினரைப்பற்றி, ஒரு கட்சித் தலைவரைப்பற்றி சொன்னதைத் திரும்பப் பெற வேண்டும். அதற்கு நீங்கள் நிர்ப்பளிக்க வேண்டும்.

(திரு. முனு ஆதி எழுந்திருந்தார்)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி):** அவர் என்ன சொன்னார் என்பதைத்தான் விளக்கும்படி அவரைச் சொன்னேன்.

1973 ஆகஸ்ட் 7]

**திரு. முனு ஆதி:** ரிப்போர்ட்டர்கள் தான் எழுதியிருக்கிறார்களே, அவரையே இங்கே என்ன எழுதியிருக்கிறார் என்பதைப் படிக்கச் சொல்லுங்கள்.

(திரு. என். கணபதி, திரு. துரைமுருகன், திரு. கே. எம். சுப்பிரமணியம் குறுக்கிடு.)

**திரு. கே. ஏ. மதியழகன்:** (அவை முன்னவரைப் பார்த்து) அவை முன்னவர் என்று நீங்கள் இங்கே உட்கார்ந்துகொண்டிருக்கிறீர்களே, நீங்கள் பதில் சொல்ல வேண்டாமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** திரும்பத் திரும்ப நீங்களே பேசிக்கொண்டிருப்பதால் பயன் என்ன? திரு. கந்தப்பனைப் பேசவிடுங்கள். அவர் விளக்கம் கொடுக்கிறார். (அவையில் ஒரே கூச்சல், குழப்பம்.)

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, திரு. கந்தப்பன் அவர்கள் என்ன பேசினார் என்பதை அவரே விளக்கிச் சொல்லட்டும். அதில் ஏதாவது ஆட்சேபகரமான விஷயமிருந்தால் அதைத் தாங்கள் நீக்கலாம்.

THIRU V. KRISHNAMOORTHI: Nobody has challenged what I had said.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர்: (திரு. நா. வீராசாமி):** திரு. முனு ஆதி எழுந்தவுடனே நான் அதைத்தான் சொன்னேன். அவர் தவறுகப் பேசவில்லை, எனினும் என்ன பேசினார் என்பதை அவரே முதலில் விளக்கிவிடட்டும் என்று சொன்னேன்.

**திரு. முனு ஆதி:** பேசச் சொல்லிவிட்டு நீங்கள் சொல்லுங்கள். தவறுகப் பேசவில்லை என்று நீங்களே சொல்லிவிடாதீர்கள்.

**திரு. கே. எம். சுப்பிரமணியம்:** வருமான வரி பாக்கி இருப்பது ஒரு க்ரைமா? அந்நியச் செலவாணியை ஏடுகட்ட போயிருக்கிறார் என்பது சரிதானே?

**திரு. என். கணபதி:** பேரவைத் தலைவர் அவர்களே, அந்நியச் செலாவணியைப்பற்றிப் பேசியது எந்த முறையில் தவறு என்பதைத் தெரிவிக்கவேண்டும்.

[1973 ஆகஸ்ட் 7

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**திரு. கே. டி. கே. தங்கமணி :** சார் ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர் செய்ஸ் பண்ணியிருக்கிறார்கள். அதற்குத் தங்கள் ரூலிங்கைத் தெரிவிக்கவேண்டும். இந்த அவை உறுப்பினர் ஒருவரைப்பற்றி—அவருக்கு இன்கம்டாக்ஸ் அரியர்ஸ் இருக்கலாம்—அதைச் சரிக்கட்ட ருஷ்யா போன்ற நாடுகளுக்குச் சென்றிருக்கிறார் என்று சொல்வது உரிமையை பாதிப்பதாகும். அம்மாதிரி ஒரு உறுப்பினரைப் பற்றி அவர் இந்த அவையில் இருக்கிற நேரத்தில் சொன்னலும் தவறுதான். இல்லாத நேரத்திலே சொன்னது கொஞ்சங்கூடச் சரியில்லை. அது ரெக்கார்டில் இருக்கிறது. 'அதில் என்ன தப்பு, அப்படிப் பேசுவது சரிதான்' என்ற அளவுக்கு சில கருத்துக்கள் இங்கே இருக்கிறது. ஆகவேதான் தாங்கள்—ஒரு உறுப்பினரைப்பற்றி எந்த அளவுக்குப் பேசலாம் என்பது பற்றி ரூலிங் கொடுத்தால் சரியாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. கந்தப்பன் அவர்கள் என்ன பேசினார் என்று அவரே விளக்கம் கொடுக்கட்டும்.

**திரு. செ. கந்தப்பன் :** விலைவாசி ஏற்றத்திற்கு என்ன காரணம் என்பதுபற்றி, மாநில அரசின்மீது அவர்கள் சொன்ன குற்றம் சரியில்லை யென்று சொல்ல வந்தேன். மத்திய அரசு புதிதாக நோட்டு அடிப்பது விலைவாசி ஏற்றத்திற்குக் காரணமாக இருக்கிறது என்பதையும், கள்ளப் பணம், பற்றாக்குறை ஆகியவை தான் இதற்குக் காரணம் என்பதையும் சொல்ல வந்தேன். அப்பொழுதுதான் ரூ. 11 இலட்சம் வருமான வரி பாக்கி இருக்கிறது, அது இன்னும் வசூலிக்கப்படவில்லை. இதுபோல் வருமான வரி எல்லாம் பாக்கி இருக்கிற நிலையில் அவரே வேறு ஒரு சூழ்நிலையில், ஏற்கனவே எடுத்துக் கொண்ட ஒரு படம் சம்பந்தமாக அன்னியச் செலாவணிச் சிக்கல் இருப்பதாக இங்கே உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி அவர்களால் சொல்லப்பட்டது. அந்தப் பிரச்சினை தீர்வதற்கு முன்னலேயே மீண்டும் ஒரு பட ஒப்பந்தத்திற்கு மாஸ்கோ அனுப்பப்பட்டிருக்கிறார் என்பது என்னுடைய வாதம்.

1973 ஆகஸ்ட் 7] [திரு. செ. கந்தப்பன்]

ஆரம்பத்திலே நீங்கள் சொன்னீர்களே ஒரு அறிவுரை, வார்த்தைகளிலே கடுமையில்லாமல், வாதத்திலே கடுமை வேண்டுமென்று. அந்த வகையிலே வார்த்தைகளிலே கடுமையில்லாமல் பேசுபவன் நான். 10 ஆண்டுகாலமாக பாராளுமன்றத்திலே இருந்ததிலே ஒரு முறையாவது சொல்லியதைத் திரும்பப் பெறக்கூடிய நெருக்கடிக்கு நான் ஆளானதில்லை. அவ்வளவு நிதானத்தோடு பேசி இருக்கிறேன் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கே. ஏ. மதியழகன்**: இது சரியானது என்று சொல்கிறீர்களா? இப்படிப் பேசலாமா?

**திரு. முனு ஆதி**: அவர் முன்னே பேசியது இதுவல்ல. நீங்கள் குறிப்பைப் பாருங்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி**: இப்பொழுது கந்தப்பன் அவர்கள் பேசியதைத் தவிர வேறு ஏதாவது குறிப்புப் புத்தகத்திலே இருந்தால் அதை நீங்கள் நடவடிக்கைக் குறிப்பிலிருந்து எடுத்துவிடலாம்.

**திரு. கே. ஏ. மதியழகன்**: முன்னால் அப்படிப் பேசினரே ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: ஒரு உறுப்பினர் ஒரு கருத்தைப் பேசிக் கொண்டு வருகிறார். அதிலே விளக்கம் கேட்கிற நேரத்திலே பின்னால் ஒரு கருத்தைச் சொன்னால் அதுதான் உறுதிப்படும். (குறுக்கீடு) தவறான கருத்துக்கள் சொல்லப்பட்டிருந்தால், இப்பொழுது சொல்வது தவிர வேறு ஏதாவது கருத்துக்கள் சொல்லப்பட்டிருந்தால் அவை நடவடிக்கை—நிகழ்ச்சிக் குறிப்பிலிருந்து நீக்கப்படும் என்று சொல்லியபிறகு, அந்தக் கருத்துத்தான் இருக்கும்.

**திரு. கே. ஏ. மதியழகன்**: இப்பொழுது சொன்னதெல்லாம் சரியென்று சொல்கிறீர்களா? சூ. 11 இலட்சம்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: ஆம், சரி. திரு. கந்தப்பன் தொடர்ந்து பேசுவார்.

**திரு. முனு ஆதி**: நாங்கள் சொல்ல உரிமை கொடுங்கள்.

[1973 ஆகஸ்ட் 7

**திரு. கே. ஏ. மதியழகன்:** நாங்கள் கேட்டதற்கு ரூலிங் கிடையாதா? இப்பொழுது அவர் சொன்ன தெல்லாம் சரியான தென்று சொல்கிறீர்களா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் முன்னே இப்பொழுது சொல்லிய கருத்துக்களுக்கு மாறுகச் சொல்லியிருந்தால் அவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கப்படும். இப்பொழுது சொன்ன கருத்துக்கள் சரியானது.

**திரு கே. ஏ. மதியழகன்:** எப்படிச் சரியானது?

**திரு. இராம அரங்கண்ணல்:** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார். தலைவர் அவர்களே, ஒரு பிரச்சினை மீது தாங்கள் தீர்ப்பு வழங்கிய பிறகு தங்களுடைய தீர்ப்பு சரியானதா என்று (குழுக்கிடு) தீர்ப்பு வழங்கிய பிறகு பொறுப்புள்ள ஒரு உறுப்பினர் எழுந்து கேட்பது சரியா என்று நான் அறிய விரும்புகிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM: I rise on a point of Order, Sir. Our friend Thiru Kandappan has spoken and you have given your ruling on it. His latest speech gives the report that Thiru M. G. Ramachandran is in arrears of Rs. 11 crores, I am sorry only Rs. 11 lakhs. Having arrears is not a crime, Sir. Even when you get income-tax clearance certificate, your arrears is mentioned. So having arrears is not a crime. The hon. Member is making a speech in which he is creating an image that Thiru M. G. Ramachandran has committed a crime and that he had gone to Russia to hide it. That is the impression in the latter part of the speech of Thiru Kandappan. I say, Sir, that arrears is not evasion and raising issue of income-tax arrears in this House is not correct since the State is not concerned with the subject of income-tax.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கந்தப்பன் இப்பொழுது பேசியதிலே எந்தவிதமான தவறும் இல்லை, முறை தவறுகப் பேச வில்லை. திரு. கந்தப்பன் தொடர்ந்து பேசுவார்.

**திருமதி த ந. அனந்தநாயகி:** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், சார். திரு. கந்தப்பன் அவர்கள் எப்பொழுது பார்த்தாலும் மத்திய அரசாங்கம் என்ன செய்தது, மத்திய அரசாங்கம் என்ன

1973 ஆகஸ்ட் 7] [திருமதி த. ந. அனந்தநாயகி]

செய்தது என்று இங்கே கேட்டுக் கொண்டிருக்கிறார். அவருடைய கட்சிப் பாராளுமன்றப் பிரதிநிதிகள் அங்கே கேட்டால், அங்கே அமைச்சர் பதில் சொல்வார். இங்கே இருந்துகொண்டு நேரத்தை வீணாக்கிக் கொண்டு மத்திய சர்க்கார் என்ன செய்தது, என்ன செய்தது, என்று கேட்பது—

It is irrelevant to the whole issue and it should not be permitted by the Hon. Speaker.

THIRU S. KANDAPPAN : Hon. Members from the Opposition are trying to make a subtle distinction between 'evasion' and 'arrears'. Let me tell my humble point of view.

திரு. கே. ஏ. மதியழகன் : இது சூலிங்தானே? நோ-கான் பிடனஸ் மோஷனுக்கு இது உகந்ததுதானே?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆம் இதுதான் என் சூலிங்.

திரு. கே. ஏ. மதியழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுடைய தீர்ப்பையும், நீங்கள் சட்டமன்றம் நடத்துகிற முறையையும், இந்தச் சட்டமன்றத்திற்கு ஆளும் கட்சி காண்பிக்கின்ற முறையையும் எதிர்த்து வெளியேறுகிறோம்.

(அண்ணா தி.மு.க. உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்)

*திரு. செ. கந்தப்பன் : சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, விலைவாசி ஏற்றம்தான் இங்கே நண்பர் கே. டி. கே. தங்கமணி அவர்களாலேயும் வெங்கடசாமி அவர்களாலேயும் மையமான ஒரு கருத்தாகச் சுட்டிக் காட்டப்பட்டது. விலைவாசி ஏற்றத்திற்கு அதைத்தடுக்க எல்லா ஏற்பாடுகளையும் செய்தும் மாநில அரசு முழு காரணம் அல்ல, மைய அரசுதான் முழுக் காரணம் என்பதை நான் எடுத்துக்காட்டிக்கொண்டு வந்தேன்.

வரி பாக்கிக்கும், வரியைக் கட்டாமல் ஏமாற்றுவதற்கும் வேறுபாடு இருப்பதாக இங்கே குறிப்பிட்டார்கள். ஏமாற்றத் திற்கும் பாக்கிக்கும் வேறுபாடு இருக்கிறது என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன் சட்டபூர்வமாக. ஆனால், வசூலிக்கப்படாமல்

[திரு. செ. சுந்தப்பன்] [1973 ஆகஸ்ட் 7

இருக்கிற வரி, பொருளாதாரத்தைப் பாதிக்கிற வகையில் இந்த இரண்டிலுமே ஏற்படுகிற பலன்கள் ஒன்றுதான் என்பதை நாம் மறுக்க முடியாது. இன்றைக்கு வரி பாக்கியாக, அகில இந்தியாவில் ரூ. 600, ரூ. 700 கோடி அளவுக்கு மேலே இருப்பதாக சொல்கிறார்கள். வரி கட்டக் கூடியவர்கள், தாங்கக் கூடியவர்கள், அவர்களிடத்திலேயிருந்து ரூ. 600, ரூ. 700 கோடிக்கு வரி வசூலிக்காமல் இருப்பதுதான் ஏழை எளியவர்கள் பயன்படுத்துகிற பெட்ரோல் போன்ற பண்டங்களின்மீது வரி போடவேண்டிய நெருக்கடியை மத்திய அரசுக்கு ஏற்படுத்துகிறது.

லோகப் பார்க்கும்போது மாறுபாடு இருக்கலாமே தவிர, நமது பொருளாதாரத்தைத் தாக்குகிற வகையிலே இரண்டும் ஒன்றுதான் என்பதை மறந்துவிட வேண்டியதில்லை. மீண்டும் நான் வலியுறுத்திச் சொல்ல விரும்புவது, மாநில அரசு என்னதான் முயற்சி எடுத்தாலும், இன்றைக்கு காப்பு வங்கியின் மூலமாக நாணயச் செலாவணியைக் கட்டுப்படுத்தியாகவேண்டும். நாணயச் செலாவணியை முழுமையாகக் கட்டுப்படுத்த வேண்டியது மத்திய அரசுதான் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கள்ளப் பணத்தைக் கட்டுப்படுத்த வேண்டும். இதற்கான அதிகாரத்தை, அங்கீகாரத்தைப் பெற்றுள்ளவர்கள், பொறுப்பிலே உள்ளவர்கள் முயற்சி எடுக்கவேண்டும். இதனால் ஏற்படுகிற சீர்கேடுகளை மாநில அரசு சீர்படுத்த முடியாது என்பதை நான் இச்சமயத்தில் தெரிவிக்க விரும்புகிறேன்.

ருமான வரித் துறை, உளவுத் துறை, அதற்கு மேலே மற்ற துறைகளை எல்லாம் வைத்துக்கொண்டு, கண்டுபிடிக்கிற வாய்ப்பு இருந்தும் அதைச் செய்யாமல் ஊழல் பட்டியல் என்கிற பெயராலே அரசியல் நடத்துவது அழகல்ல என்பதைத் தான் இங்கு தி.மு.க.வின் சார்பிலே, எங்கள் கட்சியின் சார்பிலே நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். (மணியடிக்கப்பட்டது).

நான் பேசி இருப்பது 10 நிமிடம் தான். இடையிலே வாதப் பிரதிவாதங்களெல்லாம் நடந்தன.

1973 ஆகஸ்ட் 7] [திரு. செ. கந்தப்பன்]

தலைவர் அவர்களே, இன்றைரு முக்கியமான கருத்து இங்கே சொல்லப்பட்டது, வேலையில்லாத் திண்டாட்டம். ஆனல் அதுபற்றி மேம்போக்காக சுட்டிக்காட்டிப் பேசினர்கள். நம்முடைய நாட்டிலே மட்டும் அல்ல, எல்லா நாடுகளிலும் பொருளாதார வளப்பம், குறிப்பாக தொழில் வளர்ச்சியின் மூலம் தான் ஆக்கப் படுகிறது. அப்பொழுதுதான் வேலையில்லாத் திண்டாட்டம் மட்டுமல்ல, வேலையிருந்தாலும் பற்றுக்குறை இருக்கிற நிலையை நாட்டை விட்டு அகற்ற முடியும் என்பது இன்றைக்கிருக்கிற நிலைமை.

இன்றைக்கு அரசியல் சட்டத்தை மாற்ற வேண்டுமென்ற முறையில், தொழில் பெருக்கத்திற்கான அளவிலே அதிகாரம் பரவலாக்கப்பட வேண்டுமென்று நான் சார்ந்திருக்கிற தி.மு.க.வின் சார்பில் அடிக்கடி சொல்லப்படுகிறது என்றாலும் கூட., அதைக்கூட விட்டுவிட்டு ஏற்கெனவே இருக்கிற அந்தச் சட்டத்திலே எந்த அளவுக்கு விதிமுறைகள், தொழில் வளர்ச்சிக்கு மாநிலம் எந்த அளவுக்குச் செய்யவேண்டுமென்று எதிர்பார்க்கப் பட்டதோ அதைக் கூடக் கெடுத்து, மெள்ள மெள்ள மாநில அரசு வளர்ச்சியைப் பெற முடியாத சூழ்நிலையை மத்திய அரசு கொண்டு வந்திருக்கிறது. குறிப்பிட்டு தமிழகத்தில் மட்டுமல்ல, அகில இந்தியாவிலேயே தொழில் வளர்ச்சியினுடைய முடக்கத்திற்கு முக்கியமான காரணம் மைய அரசின் கொள்கை என்று பல பெரியவர்கள், அரசியலுக்கு அப்பாலே இருக்கிற பெரியவர்கள் சொல்லியிருப்பதைப்பற்றி நான் இங்கே சொல்ல விரும்புகிறேன்.

பி.ப. 1-00

பால்கிவாலா பற்றி மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் பொன்னப்ப நாடார் அவர்களுக்குத் தெரியும் என்று நினைக்கிறேன். இந்திய நாட்டிலே உள்ள சிறந்த கான்ஸ்டிட்யூஷனல் லாயர்களில் அவரும் ஒருவர். அவர் தெரிவித்த கருத்துக்களை இங்கே எடுத்துக் காட்டுவது நலம் என்று கருதுகிறேன். மெயில் பத்திரிக்கையில் ஏப்ரல் மாதம் 26-ஆம் நாளன்று வெளிவந்த கட்டுரையிலிருந்து ஒன்றிரண்டு வரிகளைப் படித்துக்காட்ட விரும்புகிறேன்

'Over-centralisation has been one of the main reasons for our poor rate of economic growth. The Centre should step in when

a State does not allow industries to grow and not veto when the State wants to develop industries'

என்று கூறியிருக்கிறார். அவர் பிறகு அரசியல் சட்டத்தை எடுத்து வைத்துக் கொண்டு மாநிலப் பட்டியல், மத்தியப் பட்டியல், இரண்டுக்கும் இடையிலே உள்ள பட்டியல் என்று ஆராய்ந்து கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார். கல்வித் துறையிலே உயர் தரக் கல்வி என்ற முறையிலே மத்திய அரசுக்கு சிறு அதிகாரம் எவ்வாறு இருக்கிறதோ, அதைப்போன்று தொழில் துறையிலே தொழில்களை இணைக்கக்கூடிய முறையில் ஒரு குறுகிய எல்லைக் கோட்டிலே சிறிய அதிகாரம் மத்திய அரசுக்கு வழங்கப் பட்டிருப்பதால் நம்முடைய அரசியல் சட்டம் பிரகடனப்படுத்தப் பட்ட பிறகு மெள்ள மெள்ள அன்னியச் செலாவணியைக் கட்டுப் படுத்துகின்ற உரிமை பெற்று அது முழுவதையும் பயன்படுத்த எப்படி மத்திய அரசு காரணமாக இருந்து இருக்கிறது என்பதை அவர்கள் நல்ல முறையிலே வாதிட்டு இருக்கிறார்கள். இப்படிப் பட்ட நிலைமைகள் எல்லாம் செம்மைப்படவேண்டுமென்ற முறை யிலேதான் நம்முடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் அடிக்கடி இந்தச் சட்ட மன்றத்திலும் சரி, வெளியிலேயும் சரி கருத்துக்களை எடுத்து வைக்கிறார்கள். ஆனால் அம்மையார் அவர்கள் அதைப் புரிந்து கொள்ளாமல், பிரிவினைவாதிகள் என்று பேசி திசை திருப்ப முயல்கிறார்கள். நாங்கள் எடுத்து வைக்கின்ற வாதங்களினுடைய அடித்தளங்களை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும் ....

**திருமதி த. ந. அனந்தநாயகி.** ஒரு கோடி ரூபாய்க்கு மேல் அன்னியச் செலாவணி தேவையில்லாமல் இருந்தால் தொழில்களை நீங்களே துவக்கலாம் என்று இருக்கிறதே, அந்த வகையிலே நீங்கள் எத்தனைத் தொழில்கள் ஆரம்பித்திருக்கிறீர்கள், எத்தனை பேர்களுக்கு அவை மூலம் வேலை கொடுத்திருக்கிறீர்கள், எத்தனை பேர்களுக்குத் தொழில்களைத் துவங்குவதற்கு லீசென்ஸ்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்ற விவரங்களை அவர்கள் தயவு செய்து சொல்வார்களானால் புரிந்துகொள்ளலாம்.

**திரு. செ. கந்தப்பன்:** நிரம்பத் தொழில்கள் இந்த மாநிலத்திலே தொடங்கப்பட்டிருக்கின்றன என்பதை அம்மையார் அவர்கள் உணருவார்கள் என்று நம்புகிறேன். அவற்றையெல்லாம் விளக்குவதற்கு நேரமும் காலமும் இருக்குமானால் சொல்லலாம்.

1973 ஆகஸ்ட் 7]

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** அம்மையார் அவர்கள் சொல்கின்ற வாதமே தவறான ஒரு வாதமாகும். ஒரு கோடி ரூபாய்க்குக் குறைந்தவை எல்லாம் என்று தவறுகச் சொல்கிறார்கள். வெளிநாட்டுச் செலாவணியை அனுமதிப்பது மட்டுமல்ல அவர்கள் அதிகாரம், அவர்கள் அனுமதியில்லாமல் ராமெட் மெரியல்ஸ் இம்போர்ட் பண்ணக்கூடாது; அது மாத்திரமல்ல, வெளி நாடுகளோடு கொலாப்ரேஷன் வைத்துக்கொண்டு தொழில் நடத்த வேண்டுமானலும் அதற்கான உரிமை பெறவேண்டுமானல்கூட அந்த அதிகாரத்தையும் அவர்கள்தான் வைத்துக்கொண்டிருக்கிறார்கள், இத்தனைக்கும் உட்பட்டுத்தான் ஏதாவது இருந்தால் நாம் செய்யலாம். அப்படிப்பார்க்கும்போது சிறு தொழில்கள் தான் நாம் செய்யலாம். அது இந்த அரசு வந்ததற்குப் பிறகு மூன்று மடங்கு அதிகரித்து இருக்கிறது.

**திரு. செ. கந்தப்பன்:** ஸ்தாபன காங்கிரஸ் கட்சியின் தலைவர் திரு. அசோக் மேத்தா அவர்கள் தமிழகம் வந்திருந்தபொழுது ஒன்று தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். அதை மெயில் பத்திரிக்கையில் 'Centre should shed some powers' என்ற தலைப்பிலும், எக்ஸ்பிரஸ் பத்திரிக்கையில் 'States are losing their individuality' என்ற தலைப்பிலும் வெளியிட்டு இருக்கிறார்கள். மிக அழகாக, மாநில அரசுகள் ஆபீஸ் பையன்களாகிக் கொண்டிருக்கிறார்கள் என்ற முறையிலே சொல்லியிருக்கிறார்கள். அவர் ஒரு அரசியல் பொருளாதார மேதை என்பதை நாம் எல்லாம் அறிவோம். எந்த அளவிற்கு அவர்கள் சொல்லியிருக்கிறார்கள் என்பதை நான் நம்பிக்கையின்மைத் தீர்மானம் கொண்டு வந்த நண்பர்களுக்கும் கொள்கை மறுப்புத் தீர்மானம் கொண்டு வந்தவர்களுக்கும் பதிலுரையாக வைக்கிறேன்.

மாநிலத்திலே நடைபெறுகின்ற நடைமுறைகள், அதிலே தவறுகள் இருக்குமானல் அவற்றைச் சுட்டிக்காட்டினல் பரவாயில்லை. மிக மிகக் குறிப்பாக சிந்தன் பற்றிச் சொல்லப்பட்டது. பொதுவாக, தலைவர் அவர்களே, நம்முடைய தமிழ்நாட்டிலே திராவிட முன்னேற்றக் கழகம் ஆளுகின்ற கட்சியாக வந்தபிறகு எப்படிப்பட்ட பிரச்சாரம், எப்படிப்பட்ட அரசியல் சூழ்நிலைகள் இந்த நாட்டிலே உண்டாக்கப்படுகின்றன என்று எடுத்துக்காட்டி விட்டு முடித்துக்கொள்ளலாம் என்று கருதுகிறேன்.

[திரு. செ. கந்தப்பன்] [1973 ஆகஸ்ட் 7

இந்த நாட்டிலே விலைவாசிப் பிரச்னையைப் பற்றி போராட்டம் நடத்தவேண்டுமென்று புதுக் கட்சியைச் சேர்ந்த தலைவர் ஒருவர் அறிவித்துப் பேசியிருப்பதைப் பார்க்கவேண்டும். இந்தப் பிரச்னைக்கு ஆகஸ்டு மாதம் போராட்டம் நடத்துவதுபற்றி முடிவு செய்வோம், தோழமைக் கட்சிகளைச் சந்தித்துப் பேசுவோம். ஒரு பெரிய பேரணி நடத்தப்போகிறோம். அந்தப் பேரணியிலே பெண்கள்தான் அதிகமான அளவில் கலந்துகொள்வார்கள். அவர்கள் கையிலே என்ன எடுத்து வருவார்கள் என்பதைச் சொல்லவும் வேண்டுமா என்ற முறையிலே வெளியிலே பேசிவிட்டு இங்கே வந்து டாக்டர் கலைஞருக்கு உபதேசம் செய்வது என்ற முறையை மேற்கொள்கிறார்கள். தலைவர் அவர்களே, நான் ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன், எங்களுடைய தலைவர்கள் எங்களைக் கொஞ்சம் அதிகமாகக் கட்டுப்படுத்தி வைத்திருக்கிறார்கள். இன்று இந்த செம்மையான நிர்வாகத்தை நீங்கள் பாராட்டாவிட்டாலும் அருள்கூர்ந்து தமிழ்மக்கள் நலன் கருதி திட்டாமலாவது இருங்கள் என்று கேட்டுக்கொண்டு

"நல்லது செய்தல் ஆற்றிராயினும்
அல்லவை செய்தல் ஓம்புமின்"

என்ற சங்க கால வரிகளை அவர்களுக்கு நினைவுறுத்தி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு டாக்டர் கருணாநிதி தலைமையிலே இருக்கின்ற அமைச்சரவை மீது இந்தப் பேரவைக்கு நம்பிக்கை இல்லை என்ற தீர்மானத்தை ஆதரித்து எனது கட்சியின் சார்பாக சில வார்த்தைகளைச் சொல்ல விரும்பு கிறேன்.

தமிழகத்திலே ஏற்பட்டிருக்கிற உணவுப் பஞ்சம், பொருளா தார நெருக்கடி, சமுதாயத்திலே ஏற்பட்டிருக்கிற சீர்கேடுகள், இத்தனைக்கும் தமிழக அரசின் கொள்கைக் குழப்பமே காரணம் என்று முதன்முதலாக நான் குற்றஞ்சாட்ட விரும்புகிறேன். தி.மு.க. அரசானது சமதர்ம சமுதாயத்தைத் தனது கொள்கை யாக ஏற்றுக்கொண்டிருந்தாலும்கூட இந்தக் கொள்கையிலே எந்த அளவிற்கு நம்பிக்கை வைத்திருக்கிறது, இந்தக் கொள்கையிலே எந்த அளவிற்கு செயலாற்ற விழைகிறது என்று பார்க்கும் பொழுது, சமதர்ம சமுதாயத்திற்கு அடிப்படையாக உள்ள

1973 ஆகஸ்ட் 7] [திரு. ஜே. ஜேம்ஸ்]

நாட்டுமக்களுக்கு உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க இடமும் அளிக்கவேண்டுமென்ற குறைந்த பட்சத் தேவைகளைச் செய்வதற்குக்கூட இந்த அரசாங்கம் எள்ளளவும் முயற்சி எடுக்க வில்லை என்ற குற்றச்சாட்டைக் கூற விரும்புகிறேன்.

தமிழகத்திலே இப்பொழுது இருக்கிற உணவுப் பிரச்சினையைப் பார்க்கும்பொழுது, நம்முடைய மாநிலம் தன்னிறைவு பெற்றிருக் கிறது என்பது மட்டுமல்ல, பல்வேறு அண்டை மாநிலங்களுக்கு உணவு ஏற்றுமதி செய்கிற நிலைமையைப் பெற்றிருக்கிறோம் என்று முதலமைச்சர் அவர்கள் பல இடங்களிலே கூறியிருக்கிறார்களே, நம்முடைய மாநிலத்திலே உள்ள பல மாவட்டங்களிலே அரிசி ரூபாய் ஓ-க்கு விற்கிறது என்று சொன்னால், மக்களுக்குத் தேவை யான அரிசி கிடைக்கவில்லை என்று சொன்னால் இதற்கு யார்மீது குறைசொல்வது என்றே தெரியவில்லை. முதலமைச்சர் அவர்களின் கூற்று தவறு? அல்லது இந்த மாநிலம் உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடையவில்லையா? அல்லது மாநிலத்திலே உற்பத்தி யாகிற உணவு சரியாக விநியோகம் ஆகவில்லையா? அல்லது உணவு இலாகாவிலே உள்ள கோளாறுகள்தான் காரணமா? என்று சிந்திக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். எங்கள் மாவட்டத்திலே உணவுப் பிரச்னை எந்த அளவிற்கு நெருக்கடியை உண்டாக்கியிருக் கிறது என்பதை இந்த மாமன்றமே அறியும். கன்னியாகுமரி மாவட்டத்திலே உள்ள நிலைமையைப்பற்றி இந்த மாமன்றம் மட்டுமல்ல, தமிழகமே அதிர்ச்சியடையக்கூடிய நிலைமை இருப்பதை நான் சொல்லத் தேவையில்லை. அதைப்பற்றி நான் ஏற்கனவே எடுத்துரைத்திருப்பதால் சுருக்கமாக எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்திலே உணவு நெருக்கடி இருக்கிறது. அண்டை மாநிலங்களிலிருந்து அங்கே அரிசி செல்லக்கூடாது என்ற முறையிலே நெல்லையிலே சோதனைச் சாவடிகள் அமைத்து இருக்கிறார்கள். பிற மாவட்டங்களிலிருந்து அரிசி அங்கு செல்வதற்கு வழியில்லை. அரசாங்கம் அந்த மக்களுக்கு உணவு கொடுக்கவில்லை, அதற்கு வழிசெய்யவில்லை. அதற்கு மாறாக கன்னியாகுமரி மாவட்டத்தில் 51 சோதனைச் சாவடிகளை ஏற்படுத்தி எங்கு சென்றாலும் சோதனைச் சாவடிகள் என்ற

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1973 ஆகஸ்ட் 7

நிலைமையை ஏற்படுத்தி ஒரு கிராமத்திலிருந்து இன்னொரு கிராமத்திற்கு அரிசியை எடுத்துச் செல்ல வழியில்லாமல் செயது விட்டதால்தான் இன்றைக்கு அங்கே அரிசிப் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. பஸ்களிலே பயணிகள் பயணம் செய்ய முடியில்லை. அவர்களுடைய மடியைக் காட்டு என்று சொல்லி சோதனைச் சாவடி உத்தியோகஸ்தர்கள் சோதனை செய்து கொண்டிருக்கிறார்கள். மடியில் இருப்பது பணமா அல்லது அரிசியா என்று சோதனை செய்து பார்த்து அனுப்புகிறார்கள். கர்ப்பிணியான பெண் சென்றால்கூட வயிறு தள்ளியிருக்கிறதே என்று அரிசியைத்தான் கடத்திச் செல்கிறார்களா என்று தடவிப்பார்த்துச் சோதனை செய்கிறார்கள். அந்த அளவிற்குச் சோதனைகள் கெடுபிடியாக இருந்தும்கூட அரசாங்கம் என்ன கூறுகிறது என்றால், கேரளத்திற்குத் தாராளமாகக் கடத்திச் சென்றுவிடுகிறார்கள் என்று சொல்கிறார்கள். ஆனால் கன்னியாகுமரி மாவட்டம் ஒரு சோதனைத் தளமாக மாறிவிட்டது. முதலமைச்சரவர்கள், நடை பெறும் போராட்டம் வியாபாரிகளுக்காக நடக்கிறது என்று சொல்கிறார்கள். அவர்கள் இந்த அளவிற்குச் சோதனைச் சாவடிகளை ஏற்படுத்தியும், இந்த அளவிற்குப் போலீஸ் அதிகாரத்தை வைத்திருந்தும், ரெவின்யூ இலாக்கா, உணவு இலாக்கா இவை அத்தனையும் சோதனையை நடத்தியும்கூட கேரளத்திற்குக் கடத்திச் சென்றுவிடுகிறார்கள் என்று சொன்னால் நிச்சயமாக அது இந்த அரசாங்கத்தின் கோளாறு என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

நீங்கள் பத்திரிகைகளில் பார்த்திருப்பீர்கள். கன்னியாகுமரி ஜில்லாவில் உணவுப் பஞ்சத்தினால் பட்டினிச்சாவு ஏற்பட்டிருக்கிறது என்று இந்த மாநிலத்திலுள்ள அத்தனை மக்களும் அறிந்திருக்கிறார்கள். கழிந்த மாதம் 18-ஆம் தேதியன்று, நாகர் கோயிலில் ஒரு பெண்மணி இரண்டு நாட்கள் தன்னுடைய வீட்டிலே அரிசியில்லாமல் பட்டினி கிடந்து, குழந்தைகளுக்கும் ஆகாரம் தர முடியாமல் இருந்திருக்கிறார்கள். அதன்பிறகு கடையிலே சென்று அரிசி வாங்குவதற்கு முற்படுகிறார்கள். ஆனால் அங்கே அரிசி கிடக்காததால், இனி வீட்டிற்குச் சென்றால் ஏற்கெனவே இரண்டு நாட்களாகப் பட்டினி கிடக்கும் குழந்தைகளுக்கு ஆகாரம் கொடுப்பதற்கு வழியில்லை என்று துயர

1973 ஆகஸ்ட் 7] [திரு. ஜே. ஜேம்ஸ்]

முற்றவர்களாக ஆகி, அரிசி வாங்க வைத்திருந்த பணத்திற்கு பாலிடால் வாங்கி உண்டு தன்னுடைய உயிரை மாய்த்துக் கொண்டார்கள். தன்னுடைய உயிரை இந்த அரசுக்கு அர்ப் பணித்து விட்டார்கள் என்று கூற விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அந்த அம்மையாரின் பெயர் என்ன, அதுபற்றிய விவரங்களைச் சொன்னால் அரசு உடனடியாக விசாரிக்கும்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** நாகர்கோயில் நகரசபையில் 29-வது வார்டைச் சேர்ந்தவர்கள், பெயர்கூட என் ஞாபகத்தில் இருந்தது, இப்பொழுது மறந்துவிட்டது. ஆனால் அதை முதலமைச்சரிடம் நிச்சயமாகக் கொடுக்க முடியும் என்ற உறுதிமொழியைத் தருகிறேன். பெயர்கூட பத்திரிகையில் வந்திருந்தது. அப்படி வந்திருந்ததால் ஒரு வேளை இந்தப் பிரச்னையை. . . .

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** தலைவரவர்களே, அங்கே பாலிடால் சாப்பிட்டது, செத்தது உண்மை. ஆனால் அவர்கள் அரிசி இல்லை என்ற காரணத்தினால் செத்தார்களா அல்லது வீட்டிலே கோபித்துக் கொண்டதால் செத்தார்களா என்பதற்கு என்ன ஆதாரம் இருக்கிறது?

**திரு. ஜே. ஜேம்ஸ்:** ரேஷன் கார்டு இருந்தது அல்லவா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** அதைப்பற்றி எனக்குத் தெரியாது. அவர்கள் இறந்தது வீட்டிலே சண்டை போட்டுக்கொண்டு கோபத்தினால் என்று போலீஸ் ரிப்போர்ட் இருக்கிறது. எனவே, பட்டினிச் சாவு என்று எதோ ஒரு சாவைப்பற்றிப் பேசுவது பொருத்தமாக இல்லை.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** அந்தச் செய்தியெல்லாம் பத்திரிகையிலே வந்திருந்தது. ஸ்டாண்டர்ட் பேப்பர்களில்கூட வந்திருந்தது.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** ஸ்டாண்டர்ட் பேப் பர்கள் என்றால் எவையெவை?

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தினமணி, இன்டியன் எக்ஸ்பிரஸ்.

[1973 ஆகஸ்ட் 7

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தினமணி, இண்டியன் எக்ஸ்பிரஸ்தான் ஸ்டாண்டர்ட் பத்திரிகை என்று சொன்னதற்கு நன்றி.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** இந்த நாட்டிலே பலவிதமான பத்திரிகைகள் இருக்கின்றன. ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் நடத்தும் பத்திரிகைகளை எதிர்க்கட்சிகள் குறைவாகச் சொல்வதும், எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் நடத்தும் பத்திரிகைகளை ஆளுங்கட்சி குறைவாகச் சொல்வதும் வழக்கம். இருந்தாலும் எல்லோரும் ஒப்புக்கொள்ளும் சில பத்திரிகைள் இருப்பதால் அதைச் சுட்டிக்காட்டினேன்.

ஆகவே, இந்த நிலையில் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு மற்ற மாவட்டங்களிலிருந்து அரிசி கொண்டுபோகக் கூடாது என்ற கொள்கையை இந்த அரசாங்கம் வைத்திருந்தால் அந்த மாவட்டத்திலுள்ள மக்களுக்குப் போதுமான அரிசியை வினியோகிப்பதற்கு இந்த அரசு கடமைப்பட்டிருக்கிறது. அந்தக் கடமையிலிருந்து இந்த அரசு தவறி விட்டது, ஆகவேதான் இந்த மாவட்டத்தில் அரிசிப் பஞ்சம் ஏற்பட்டு, பட்டினிச் சாவும் ஏற்பட்டது என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அதோடு, கன்னியாகுமரி மாவட்டத்திற்கு மற்ற மாவட்டங்களிலிருந்து அரிசி கொண்டுபோகக் கூடாது என்றால் கன்னியாகுமரி மாவட்டத்தில் உற்பத்தியாகும் இரப்பர் போன்ற பொருட்களை கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து மற்ற மாவட்டங்களுக்கு எப்படி எடுத்துச் செல்ல முடியும்? உண்மையிலேயே பலாத்காரமாக எடுத்துச்சென்றால்கூட அது நியாயமா, தர்மமா என்று கேட்க ஆசைப்படுகிறேன். இந்த அளவிற்கு இந்த உணவுப்பொருட்களை, அரிசியை ஏழைகளுக்காக விநியோகிக்க சக்தியற்ற அரசாங்கம் நிச்சயமாக இந்த நாட்டை ஆளத் தகுதியில்லை என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, இந்த அளவிற்குப் பட்டினிச் சாவுகள் ஏற்பட்ட பிறகு அந்த மாவட்ட மக்கள், ஆளுந்தரப்புக் கட்சிக் கோழர்களும் என்றைக்கோ இந்தப் பிரச்னையை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வர வேண்டுமென்ற நிர்ப்பந்தத்தில்

1973 ஆகஸ்ட் 7] [திரு. ஜே. ஜேம்ஸ்]

போராட்டத்தைத் துவங்கினர்கள் என்றால் முதலமைச்சர் " அதை நான் கண்டிப்பாக அடக்கிவிடுவேன் " என்று ஆணவத்தோடு கூறிக்கொண்டு இருக்கிறார்கள். அந்தப் போராட்டம், நான்-வையலெண்டாக கடந்த 20 நாட்களாக நடந்துகொண்டிருக்கிறது. ஜனநாயகத்தில் இதைவிட பிரச்னைகளைச் சொல்வதற்கு வேறு மார்க்கம் இருக்கிறதா என்று முதலமைச்சரவர்களைக் கேட்க விரும்புகிறேன். பெரும் பிரச்னை என்று அரசாங்கமே ஏற்றுக் கொள்ளும் பிரச்னையாக இந்தப் பிரச்னையிருக்கும்பொழுது இந்த முறையில் போராட்டம் நடத்துவதல்லாமல் வேறு எந்த முறையிலே போராட்டத்தை நடத்த இயலும் என்று கேட்க விரும்புகிறேன். கடந்த பல நாட்களாக இந்த மாமன்றத்தில் இருக்கும் அனைத்துச் சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், டாக்டர்கள், இன்னும் வழக்கறிஞர்கள் கைதாக்கப் பட்டார்கள். இன்னும்கூட கழிந்த 10, 12 நாட்களாக பல வழக்கறிஞர்களும், டாக்டர்களும் இந்த அரசாங்கத்தால் கைது செய்யப்பட்டு சிறையில் வாடுகிறார்கள் என்று சொன்னால் அவர்கள் வாடுவது எதற்காக? இந்த நாட்டு மக்கள், அந்த மாவட்டத்து மக்கள் பட்டினியாக இருக்கிறார்கள், அவர்களுக்கு அரிசி வேண்டுமென்று கேட்டு போராட்டம் நடத்தியது ஒரு குற்றமா? அப்படியென்றால் அந்த மாவட்ட மக்களுக்கு அரிசி கொடுக்காத இந்த அரசாங்கம் எந்த அளவிற்குக் குற்றத்தைச் செய்திருக்கிறது? ஆகவே குற்றவாளிகள் அல்லாத நிரபராதிகள் இன்றைக்குச் சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். சிறையிலே இருக்க வேண்டியவர்கள் வெளியிலே இருக்கிறார்கள். வெளியிலே இருக்கவேண்டியவர்கள் சிறையிலே இருக்கிறார்கள். ஆகவே, நீதியோடு, நேர்மையோடு இந்த அரசாங்கம் ஆளவில்லை, ஆகவே தொடர்ந்து ஆளத் தகுதியில்லை என்ற குற்றச்சாட்டைக் கூற விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இந்த ஆளுந் தேர்தலை எந்த முறையில் நடத்தி இருக்கிறது என்பதை நான் இந்த மாமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். மேலூர் வடக்கு சட்டமன்றத் தொகுதியில் நடைபெற்ற தேர்தலைப்பற்றியும், அது சம்பந்தமாக மேக்குமன்றத்தில் வந்த தீர்ப்பைப்பற்றியும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மேலூர் வடக்கு சட்டமன்றத் தொகுதி தேர்தலின்

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1973 ஆகஸ்ட் 7

போது நடைபெற்ற கவண்டிங்கின்பொழுது காட்டிலாக்கா அமைச்சர் மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் அவர்கள் கவண்டிங் செய்த இடத்திற்குச் சென்றது சட்ட விரோதமானது, அப்படிச் சட்டவிரோதமாக அவர் அங்கு சென்றதால் அந்த எண்ணிக்கை யானது விபரீதமாக வந்திருக்கிறது என்று இந்த மாநிலத்தின் உயர்நீதிமன்றமும், இந்தியாவின் சுப்ரீம் கோர்ட்டும் தீர்ப்பளித் திருக்கிறது. ஆனால் இன்று வரையிலே நீதிமன்றத்தின் அந்தத் தீர்ப்புக்கு இந்த அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக் கிறது? அந்தத் தவறை மாண்புமிகு காட்டிலாக்கா அமைச்சர் அவர்கள் செய்தார் என்றால் நிச்சயமாக அன்னர் இந்த நாட்டை....

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : இந்த விஷயம் பற்றி ஏற்கனவே இங்கே வாதம் செய்யப்பட்டிருக்கிறது. அங்கத்தினர் அவர்களே கருத்தைச் சொல்லலாம். சுப்ரீம் கோர்ட்டின் கருத்தை வேண்டுமானாலும் விட்டுவிடலாம். விதிகளில், ஒரு இடத்தில் தேர்தல் முடிந்து அந்த வாக்குகளை எண்ணும்பொழுது சம்பந்தப்படாதவர்கள் வரக்கூடாது என்று விதியிருக்கிறது. ஆனால் அங்கே நடந்தது, அதே இடத்திலேதான் திரு. ஓ. பி. இராமன் தேர்தலுக்கான வாக்கு எண்ணிக்கையும் நடைபெற்றது. அவர்தான் சர்ட்டிபிகேட் கொடுக்கவேண்டும். அங்கே ஏற்பட்டது இதுவரை விதிகளில் இல்லாத சூழ்நிலை. பிறகு விதியை மாற்ற வேண்டும். குற்றச்சாட்டின்படி, அவர்கள் சென்ற காரணத்தினால் "ஓட்டுக்கள், எனக்குக் குறைந்துவிட்டது" என்பது வாதம். ஓட்டுக்கள் குறைந்ததா அல்லது கூடியதா? அந்த வாக்குகளை எண்ணியபிறகு திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் 75 வாக்குகள் அதிகமாகப் பெற்று வெற்றி பெற்றிருக்கிறார்கள். ஆனால் சுப்ரீம் கோர்ட் அந்த வாக்குகளை எடுக்காமல், குறைந்த வாக்குகளைப் பெற்றவரை இந்த மன்றத்திற்கு அனுப்ப வேண்டுமென்று கூறியது. ஆகவே, அமைச்சர் போனதால் ஏதாவது ஆபத்து ஏற்பட்டதா என்று கூறவேண்டும்.

**திருமதி க. ந. அனந்தநாயகி** : சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு தவறு என்று சொல்லுகிறார்களா?

1973 ஆகஸ்டு 7]

திரு. ஜே. ஜேம்ஸ்: வழக்கில் கட்சிகளின் வாதத்தைப் பற்றி விவாதிக்க வேண்டிய தேவையில்லை. விவாதிக்க முற்படவும் இல்லை. உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பின் ஒரு பகுதியை மட்டும் தலைவர் அவர்கள் அனுமதி பெற்று இந்த மன்றத்தில் படிக்கலாம் என்று நினைக்கிறேன்.

"The unlawful entry into the Counting Hall when the counting was going on caused dislocation and disturbance and it was likely to have affected the accuracy in counting. . . . "

என்று தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. இந்த அரசாங்கம். . . .

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தவறு நடந்திருப்பதாகச் சொல்லுகிறார்கள். தவறு நடந்தது என்று திரும்பவும் எண்ணியதற்குப் பிறகும் தி.மு.க. அதிகமான வாக்குகள் பெற்றதா இல்லையா?

திரு. ஜே. ஜேம்ஸ்: சட்ட அமைச்சர் வாதத்தைக் கேட்டு, வியப்படைகிறேன். நான் நீதிமன்றத்தின் தீர்ப்பைப் படித்தேன். நீதிமன்றத்தின் தீர்ப்பு, சரியா, தப்பா என்று விவாதிப்பதற்கு நமக்கு உரிமை இல்லை என்று சட்டமன்றத்தில் பல முறை தீர்ப்புக் கூறப்பட்டிருக்கிறது என்பதைத் தலைவர் அவர்களே அறிவார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நீதிமன்றத்தின் தீர்ப்பின்படி திரு. ஓ. பி. இராமன் போனதால் தவறு ஏற்பட்டது என்று கூறி மீண்டும் வாக்குகள் எண்ணப்பட்டன. அப்படி வாக்குகள் எண்ணப்பட்டபோது தி.மு.க. வேட்பாளருக்குக் கிடைத்த வாக்குகளை விட மன்றத்தில் வந்து அமர்ந்திருக்கிற காங்கிரஸ் உறுப்பினர் அதிக வாக்குகள் பெற்று வந்திருக்கிறார?

THIRU R. PONNAPPA NADAR: Sir, a legal question has been posed by the Hon. Chief Minister as well as the Hon. Law Minister. Now that a decision has been rendered by the Election Tribunal and that has been upheld by the Supreme Court, we have to accept it. The observations contained in the judgment have been read for reference before this House. We shall not canvass correctness or otherwise of the ruling, except in the process known to law. So far as the judgment is concerned, the Supreme Court

[Thiru R. Ponnappa Nadar] [1973 ஆகஸ்ட் 7

has upheld the judgment of the Election Tribunal and there is nothing wrong. It is improper of this House to say that because of the counting that the candidate who secured the lesser number of votes has come here, as such sort of insinuation against the judiciary is not fair and becoming on the part of the Government. The decision has been rendered and that has been challenged in Appeal and it has now become final. It is not open to raise it in another form. I once again repeat before this House that any-other argument is beside the point and is not material and it does not reserve the consideration of this House.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு எல்லாரும் தலைபணியத்தான் வேண்டும். அதை யாரும் குறைத்துப் பேசவில்லை. ஆனால் நிலைமை என்னவென்றால் மறுபடி வோட்டுக்களை எண்ணிப் பார்த்த பிறகும் தி.மு.க. வேட்பாளரை விட இங்கே உறுப்பினராக வந்து உட்கார்ந்திருப்பவர் அதிகமான வாக்குகள் பெற்று வந்திருக்கிறாரா என்பதுதான் கேள்வி.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே கூறியதுபோல் நீதிமன்றத்தின் தீர்ப்பு குறித்து விவாதம் தேவையில்லை. காட்டிலாகா அமைச்சர் மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் அவர்கள் கவுன்டிங் நடந்த இடத்திற்குச் சென்றது—

that is unlawful as per the election rules and it has been found so by the High Court. It is an admitted fact that he was not called for there as per the election rules when counting is going on, as only certain persons are permitted to be in, whereas in this case, the Forest Minister who has no duty, who is not entitled to get into the counting hall under the rules, got into the hall which is unlawful. That is the finding of the High Court. What I submit before this House is this. The Minister who has committed an unlawful act when counting was going on is still in the cabinet. Is it proper and should he not resign his Ministership when such a judgment has been pronounced?

அதுமட்டுமல்ல. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மதுரையில் 22—4—1973-ம் தேதியன்று நிருபர்களைப் பேட்டி கண்டார்கள். நிருபர்கள் 'சுப்ரீம் கோர்ட்டில் இந்த மூறையில்

19; 3 ஆகஸ்ட் 7] [திரு. ஜே. ஜேம்ஸ்]

தீர்ப்பு வந்திருக்கிறதே, திரு. ஓ. பி. இராமன் அவர்கள் பதவி விலக வேண்டாமா, முதலமைச்சர் அவர்கள் அவரைப் பதவியிலிருந்து நீக்க வேண்டாமா?' என்று கேட்டதற்கு முதலமைச்சர் அவர்கள் பதிலைப் பார்த்தால் தீர்ப்பமாக விசித்திரமாக இருக்கிறது. முதலமைச்சர் அவர்கள் "ஓ. பி. இராமன் தவறு செய்தாரா இல்லையா என்பது எனக்குத் தெரியும். ஆகவே, அவரை நீக்க வேண்டிய அவசியம் இல்லை" என்று கூறியிருக்கிறார்.

ஆகவே, முதலமைச்சர் அவர்களுடைய கருத்து என்ன வென்றால், இந்திய உயர்நீதிமன்றம் எத்த அளவுக்குக் கூறியிருந்தாலும் கூட திரு. ஓ. பி. இராமன் தவறு செய்யவில்லை, சட்ட விரோதமாக அந்த ஹாலுக்குள் சென்றது தவறு இல்லை என்று இன்னும் முதலமைச்சர் அவர்கள் சாதிக்கிறார் என்று சொன்னால் உண்மையிலேயே வியப்படைகிறேன். எந்த அளவுக்கு முதலமைச்சர் அவர்களும், இந்த அரசாங்கமும் நீதிமன்றத்தின் தீர்ப்பை மதிக்கிறது என்பதற்கு இது எடுத்துக்காட்டாகும். உண்மையிலேயே முதலமைச்சர் அவர்கள் சட்டத்தை மதித்திருந்தால், நீதிமன்றத்தை மதித்திருந்தால் திரு. ஓ. பி. இராமன் அவர்களை இந்த மந்திரிசபையில் இருந்து நீக்கி இருக்க வேண்டும். அதற்கு மாறாக அவருக்குப் பாதுகாப்பு கொடுக்கிறார். அதன் ரகசியம் என்னவென்று புரியவில்லை. முதலமைச்சர் அவர்களே நீதிமன்றத்தை மதிக்கவில்லை என்று சொன்னால், சட்டத்தை மதிக்கவில்லை என்று சொன்னால் இந்த நாட்டில் எந்த மனிதன் நீதிமன்றத்தை மதிப்பான்? இந்தச் சட்டத்தை மதிப்பான்? அதனால்தான் இந்த நாட்டில் குழப்பம் இருக்கிறது என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

. இந்த நாட்டில் சட்டம் ஒழுங்கு கெட்டிருக்கும் தில்லை, வன் முறைச் சம்பவங்கள், போலீஸ் அத்துமீறி நடக்கின்ற முறைகளைப் பார்க்கும்போது இது ஒரு ஜனநாயக ஆட்சியா அல்லது ஹிட்லர் ஆட்சியா என்று சந்தேகப்பட வேண்டியிருக்கிறது.

பெரியகுப்பத்தில் கழிந்த மே மாதம் நடந்த சம்பவங்களைப் பார்க்கும்போது இது நிச்சயமாக ஜனநாயக நாட்டிலே நடக்கின்ற நிகழ்ச்சிகளா என்று மக்கள் சந்தேகிக்கிறார்கள். அரசியல்

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1973 ஆகஸ்ட் 7

காழ்ப்புணர்ச்சி காரணமாகத் திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களுக்கும், காங்கிரஸ் கட்சித் தோழர்களுக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது. இந்தக் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டவுடன் அங்கிருக்கின்ற போலீஸ்....

திரு. சி. ஆறுமுகம்: பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு காங்கிரஸ் கட்சி உறுப்பினர் பேசும்போது குறுக்கிட வேண்டுமென்பதற்காகக் குறுக்கிடவில்லை. அவர்கள் அரசியல் காழ்ப்புணர்ச்சி என்று சொன்னார்கள். அதற்கு அறவே அங்கு இடம் இல்லை என்பதைத் தொகுதி உறுப்பினர் என்ற முறையில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: கழிந்த மே மாதம் பெரியகுப்பத்தில் போலீசார், குற்றம் சம்பந்தமாக ஆண்களைத் தேடிச் சென்றார்கள். ஆண்கள் வீடுகளில் இல்லாமல் ஒளிந்து கொண்ட காரணத்தால் பெண்களைக் கைது செய்து நிர்வாணமாக ஜெயிலில் நிறுத்தி வைத்து, மணலில் நிறுத்தி வைத்து துன்புறுத்தி இருக்கிறார்கள் என்பது எல்லாப் பத்திரிகைகளிலும் வந்தது மட்டுமல்ல, நேரடியாக அந்தக் கிராமத்திற்குச் சென்று அந்தப் பெண்களைக் கேட்டும் அறிந்து வந்திருக்கிறேன்.

திரு. என். கணபதி: பாயின்ட் ஆப் ஆர்டர் சார். பெரிய குப்பம் சம்பவம் பற்றி விசாரணைக் கமிஷன் மூலம் விசாரணை நடந்து கொண்டிருக்கிறது. பெரியகுப்பத்தில் நடைபெற்ற சம்பவங்கள் பற்றியும், நேரடியாகச் சென்று விசாரித்தேன் என்றும் சொல்லுவது கமிஷன் முடிவைப் பாதிக்காதா, அப்படிப் பேசலாமா?

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, it is not a judicial enquiry, but it is only a departmental enquiry. Therefore we are at liberty to speak about the case. I do not think we can be restricted by that.

THIRU N. GANAPATHY: Whatever be the nature of the enquiry, whether it is judicial or otherwise, when a commission of enquiry has been set up, the case should not be spoken about in the House and that should not be raised here.

1973 ஆகஸ்ட் 7]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜேம்ஸ் அவர்கள் விவாதங்களுக்குள் நுழையவில்லை என்று சொன்னார்கள்....

**திரு. ஜே. ஜேம்ஸ்:** இதற்கு முன்னதாக இதே போன்ற பிரச்சினை எழுப்பப்பட்டு ஜுடிஷியல் என்குயரியாக இல்லாமல் இருந்தால் அதுபற்றி விரிவாகப் பேசலாம் என்று ரூலிங் கொடுக்கப்பட்டிருக்கிறது. பெரியகுப்பம் சம்பவங்கள் பற்றி ஜுடிஷியல் என்குயரி நடைபெறவில்லை. ஆர்.டி.ஓ. தான் விசாரிக்கிறார். இது சப்-ஜுடிஸ் அல்ல என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜேம்ஸ் அவர்கள் நாளைக்குத் தொடர்ந்து பேசலாம்.

பேரவை நிகழ்ச்சிகள் இன்று இத்துடன் முடிவுற்று மீண்டும் நாளைக் காலை 9 மணி அளவில் பேரவை கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-30 மணியளவில் ஒத்தி வைக்கப் பட்டது.

## (7) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

96. Notification issued with G.O. Ms. No. 1077, Rural Development and Local Administration, dated the 30th May 1973 in regard to extension of term of office of the members of the Tamil Nadu Khadi and Village Industries Board for a further period of one month from the 3rd June 1973. [Laid on the Table of the House under section 29 (3) of the Tamil Nadu Khadi and Village Industries Board Act, 1959 (Tamil Nadu Act 18 of 1959).].

97. Notification issued with G.O. Ms. No. 1067, Public (Services) dated the 11th April 1973 in regard to an amendment to the Tamil Nadu Public Service Commission Regulations, 1954 for inclusion of the post of Health Education Officer in the State Family Planning Bureau in Tamil Nadu Public Health Subordinate Service within the Commissions purview. [(Laid on the Table of the House under Article 320 (5) of the Constitution of India).]